அக்டோபர் 2025

# ஞானம்

கலை இலக்கியச் சஞ்சிகை



# ஞானம்

கலை இலக்கியச் சஞ்சிகை

வெள்ளத்தின் பெருக்கைப்போல் கலைப்பெருக்கும்
கவிப்பெருக்கும் மேவுமாயின்,
பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம்
விழிபெற்றுப் பதவிகொள்வர்.

305

ஒளி : 26 சுடர் : 05

ஸ்தாபகர், ஆலோசகர் : தி. ஞானசேகரன்

ஆசிரியர் : ஞானம் பாலச்சந்திரன்
இணை ஆசிரியர் : ஞானம் ஞானலக்ஷ்மி
ஓவியர் : கிறிஸ்டி நல்லரெத்தினம்

ஞானம் பதிப்பகம்
3B, 46ஆவது ஒழுங்கை, கொழும்பு 6. இலங்கை
தொலைபேசி: + 94 11 258 6013
+ 94 71 736 2862
மின்னஞ்சல்: editor@gnanam.info

சந்தா விபரம் : இலங்கை Rs. 1500/=
வெளிநாட்டுச் சந்தா $ 100
(தபால் செலவு உட்பட)

வங்கி விபரம்
G. BALACHANDRAN
Acc. No. - 009020348846
Hatton National Bank,
Wellawatha Branch.
Swift Code : HBLILKLX


## இதழினுள்ளே.....

### கவிதைகள்


- முனைவர் கு.சிதம்பரம் 04
- கலாநிதி செ.ஞானராசா 09
- கனகசபாபதி செல்வநேசன் 12
- அகளங்கன் 16
- வேதா. இலங்காதிலகம் 23
- கஸ்ஸாலி அஷ்ஷம்ஸ் 28
- என்.நஜ்முல்ஹுசைன் 31
- குமாரசூரியர் யர்சினி 34
- கலாதினி பா. முருகானந்தன் 39


### சிறுகதைகள்


- அலைமகன் 05
- கீத்தா பரமானந்தன் 10
- மலரன்பன் 14
- ஏ.ஏ.ஹெச்.கே.கோரி 17
- எம்.எம்.எம். இப்றாகீம் 29
- சுந்தரிமணியன் 35


### கட்டுரைகள்


- பேராசிரியர் சபா ஜெயராசா 02
- லத்பான் றோஸின் 32


### நூல் மதிப்புரை


- த. ஜெயசீலன் 25


### பத்தி


- ஞானம் 13
- பேராசிரியர் துரை. மனோகரன் 37
- கலாபூஷணம் கே.பொன்னுத்துரை 39


### வாசகர் பேசுகிறார் 40

பகிர்தலின் மூலம்
விரிவும் ஆழமும் பெறுவது ஞானம் !


- ஞானம் சஞ்சிகையில் பிரசுரமாகும் படைப்புகளின் கருத்துகளுக்கு அவற்றை எழுதிய ஆசிரியர்களே பொறுப்பானவர்கள்.
- புனைபெயரில் எழுதுபவர்கள் தமது சொந்தப் பெயர், தொலைபேசி எண், முகவரி ஆகியவற்றை வேறாக இணைத்தல்வேண்டும்.
- பிரசுரத்திற்குத் தேர்வாகும் படைப்புகளைச் செவ்வைப்படுத்த ஆசிரியருக்கு உரிமையுண்டு.
- படைப்புகள் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு மின்னஞ்சலில் அனுப்பப்படவேண்டும்.
- ஞானம் சஞ்சிகையானது பொதுவெளி (Public Domain) பதிப்புரிமையை உடையது.

# ஆசிரியர் பக்கம்...




## அனைவருக்கும் அன்பு வணக்கம் !

**இலக்கியத்துக்கான நோபல் விருது – 2025**

இவ்வருடத்தின் இலக்கியத்திற்கான நோபல் விருதானது **ஹங்கேரி** நாட்டைச் சேர்ந்த **லாஸ்லோ க்ராஸ்னாஹோர்கை** (László Krasznahorkai) அவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. 1901ஆம் வருடம் தொடங்கி, இதுவரை 122 ஆளுமையாளர்கள் இலக்கியத்திற்கான நோபல் விருதினைப் பெற்றுள்ளார்கள். **இரவீந்திரநாத் தாகூரு**க்குக் கிடைக்கப்பெற்ற (1913) நோபல் விருதினால் இந்திய மொழிகளில் **பெங்காளி** இலக்கியத்துக்கு மாத்திரமே நோபல் அங்கீகாரம் கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்தியாவில் மாத்திரமே கல்வியை மேற்கொண்ட தமிழரான **சி.வி.இராமனு**க்கு 1930இல் **பௌதிகவியலு**க்கான நோபல் விருது கிடைத்தமை இவ்விடத்தில் ஞாபகம் கொள்ளத்தக்கது. மேலைத்தேயர் அல்லாதவருக்குக் கிடைத்த முதலாவது நோபல் விருதாகவும் ஆசிய ஆளுமையாளர் ஒருவருக்குக் கிடைத்த முதலாவது நோபல் விருதாகவும் இது அமைந்தது. சி.வி.இராமனின் தந்தையான சந்திரசேகர வெங்கட்ராமன் ஐயர், பௌதிகவியல் மற்றும் கணித ஆசிரியர் ஆவார். சி.வி. இராமனின் மருமகனான **சுப்ரமணியன் சந்திரசேகரருக்கு** 1983ஆம் வருடம் பௌதிகவியலுக்குக் கிடைத்த நோபல் விருதானது இத்**தமிழ்க்குடும்பம்** உலகிற்கு வழங்கிய அறிவியல் பங்களிப்புக்குச் சான்றாய் உள்ளது. தமிழருக்குப் பெருமை சேர்ப்பதாய் அமைந்துள்ளது.

2025ஆம் வருட இலக்கியத்துக்கான நோபல் பரிசுத் தொகையாக ஒரு மில்லியன் அமெரிக்க டொலர்கள் (இலங்கை ரூபாய் 30 கோடி) லாஸ்லோ அவர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இவரின் முதலாவது நாவலான Satantango, 7 மணித்தியாலங்களைக் கொண்ட திரைப்படமாக 1994இல் வெளியாகி உலகளாவிய புகழ் பெற்றது. லாஸ்லோ, தனது படைப்புகளில் தத்துவார்த்த இருண்ட உலகம், சமகால வாழ்வின் சிதைவு, தனிமை, அர்த்தத்தைத் தேடும் மனிதர்களின் விரக்தி, மனச்சோர்வு, பிறழுலகம் ஆகியனவற்றைக் கருப்பொருள்களாகக் கொள்கிறார். அழிவுக் காலத்தின் பயங்கரங்களுக்கு (Apocalyptic Terror) மத்தியில், கலையின் ஆற்றலை மீண்டும் உறுதிப்படுத்தும் கவர்ச்சிகரமான மற்றும் தொலைநோக்குடைய படைப்புகளுக்காக லாஸ்லோ அவர்கள் நோபல் பரிசுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

லாஸ்லோ, தனது படைப்புகளில் தனித்துவமான பாணியைக் கையாள்பவர். இவரது நாவல்கள் பொதுவாக மிக நீண்ட, சுழன்று செல்லும், மயக்கும் வாக்கியங்களால் ஆனவை. Herscht 07769 என்ற அவரது நாவல், 400 பக்கங்களைக் கொண்டது. முழு நாவலையுமே ஒற்றை வாக்கியத்தால் கட்டமைத்துள்ளார். காற்புள்ளிகளைப் (கமா) போட்டவாறே 400 பக்கங்களையும் எழுதியுள்ளார்.

நாம் வாழும் தற்கால சூழலில் பல்லாயிரக்கணக்கான தமிழ் எழுத்தாளர்களின் பல்லாயிரக் கணக்கான நூல்கள் ஆண்டுதோறும் வந்து குவிகின்றன. இவற்றில் எத்தனை உலக இலக்கியத்தில் ஒருசேர வைத்து நோக்கப்படுகின்றன? எனும் கேள்வி எம்முன்னால் துருத்தி நிற்கின்றது.

மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள் சொல்வதிலோர் மகிமை இல்லை
திறமான புலமை எனில் வெளிநாட்டோர் அதை வணக்கஞ் செய்தல் வேண்டும்.
உள்ளத்தில் உண்மை ஒளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும் (பாரதியார்)

○○○



# கட்டட அழகியலும், தமிழரின் நீடித்த பதிவுகளும்

பேராசிரியர்
சபா ஜெயராசா

கலைத் திறனாய்வில் கட்டடக்கலையும் உள்ளடக்கப்படுகிறது. திரைப்படம், அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துடன் இணைந்த கலையாக இருத்தல் போன்ற நிலைக்குக் கட்டடக்கலையும் ஒப்பாகின்றது. மனிதருடனும் இயற்கையுடனும் உரையாடல் நிகழ்த்தும் கவிதையாகக் கட்டடங்கள் அமையும் நிலையில் அதன் கலை வடிவம் மேலெழுகின்றது.

நேரம், இடம், காலம், குடியிருப்பாளர் ஆகியோரிடத்து இசைவாக்கத்தை ஏற்படுத்திக் கொண்டிருத்தல் கட்டடக்கலையின் இயம்பலாகின்றது. முழுமையான சூழல் தொகுதியின் உறுப்பாக (Organ) கட்டடங்கள் அமைகின்றன. அதன் நீட்சியாக **உறுப்பியக் கட்டடக்கலை** என்ற கருத்து வடிவம் உருவாக்கப்பட்டுள்ளது.

கட்டடங்களின் வடிவமும் தொழிற்பாடும் ஒன்றென அமைகின்றன. இலக்கியங்களில் உருவமும் (Form) உள்ளடக்கமும் (Content) ஒன்றாகி இணைவு கொள்ளல் போன்றநிலை கட்டடங்களுக்கும் பொருந்தும்.

கட்டடக்கலை உருவாக்கும் புதிய சொல்லாடல் திறனாய்வுக் கலையோடு இணைகின்றது. மெய்யியலும் உளவியலும் அந்தச் சொற்களை ஆழ்ந்த பதிவுகளுக்கு உட்படுத்துகின்றன.

உரையாடல் நிகழ்த்தும் "மனிதர்களாகவே" கட்டடங்கள் கருதப்படுகின்றன. அதற்குரிய ஆன்மவலு கட்டடக்கலைஞரால் நூலாசிரியருமாகின்றார். ஒரு நூலுக்குப் பல விளக்கங்களும், பன்மைப் பொருள்கோடலும், தரப்படுதல் போன்று, கட்டடங்களும் பன்மை வாசிப்புக்கு உட்படுகின்றன.

உறுதியாக இருத்தல், பயனுடையதாக இருத்தல், பாதுகாப்புத் தருதல், அழகுடையதாக இருத்தல் ஆகியவை கட்டடங்களுக்குரிய அடிப்படைப் பண்புகள், பயன்படுத்துவோருக்குரிய பாதுகாப்பாளராகவும், பணியாளராகவும் கட்டடங்கள் இருக்கின்றன. அந்நிலையில் கட்டடங்கள் உறங்குவதில்லை.

வரலாற்றைக் கூறிக் கொண்டிருக்கும் உருவங்களே கட்டடங்கள். அவை பயன்படுத்திய மக்கள் பற்றிய செய்தியையும் தந்த வண்ணமிருக்கும். அத்துடன் கருத்து வெளிப்பாட்டுத்தன்மையோடும் ஊறி நிற்கும்.

"கட்டடங்கள்" என்ற கருத்துவடிவம் பெரும் மாடங்களையும் கோபுரங்களையும் மட்டும் கருத்திலே கொள்ளவில்லை. வாழ்வதற்கும் பயன்படுத்துவதற்கும், பாதுகாப்புக்கும் என மனிதர் அமைந்த அனைத்து, கட்டடங்களாகும். ஓலைக்குடிசையும், மண்ணால் அமைக்கப்பட்ட திண்ணையும், குடிசையைப் பற்றி நிற்கும் பத்தியும், நாடோடிகளால் எடுத்துச் செல்லப்படும் நகரும், குடிசைகளும், கட்டடம் என்ற பிரிவில் உள்ளடங்கும்.

மனித ஒழுக்கங்களையும், விழுமியங்களையும், சமூக உறவுகளையும். அழகியல் நோக்கையும் வெளிப்படுத்தும் வடிவமாகவும், சமூக ஊடாட்ட இயல்புகளை வெளிப்படுத்தும் இடைத்தொடர்பு நிலையமாகவும், கட்டடங்கள் அமைகின்றன.

கட்டடங்களை ஆராய்வதன் வாயிலாக மனித வாழ்க்கை நிலைவரங்களையும், சமூக இயல்பையும், சமூகத்தில் அதிகாரம் ஒழுங்கமைக்கப்பட்ட கோலத்தையும், விளங்கிக் கொள்ளமுடியும்.

மேலாதிக்க அதிகாரம் கட்டடங்களால் வெளிப் படுத்தப்பட்டன. காட்சி நிலையில் வெளிப் படுத்தலையும், பயமுறுத்தலையும் பாரிய நிருமாணங்கள் மேற்கொண்டன. கட்டடங்களின் உட்செல்வதற்குரிய நுழைவுக்கட்டுப்பாடுகளும், நுழைவுத் தடைகளும், அதிகாரக் கட்டமைப்புக்கு மேலும் வலுவூட்டின.

மனிதரின் புவியியல் அறிவு, புவியீர்ப்பு அறிவு, கணித அறிவு, தொழில்நுட்ப அறிவு அவற்றுடன் இணைந்த அழகியல் அறிவு ஆகிய அனைத்தையும் கட்டடங்கள் வெளிப் படுத்துகின்றன. குறித்த சமூகத்தின் இயல்பும் கட்டடங்களால் வெளிப்பாடு கொள்ளும்.

உளவியல் நிலையிலும் கட்டடங்களின் இயல்பு விரிவாக நோக்கப்படுகிறது. மனித நடத்தைகள் உணர்வுகள், மனவெளிச்சிகள், உளநலம், அறிகைத்திறன் அனைத்துக்கும் கட்டடங்களுக்கும் உள்ள தொடர்புகள் ஆழ்ந்து அறியப்படுகின்றன.

மனித உளநெருக்கீடுகளைத் தீர்த்து வைப் பதிலும் மனித வினைதிறனைப் பெருக்கிக் கொள்வதிலும், கட்டடங்களின் வகிபாகம் விரிவுடன் நோக்கப்படுகிறது.

மேலும் கட்டடக்கலை, அகன்று விரிந்த பொருள் விரிவைக்கொண்டது. நகரத்திட்டமிடல், நகரவடிவமைப்பு, கிராமிய மெருகூட்டல், நிலத் தோற்ற வடிவமைப்பு, சேவை வடிவமைப்புக்கள், முதலாம் பெருநிலை அமைப்புக்களையும் நுண்ணிய நிலையில் தளபாடங்கள், அகநிலை கோலவமைப்பு, உள்ளகப் பகிர்வுகள் முதலிய வற்றையும் கட்டடக்கலை உள்ளடக்கியது.

கட்டடக்கலைக்குத் திட்டவட்டமான வரைப் படுத்தலை உள்ளடக்கிய முழுநிலைவரை விலக்கணத்தைக் கொடுத்தல் கடினமானதாகக் கருதப்படுகிறது. தொன்மையான மனித வாழ் வின் உறைவிடமாக குகைகளே அமைந்தன. குகைகளை விட்டுப்பிரிந்து வாழும் மனித வளர்ச்சியில் சிறுகுடிசைகளை அமைத்து வாழும் நிலை ஏற்பட்டது.

> சூழலிற் கிடைக்கப் பெற்ற தடிகளையும், தாவர இலைகளையும் கொண்டு குடிசைகள் அமைக்கப்பட்டவேளை குகை அமைப்பின் தொடர்ச்சியாக குடிசை அமைந்தது. அதா வது, அவர்கள் அமைத்த குடிசைகளுக்கு வாயிற் கதவுகளோ, யன்னல்களோ அமைக் கப்பட்டதாகத் தெரியவில்லை.

பயிர்ச்செய்கை வளர்ச்சியோடு, மண் பற்றிய அறிவும், தாவரங்கள் பற்றிய அறிவும், அறிவும் படிப்படியாக வளரலாயின. முயன்று தவறிக் கற்றல் *(Trial and Error Learning)*. பயிர் வளர்த்தல், குடிசைக் கட்டுமானம், உடற் பாதுகாப்பு முதலாம் பல நிலைகளிலும் செயற் பட்டது.

மண்ணினால் சுவர் அமைத்தல், கல்லினாலும் மரத்தடிகளினாலும் சுவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுத்தல், வைக்கோலினால் வேய்தல், முதலியவை நிகழ்ந்தன.

தனிச் சொத்துரிமை வளர்ச்சியோடு உயிர் பாதுகாப்பு மட்டுமன்றி, பொருட் பாதுகாப்பும் முக்கியமான செயற்பாடாயிற்று. குடிசையின் வாயிலைச் சுருக்கி அமைத்தல், வாயில் மூடல் களை ஏற்படுத்தல், பரண்களை ஏற்படுத்தல், தானியங்களைச் சேமிக்கும் குடில்களை அமைத்தல், முதலாம் கட்டுமானங்கள் வளர லாயின. பொருள், பணம் பாதுகாக்கும் இடமாக வீடு மாறியது.

மனிதரின் செயற்பாடுகளின் விரிவோடு, வாழ்விட விரிவாக்கமும் நிகழலாயிற்று. புதிய கருவிகளின் கண்டு பிடிப்புக்களும் பயன்பாடும் வாழ்விட நீளம், அகலம், உயரம் ஆகியவற்றில் விரிவையும், வாழ்விடத்தில் பயன்படுத்தப்படும் பொருள்களில் வளர்ச்சியையும் ஏற்படுத்தின. மனிதர் தம்மை அழகுபடுத்தலும், வாழ் விடத்தை அழகுபடுத்தலும், பயன்படுத்தும் பொருள்களுக்கு அழகேற்றம் செய்தலும் நிகழ்ந்தன. இல்லத்துக்குரிய தளபாடங்களிலும் அழகை நிகழ்த்துவதிலும் உண்ணும் உண வில் சுவையூட்டல் செய்வதிலும் கவனம் செலுத்தப்படலாயிற்று. வாழ்விடம் அழகிட மாகவும் வளர்ச்சி பெறலாயிற்று. பொதுவிடக் கட்டடங்கள் வழிபாட்டிடக் கட்டடங்கள், அரச அரண்மனைக் கட்டடங்கள் ஆகியவற்றுடன் கட்டடக்கலைக்குரிய கலைச்சொற்களும் உரு வாக்கம் பெறலாயின.

பேரரசுகளின் வளர்ச்சி, சமயங்களின் வளர்ச்சி, மூலதனக்குவிப்பு முதலாம் நிகழ்ச்சி களோடு இணைந்ததாகக் கட்டடக்கலையும், கட்டட அழகியலும் வளரலாயின.

ஐரோப்பாவில் நிகழ்ந்த பெருமறுமலர்ச்சிச் செயற்பாடுகள், அறிவொளிக் காலச்சிந்தனைகள், தொழிற்புரட்சி, நவீனத்துவம், மார்க்சியம், பின்னைய நவீனத்துவம், முதலாம் கருத்தி யல்கள் கட்டடக்கலையில் செல்வாக்குச் செலுத்தி வருகின்றன. அதிக அளவு

அறிவியற் பரிசோதனைகளையும் கலைப் பரிசோதனைகளையும், நிகழ்த்தும் துறையாக கட்டடக்கலை மாற்றம் பெற்றுள்ளது.

உலகின் இற்றைக்காலக் கட்டடக்கலை முன்னைய அனுபவங்களை உள்வாங்கியும், எதிர்கால நோக்கைக் கருத்திற் கொண்டும், வளர்ச்சி கொள்ளத் தொடங்கியுள்ளது.

கட்டடக்கலையில் மேலோங்கிய ஓர் எழுநடை (Dominant Style) ஒன்று இன்று இல்லை என்பது ஒரு முக்கிய செய்தியாகின்றது. அதாவது அழகின் பன்மைத்துவம் உறுதி பெறுகின்றது.

சமூகநலன், சமத்துவம், சமூகநீதி, தேசிய நலன், சிறுபான்மையினரின் நலன், மாற்றுத் திறனாளிகளின் நலன், இனச்சால்பிய (Ethnocity) மரபுகள் முதலியவற்றைக் கட்டடக்கலை முழுமை யாக உள்ளடக்க வேண்டும் என்ற கருத்துக்கள் மேலோங்கி வருகின்றன. ஏற்கனவே மாற்றுத் திறனாளிகளுக்கான ஏற்பாடுகள் கட்டடங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன. அவர்களின் உபயோகத்தை மேலும் சுலபப் படுத்துவதற்குரிய உளவியல் ஆய்வுகள் மேற் கொள்ளப்பட்டு, கட்டட ஆக்கத்தில் ஒன்றி ணைக்கப்படுகின்றன.

உலகில் உள்ள அனைத்து மொழி பேசு வோரும் விளங்கிக் கொள்ளக்கூடிய பொது மொழியும், அகிலப் பண்புடைய பொது அழகியற் கூறுகளும் கட்டடக்கலையை வளப் படுத்துகின்றன.

''கட்டடம் பேசும்'' என்ற தொடர் பயன் படுத்தப்படுகிறது. தமிழர்களுடைய கோயிற் கட்டடக்கலையில், ''கோபுரம் பேசும்'' என்ற தொடர் வழக்கில் இருந்தது. இந்து சமயத் தத்துவத்தை, ஆலய நிருமாண முறையும், கோபுரங்களும், சூழல் வடிவமைப்பும் எடுத்துரைத்த வண்ணம் உள்ளன. சூழல் வடிவமைப்பும் கட்டடக்கலையில் உள்ளடங் கியது என்ற நவீன கருத்து ஏற்கனவே இந்து சமயக் கட்டடக்கலையில் நிலை பெற்றிருந்தது.

தற்காலத்தில் ''சூழலியல் கட்டடக்கலை'', ''பசுமைக் கட்டடக்கலை'' (Green Architecture) முதலாம் சிந்தனைகளும் ஏற்பாடுகளும் மேலோங்கி வருகின்றன. சூழலைப் பாதுகாத்தல், சூழலோடு இசைவு கொள்ள வைத்தல் முதலிய வற்றை அந்தக் கருத்து வடிவம் தாங்கியுள்ளது.

தமிழர் கோயிற் கட்டடக்கலையில் உள்ளடக் கப்பட்ட தல விருட்சம், தெப்பக்குளம், கோயிற் பூங்கா முதலியவை பசுமைக் கட்டடக்கலையின் இயல்பை ஏற்கனவே வெளிப்படுத்திவிட்டன.

கட்டடக்கலை என்பது மனிதப் பயன் பாடுகளை உள்ளடக்கிய அழகியல் வடிவமாகும். ஏனைய கலை வடிவங்கள் புலன் நுகர்ச்சி முதன்மையோடு நிற்கின்றன. ஆனால் கட்டடக்கலை மனிதப் பாதுகாப்பு, பயன்பாடு, காட்சிவழியான அழகுநுகர்ச்சி ஆகியவற்றை உள்ளடக்கிய அகல்நிறை (Comprehensive) அழகியல் வடிவமாகின்றது.

தற்கால மனித வாழ்வும், சமூக நிலை வரங்களும் தீவிர முரண்பாடுகளையும், மோதல்களையும், உளவியல் விகாரங்களையும், மனக்கிளறல்களையும் உருவாக்கி வருதல் கட்டடக்கலையிலும் தெறிப்புற்று மேலெழுந்து வருகின்றது.

விகாரமான புறத்தோற்றங்கள், மலைப் பூட்டும் வடிவங்கள், சரிந்து விழுதல் போன்ற அமைப்புக்கள், முதலியவற்றை உள்ளடக்கிய கட்டடக்கலை வடிவங்கள் உருவாக்கப் படுகின்றன. அழகியல் என்ற கருத்து வடிவம் விரிநிலை கொள்கின்றது.

உலகக் கட்டட அழகியலினூடே தமிழ்க் கட்டடக்கலை நீடித்த அழகியலைத் தாங்கி நிற்கின்றது. தஞ்சைப் பெரிய கோயில், மற்றும் இசைத்தூண்கள், கட்டடக் கலையில் அழியா அழகைத் தாங்கியுள்ளன.

○○○

## குயிலின் சூழ்ச்சி

– முனைவர் கு. சிதம்பரம், சென்னை

எறும்புகளுக்கு
இரையாகும்
காக்கையின்
குஞ்சுகள்!

குஞ்சுகளைக்
கீழே தள்ளுவது
யாரென்று தெரியாமல்
பதை பதைக்கும்
காக்கைகள்!

தனது முழு
பலத்தையும் கொண்டு
காக்கையின் குஞ்சுகளைக்
கீழே தள்ளிவிட்டு
எல்லா உணவையும்
தானே உண்கிறது
குயில் குஞ்சு
சகுனி போல!



# விட்டு விடுதலையாகி



அலைமகன்

சுகந்தன் மினாவை முதன்முதலில் சந்தித்த போது அது வசந்த காலத்தின் தொடக்கத்தில் அமைந்த ஒரு காலைப்பொழுதாக இருந்தது. சிட்னி முழுவதும் ஜகரந்தா மலர்கள் பூத்து குலுங்கி ஒரு மந்தகாசமான நாவல் நிறத்தை பரப்பியிருந்தன. இந்த வேளையில் சிட்னி பல்கலைக்கழகத்தின் அபக்ரோம்பி வீதியில் நடப்பது சுகமாக இருந்தது. வீதியோரமாக இருந்த உணவகத்தில் கோப்பி ஒன்றை ஆர்டர் செய்துவிட்டு காத்திருந்த போதுதான் அவள் அங்கே வந்திருந்தாள். மிக மலர்ச்சியான இளநகை ஒன்றுடன் அவளது அறிமுகம் தொடங்கியது. இருவருக்கும் பொதுவான ஒரு பாடப்பிரிவில் ஒருதடவை பார்த்திருக்கிறான். நல்ல உயரமான எடுப்பான தோற்றம். கவர்ச்சி கரமான அரேபியன் வெள்ளை நிறம். பொதுவாக இவனுக்கு தூய ஆங்கில வெள்ளையோ, அரேபியன் வெள்ளையோ பிடிப்பதில்லை. அநேகமான நம்மவர்களைப் போலவே மஞ்சள் கலந்த லத்தீன் அமெரிக்க வெள்ளைதான் பிடிக்கும். ஆச்சரியகரமாக இவளை இவனுக்கு பார்த்தவுடன் பிடித்துக்கொண்டது. அவளின் தோற்றமும் ஆளுமையும் நிறத்தை தாண்டி இவனை ஆட்கொண்டிருக்கலாம். முதல் நாளிலேயே எப்பிடி அறிமுகம்செய்து கொள்வது என்று இவனுக்கு புரியவில்லை. மறக்காமல் பதிலுக்கு ஒரு இதமான இளநகையை உதிர்த்து வைத்தான். அத்துடன், பாடவேளைகளில் இவள் அருமையாக விவாதம் செய்பவள் என்பதையும் நினைவு கூர்ந்தான். சிலவார்த்தைகளாவது பேசி யிருக்கலாமோ என்று இவனுக்கு தோன்றியது. எனினும் அவளை சந்திக்கும் பொழுதுகள் இரு வாரங்களாக பல்கலை வளாகத்தில் வாய்க்க வில்லை. ஆனால் அவளை மீண்டும் சந்தித்த பொழுது மிக அதிர்ச்சிகரமான தருணமாக முடிந்தது. தன்னை கணப்பொழுதில் கவர்ந்த நங்கையை சந்திக்கும் தருணத்தை தினமும் எதிர்பார்த்துக்கொண்டிருந்த சுகந்தனுக்கு அந்த கணம் அவன் எதிர்பாராதது. அவனது நம்பிக்கைகள் மீது பலத்த அடியை கொடுத்த தருணம். இவன் உலகின் தரம் வாய்ந்த பல்கலைக்கழகத்தில் ஆய்வு மாணவனாக இருந்தபோதிலும் மிக சராசரியான ஒரு யாழ்ப் பாணத்து பொடியனின் மனோபாவமே இவனுக்கு வாய்த்திருந்தது.

ஒரு ஞாயிறு மாலைப்பொழுதில் Burwood Plaza வெளி வராந்தாவில் ஒரு Bar இல் நின்றிருந்தாள். கையில் ஒரு கிளாஸுடன் சிகரெட்டை ஒயிலாக புகைத்தபடி சுற்றும் முற்றும் நோட்டம் விட்டுக்கொண்டிருந்தாள். இவனை அவள் காணவில்லை. சும்மா சொல்லக்கூடாது. லெக்கின்ஸை ஒத்த ஜீன்சும் குதிக்கால் செருப்பும் கருநீல டீசேட்டும் போட்டு ஒயிலாக அவள் சிகரெட் பிடிப்பது கோலிவுட் பட நாயகிகளை ஒத்த ஸ்டைலாக இருந்தது. ஒருவேளை அவளை பிடித்துவிட்டதால் அவளின்

எல்லா செயல்களும் ரசிக்கத்தக்கதாக மாறி விடுகிறதோ என்னமோ? எப்பிடியாவது கதைத்து விடவேண்டும் என்று மனது துடித்தது. இன்று தவறினால் எப்போதுதான் மறுபடியும் காண முடியுமோ தெரியாது.

*02*

நான் எவ்வளவோ பெண்களுடன் கதைத் திருந்தாலும், அவர்களுடன் நீண்டகால தொடர்பில் இருந்திருந்தாலும் பெண்களுடன் பேச்சை எப்பிடி தொடங்குவது என்ற கலை எனக்கு இன்னும் கைவரவில்லை. பெயர் கூட தெரியாத ஒரு பெண்ணிடம் மிகவும் அதிகப் பிரசங்கித்தனமாக ஒருகேள்வியை கேட்டு பேச்சை தொடங்கினேன்.

‘‘புகைப்பிடிப்பது உடலுக்கு மிகவும் கெடுதல் அல்லவா? அது சயின்டிபிக் ஆக நிரூபிக்கப் பட்டது.’’

சுமுகமாக இனிமையாக அறிமுகப்படுத்தி இருக்கவேண்டும். தரித்திரம் பிடித்த என் நாக்கு மூளையுடன் சேர்ந்து சதிசெய்துவிட்டது. ஒரு வினோதமான விலங்கை பார்ப்பதுபோல என்னைப் பார்த்தாள். பார்வையில் கோபம் இருந்ததா அல்லது இளக்காரம் இருந்ததா என்று என்னால் ஊகிக்க முடியவில்லை.

‘‘இதுவே ஒரு ஆணாக இருந்தால் அறிமுகம் இல்லாமலே கேட்டிருப்பீங்களா?’’

நியாயமான கேள்விதான்.

‘‘நான் வருந்துகிறேன். உங்களை புண் படுத்தும் எண்ணம் எனக்கில்லை’’

‘‘பரவாயில்லை இந்த கேள்வியெல்லாம் என்னை புண்படுத்தமுடியாது’’ அலட்சியமாக பதில் சொன்னாள். தனது பெயர் மினா என்று அறிமுகப்படுத்தினாள். உரையாடல் ஆங்கி லத்திலேயே தொடர்ந்தது.

சற்று சுமுகமாக உரையாடல் தொடர்ந்தும் இயல்பாக கேட்டேன்.

‘‘கவன ஈர்ப்புக்காகத்தான் இதை செய்யிறீங்க! அப்பிடித்தானே?’’

‘‘கவன ஈர்ப்புக்காக நான் இதை செய்ய வேண்டியிருக்காது’’ உதட்டை சுளித்துக்கொண்டு அலட்சியமாக பதிலளித்தாள். அது உண்மை தான். தனது அழகு சார்ந்து அவளுக்கு நிறைய பெருமையும் தன்னம்பிக்கையும் இருந்தது. ஆனால் நான் அவளது பதிலை ரசிக்கவில்லை. எனது முகபாவனையை புரிந்து கொண்ட மினா,

‘‘சுகு! புகைத்தலின் தீமைபற்றி எனக்கு உன்னைவிட அதிகம் தெரியும்’’ ஒரு ஆழமான உறிஞ்சலின் பின் பதிலுறுத்தாள்.

‘‘தெரிந்துகொண்டே தவறிழைப்பது முட்டாள் தனமல்லவா?’’ எனது பனம்கொட்டை மனம் துருவித்துருவி அறிவுரை சொல்லவே விளைந்தது.

‘‘சுகு! கேள்வி அதுவல்ல. என் உடலின்மீது நீ செலுத்தும் அதிகாரம்தான் பிரச்சினை. என் உடலின் மீது எனக்கு மட்டுமே முழு உரிமை இருக்கிறது. ஆண்களுக்கோ மதங்களுக்கோ கிடையாது. பெண்களுக்கு எதிராக ஆண்களும் மதங்களும் கொண்டுள்ள கூட்டணிதான் ஆபத்தானது.’’ எப்போதும் முன்முடிவுகளை எடுத்துவிட்டு பெண்களை தீர்மானிப்பதும் அவர்களிடம் திணிப்பதும்தான் பிரச்சினை.

பரவாயில்லை இந்த பிரச்சினை மூலம் இவளுடன் கதையை தொடர்வதற்கான வழி கிடைத்துவிட்டது. நான் அதை இழக்க விரும்ப வில்லை.

‘‘எப்பிடியிருப்பினும் சமூக ஒழுக்கம் என்று ஒன்று இருக்கிறதல்லவா மினா?’’ கேட்டு விட்டேன்.

‘‘சுகு! சமூக ஒழுக்கம் என்பது கட்டமைக்கப் பட்டதுதான். அதுவும் பெண்களுக்கான ஒழுக்கம் ஆண்கள் உருவாக்கியதுதான். வடிவா யோசித்துப்பார் சுகு! உனக்கு விளங்கும்’’ அழுத்தம் திருத்தமா சொன்னாள்.

‘‘மினா நீ ஒரு அதிதீவிர பெண்ணிய வாதிதானே?’’

‘‘ஓரளவுக்கு எல்லா பெண்களுமே மன தளவில் பெண்ணியவாதிகள்தான் இதுவரை அவர்களுக்கு சந்தர்ப்பம் கிடைக்கவில்லை’’

கர்ணன் கவச குண்டலத்துடன் பிறந்ததாக சொல்லுவார்கள். அதேபோல நான் அதிக மூளையுடன் பிறந்திருக்கிறேன். அந்த மூளை நீங்கள் நினைப்பதுபோல அயின்ஸ்ட்டின், நியூட்டன் போன்றவர்களின் மூளைப்போல கணிதம், விஞ்ஞானம் போன்றவற்றை ஏறெடுத்தும் பார்க்கவில்லை. சளைக்காமல் விவாதம் செய்யவே அது பயன்பட்டது. என்னை சுற்றி யுள்ளவர்கள் அதனை விதண்டாவாதம் என்றோ வெட்டிவாதம் என்றோ அழைத்தார்கள். பல்கலைக்கழகத்தில் ஒரு நடைமுறை இருக் கிறது. ஒவ்வொரு அரையாண்டின் போதும் முதல் இரண்டு வாரங்களில் பாடப்பிரிவுகளில் மாற்றம் செய்ய சுதந்திரமிருக்கிறது. அடுத்த



**“நான் இறைவனின் படைப்பை நம்புகிறேன். ஏனென்றால் அது நிதர்சனமானது. ஆனால் மதங்கள் இறைவனை நம்புவதில்லை. மாறாக மானுடன்மீது இறைவனுக்கு ஒரு அதிகாரத்தை உருவாக்கித்தருகின்றன. இதனால் மனுஷனால் இயற்கைக்கு விசுவாசமாக வாழமுடியவில்லை!”**

அரையாண்டுக்கு நான் பெண்ணியம், பெண்களி னரசியல் என பாடப்பிரிவுகளை தெரிவு செய்தேன். இந்த பாடங்கள் எனக்கு கட்டாயமல்ல என்பது வேறு விடயம். எனது ஒரே விருப்பம் மினாவுடன் நான் வகுப்பறையை பகிர்ந்துகொள்ள வேண் டும். அத்துடன் விவாதம் செய்வதற்கு இவை மிக வசதியா இருக்கும் என்பதுதான். ஏனோ தெரியவில்லை இப்போதெல்லாம் மினாவை ஒவ்வொருநாளும் பார்க்கவேண்டும் போல இருக்கிறது. விரிவுரைகள் முடிவடைந்ததும் மினாவுடன் வளாக சூழலில் கோப்பி அருந் துவதும் விவாதிப்பதுமாக பழக்கப்படுத்திக் கொண்டேன்.

*03*

இந்த ஆண்டுக்கான வருடாந்த ஆய்வு மாநாடு தொடங்கிவிட்டது. சுகு இந்த வருடம் கட்டுரை எதுவும் சமர்ப்பிக்கவில்லை. வெறும் பார்வையாளனாகவே கலந்துகொண்டிருந்தான். காலையில் கருத்தரங்கு பெண்ணியம் சார்ந்த அரங்காக இருந்தது. சுகு இப்போது இணைந்துள்ள துறை. மினாவும் வருவாள் என்று நினைத்தது வீண்போகவில்லை. ஆனால் அவள் கட்டுரை சமர்ப்பிக்க வந்திருந்தாள். அறிவிப்பு பலகையில் அவள் பெயர் துலங்கியது.

அபிவிருத்தி திட்டங்களை வகுப்பதில் பெண்களின் பங்கு: மினா முகமட் அலி, ஈரான் எனும் வாசகங்கள் துலக்கமாக தெரிந்தது. சுகந்தனால் நம்பவே முடியவில்லை. கண நேர அதிர்ச்சியில் அவனது தலை சுற்றியது. அவனது மனதில் கேள்விகள் முளைத்தன.

ஒரு முஸ்லீம் பெண்ணால் எப்பிடி இவ் வளவு தாராளமாக சமூக கட்டுப்பாடுகளை உடைக்கமுடிந்தது. உண்மையில் இவளது பின்னணி என்ன? ஒருவேளை இரானிய தாய் தகப்பனுக்கு பிறந்து ஆஸ்திரேலியாவிலேயே வளர்ந்தவளாக இருக்கலாம்.

அவளின் கட்டுரை அமர்விலேயே சிறந்த பின்னூட்டத்தை பெற்றது. இவளது ஆங் கிலத்தை பார்த்தாலே தெரிகிறது. இவள் பிறப்பால் மட்டுமே முஸ்லீம்.

அமர்வில் வெகுவாக விவாதம் நடந்தது. எப்போதும் அவளுடன் பொயிண்ட்ஸ் பிடித்து சண்டைபோடும் சுகந்தன் இன்று வாய் திறக்க வில்லை.

அவளது பேச்சு முடிந்து அவள் இவன் அருகில் வந்தமர்ந்தாள். என்ன ஒரு வினோதமான மனம்! எப்போதும் அவளுடன் கதைக்க ஆசைப்படும் சுகந்தனால் அவளுடன் இன்று வாய் திறக்க முடியவில்லை. எப்படி பேச்சை ஆரம்பிப்பது என்று சற்று திகைப்பாகவும் தடுமாற்றமாகவும் இருந்தது. பறந்து சிறகடிக்கும் வண்ணத்துப்பூச்சி கூட்டுப்புழுவாக தலைகீழ் உருமாற்றம் அடைந்தமைபோல சுகந்தனின் நிலை இருந்தது.

அமர்வு முடிவடைந்ததும் சுகந்தன் காணாமல் போனான். இவள் பிறந்தது முதலே இவளின் பிறப்புக்குரிய பண்பாட்டை கற்கவில்லையா? பெற்றோருடன் சண்டையிட்டு தனியாக வாழ்கிறாளா? ஒருவேளை திருமணமாகி விவாகரத்து பெற்றுவிட்டாளோ? அல்லது ஆங்கிலேயன் ஒருவனை காதலிக்கிறாளா? ஒருவேளை ஆஸ்திரேலியனுடன் லிவிங் டுகெதர் ஆக? கடைசி ஊகத்தை அவன் கற்பனை

செய்யக்கூட விரும்பவில்லை. தீராத குழப்பத்தில் மனம் என்னன்னவோ கற்பனை செய்கிறது. சிலவேளை ஈரானிலிருந்து குழந்தைப் பருவத்திலேயே பிரிந்து வந்திருக்கலாம். அல்லது ஈரான் என்பது அவளது பெற்றோருக்கு மட்டுமே தெரிந்த தேசமாக இருக்கலாம்.

எது எப்பிடியிருந்தாலும் மினாவின் நெருக்கத்தை தவிர்க்க சுகந்தன் விரும்பவில்லை. இரண்டு நாட்கள்தான் அவளுடன் பேசாமல் இருந்தான். மூன்றாவதுநாள் காலையிலேயே மின்சாரரெயிலில் விவாதத்தை தொடங்கி விட்டான்.

“மினா நீ கடவுளை நம்புவதில்லையா?”

“யார் சொன்னது? நான் கடவுளின் இருப்பையும் படைப்பையும் முழுவதுமாக நம்புகிறேன் சுகு!”

“ஆனால் உன் வாழ்க்கைக்கும் நீ சொல்வதுக்கும் பொருந்தவில்லை அல்லவா?”

“நான் இறைவனின் படைப்பை நம்புகிறேன். ஏனென்றால் அது நிதர்சனமானது. ஆனால் மதங்கள் இறைவனை நம்புவதில்லை. மாறாக மானுடன் மீது இறைவனுக்கு ஒரு அதிகாரத்தை உருவாக்கித்தருகின்றன. இதனால் மனுஷனால் இயற்கைக்கு விசுவாசமாக வாழ முடியவில்லை! சுகு நீ இறைவனை நம்புகிறாய் அல்லவா?”

“நிச்சயமாக!”

“வாழ்த்துக்கள்! நான் இறைவனுக்கு மட்டுமே பதில் கூறுவேன். போதகர்களுக்கோ, சராசரி மக்களுக்கோ நான் பதில் கூறமுடியாது!”

மினாவின் முகத்தில் கோபம் தெளிவாக பிரதிபலித்தது. இந்த சுபாவம் அவளுக்கு கொஞ்சம் கூட அழகாக இல்லை.

*04*

சிட்னியில் குளிர் காலம் முடிவடைந்து பல்கலையில் விடுமுறையும் விட்டாகிவிட்டது. சுகுவும் மினாவும் சிறிய ரக உல்லாசக்கப்பல் ஒன்றுக்கு முற்பதிவுசெய்துவிட்டு கடல் வழியே நீண்ட பயணமொன்றுக்கு காத்திருந்தார்கள். சுகந்தனுக்கு தானும் நண்பர்களும் தாயகத்தில் பல்கலையின் இறுதி ஆண்டின் போது குறிகாட்டுவானில் இருந்து நெடுந்தீவுக்கு சென்ற பயணம் நினைவில் ஓடியது. அப்போது இவன் ஒருவருடனும் சோடி சேரவில்லை. இப்போதோ இவனின் மனதை கொள்ளைகொண்ட இந்த ஈரான்காரி உடனிருக்கிறாள். அந்த கப்பலில் இவர்களைவிட இரண்டு சோடிகள் மட்டுமே இருந்தார்கள். அவர்கள் இருவரும் இவர்களை சட்டை செய்யவில்லை. அதுவும் நல்லதுதான். சுகந்தனுக்கு மினாவுடன் தனியே பயணம் செய்வதுபோலத்தான் இருந்தது. மினாவுடன் ஒரு வருட பழக்கம் எதிர்பாராத்த விதமாக மிக நன்றாக போய் கனிந்திருந்தது. தாயகத்தில் இவன் ஒரு “தீவான்”. மினாவை திருமணம் செய்து ஊருக்கு கூட்டிக்கொண்டு போனால் எப்பிடி இருக்கும் என்று ஒருமுறை இரவில் யோசித்துக் கொண்டிருந்தான். ஊரில் புளிய மரத்துக்கு கீழேயும் தரவை குளத்துக் குள்ளேயும் என்று சுத்தித்திரிந்த இவனுக்கு மினாவுடன் ஈரானில் குடியேறுவது பற்றி யோசிக்கக்கூட முடியவில்லை. கவலை, பயம், ஏக்கம் என கலவையான உணர்ச்சிகளுடன் சிறிது நேரம் யோசித்துவிட்டு விரக்தியுடன் ஒரு சிரிப்பு சிரித்தான். சித்தார்த்தன் புத்தனாக மாறிய போது இப்பிடித்தான் ஒரு சிரிப்பு சிரித்திருப்பான்.

கப்பலில் மிக இதமான இசை ஒலிக்கத் தொடங்கியிருந்தது. மாலை மயங்கியநேரம். சுகந்தனும் மினாவும் மேல் தளத்தில் நின்றிருந்தனர். அலைகள் பெரிதாக இல்லாததால் கப்பல் மெதுவாக கிழக்கு திசையில் நகர்ந்து கொண்டிருந்தது. சிட்னி ஒபேரா கவுசின் தோற்றம் அங்குள்ள மின்விளக்குகளின்பின்னணியில் மனதை கவர்ந்தது.

சிறிது தூரம் சென்றதும் இருவரும் கீழ் தளத்துக்கு வந்தனர். கண்ணாடி வழியாக பார்க்கும்போது இடைக்கிடை டொல்பின்கள் பாய்ந்து செல்வது அழகாக புலப்பட்டது. சூழலை மினா நன்றாக மெய்மறந்து ரசித்துக் கொண்டிருந்தாள். சுகந்தனுக்கு வெளிச்சூழலை காட்டிலும் மினாவுடன் இணைந்து அதை ரசிப்பது ஒரு கிளர்ச்சியை கொடுத்தது. அந்தக் கடற்பகுதி நீலத் திமிங்கிலங்கள் கடக்கும் பகுதி. சிலவேளைகளில் அவற்றை பார்க்க கிடைக்கும். பயணம் தொடங்கும் போது சிறிதளவு பார்க்க கிடைக்கும் என்று சுகந்தன் எண்ணிக் கொண்டான். சுகந்தன் பயணம் தொடங்க முதல் கொஞ்சம் ஷாம்பையின் அருந்தியிருந்தான். மினாவும் அருந்தியிருந்தால் நன்றாக இருந்திருக்கும். அவள் தோடம்பழ சாறுடன் நிறுத்தி விட்டாள். இவ்வாறான தருணங்கள் மிக அரிதாகவே சுகுவுக்கு அமைகிறது.

திடீரென கப்பல் பெரும் அலைக்குள் சிக்கியது போல தடுமாறி ஆட்டம்கண்டது.

கப்பலில் திடீரென விளக்குகள் அணைந்தன. மினா திடுக்கிட்டு திரும்பினாள். கைப்பையில் இருந்து ஹிஜாப் ஒன்றை எடுத்து அணிந்து கொண்டாள். கிட்ட நெருங்கி வந்து சுகுவின் கரங்களை இறுக்கமாக பிடித்துக்கொண்டாள். சுகு அவளை கனிவுடன் பார்த்தான். அவளின் தோற்றம் அந்த கணத்தில் ஒரு லத்தீன் அமெரிக்க பெட்டைபோல அவனுக்கு பட்டது.

*05*

ஆஸ்திரேலிய குடிவரவு திணைக்கள அலுவலகம் வழமைக்கு மாறாக கூட்டம் குறைவாக இருந்தது. பல்கலைக்கழகத்துக்கு ஒரு நாள் விடுப்பு எடுத்துக்கொண்டு சுகந்தன் நேரத்துடனேயே அலுவலகத்துக்கு வந்திருந்தான். அவனது நிரந்தர வதிவிட உரிமை கோரிக் கையை பூர்த்தி செய்து கையளிக்க வேண்டி இருந்தது. வேலைகளை விரைவாக முடித்துவிட்டு வெளியேறும்போதுதான் மினா அங்கே அறை ஒன்றிலிருந்து வருவதை கண்டான். இவளும் தன்னைப்போலத்தான் போலும்.விரைவாக சென்று அவளுடன் இணைந்து கொண்டான்.

“என்ன மினா PR என்ன நிலையில் இருக் கிறது?”

“சுகு நான் PR இல்ல. எனது அரசியல் தஞ்ச கோரிக்கையை பரிசீலிக்க கூப்பிட்டிருந்தார்கள்”

“அரசியல் தஞ்சமா? ஏன் நீ இஸ்ரேலுக்கு ஆதரவா? அல்லது அரச எதிர்ப்பு பிரச்சாரம் செய்தாயா?” சுகு தனக்கு தெரிந்த பொது அறிவை வைத்துக்கொண்டு விடிந்ததும் விடியாததுமாக கேள்விகளை ஆரம்பித்தான்.

“எனக்கு ஈரானில் மரண தண்டனை விதிக்கப் பட்டிருக்கு. கடும் முயற்சி செய்து தப்பி கடைசி யில்தான் இங்கே தஞ்சமடைந்தேன் சுகு!”

“மரண தண்டனையா?” சுகுவுக்கு இஸ்ரேலிய ஏவுகணைக்கு முகம் கொடுத்ததான அதிர்ச்சி. வாய் குழறியது.

“எ…எதுக்கு?”

“கடவுளுக்கு எதிராக போர் செய்தேனாம்!” உதடுகளை சுளித்துக் கொண்டே சிரித்தாள். அந்த சிரிப்பின் அர்த்தம் என்ன என்று இவனுக்கு இன்னும் விளங்கவில்லை.

○○○

# அதிசயத் துறவிகள்

காவியுடை தரிக்காதவர்
கடல் கடந்து உயிர் காத்தவர்
சாவிலிருந்து தப்பியவர்
சாதாரண முகாமினர்

ஏவிய எறிகணைக்கு
எதிர் நீச்சல் போட்டவர்
பாவிகளாய் பரிதவித்தவர்
பாதுகாப்பு தேடியவர்

நாவிருந்தும் சொல்லிழந்தோர்
பூ, பொட்டிழந்து
பூமிக்குப் பாரமாகியவர்

முப்பதாண்டு முடிந்தும்
முன்னிருந்த நாடுவராதோர்
எப்போது இயல்புநிலை
எண்ணித் தவிப்பவர்

தப்பில்லா தண்டனை
தவறில்லா கட்டணம்
உப்பில்லாத கஞ்சி
உணவுக்குக் கெஞ்சி

ஞானியாய்ப் போவதா ?
ஞாயிருள் சேர்வதா ?
கூனியாய் ஆவதா
கூலிக்கு பிழைப்பதா ?

கையேந்தி நிற்பது
கனகாலம் ஆனதால்
தையேனும் இலங்கைக்கு
தாயகம் போவோமா ?

உய்ய வதற்கு இந்தியா
உதவிதான் செய்யுமா ?
செய்வதற்கு தனிவழி
செல்வதுவே ஒரே வழி !

**கலாநிதி செ.ஞானராசா**
செம்மண் தீவு, முருங்கன்
மன்னார், இலங்கை.




# சொல்லாத கதைகள்

“இஞ்சை அப்பா! வேலை வேலையெண்டு ஓடிக்கொண்டிருந்தாப் போதுமோ? நான் சொல்லுறதைக் கொஞ்சம் காதில வாங்குங்கோ”. அஜிக்கு இப்ப வயது முப்பத்திரெண்டு ஆகுது, வேலைக்குச் சேர்ந்தும் வருசம் ஐஞ்சாப்போச்சு, இண்டைக்கு அவன் திருமணம் பற்றி அவனோட பேசி முடிவெடுக்க வேணும். இப்பிடியே இந்த வருசமும் முடியப்போகுது, உங்களுக்கு அதைப் பற்றி ஒரு கவலையும் இல்லை. காணுற சொந்தங்கள் எல்லாம் கேக்கிற கேள்விக்கு என்னால பதில் சொல்ல முடியேல்ல நாங்கள் அவன்ர உழைப்பில் வாழுறமாதிரிச் சனங்கள் நினைக்கினம் என்றபடி வந்தமர்ந்தாள் மலர்.

“நான் அக்கறையெடுக்கேல்லை என்று நீர் எப்பிடிச் சொல்லுவீர். நானும் அவனிடம் சாடைமாடையா எத்தினதரம் பேசிப்போட்டன். அவன் சரியான பதில் சொல்லுறான் இல்லையே, குழந்தைப் பிள்ளையா? அவர். அவருக்கும் தனக்கு வயது போகுதெனத் தெரியத்தானே வேணும். எனத் தானும் தன் பங்குக்கு அலுத்துக் கொண்ட முரளி. வரட்டும் இண்டைக்குப் பேசி முடிவெடுப்பம். இப்ப என்னை விடும் “என்றபடி கைத்தொலைபேசிக்குள் மீண்டும் கவனத்தைப் புதைத்தார்.

“உடன கண்டியைத் (Handy) தூக்கீருவீங்கள் நான் சொல்லுறதைக் கொஞ்சம் கேளுங்கோ. இவனோட படிச்ச பிள்ளைகள் எல்லாம் கலியாணம் முடிஞ்சு குடும்பமா இருக்குதுகள். இவருக்குத்தான் எல்லாம் பிரச்சனை. பிரச்சனை எண்டுறார்.

நீங்கள் நான் சொலுறதைக்கேளுங்கோ, அஜியோட அடிக்கடி வந்து போகும் மேனி சாவை அவனுக்குப் பேசுவமோ?

அந்தப் பிள்ளை நல்ல வடிவான பிள்ளை, அதோட எப்ப வந்தாலும் அன்ரி, அன்ரி என்று என்னோடையும் அன்பாப்பேசுவாள். நல்லா படிச்சிருக்கிறாள், அமைதியான சுபாவம். தம்பியும் பேசும் நேரமெல்லாம் மேனிசா, மேனிசா என்று நூறுதரம் சொல்லுறான். அவனுக்கும் பிடிச்சிருக்குப் போல, அந்தப் பிள்ளையின்ர தாய், தகப்பனையும் தம்பியோட போகேக்க ஒருக்கா அறிமுகப்படுத்தினவன். பேசிப்பழக நல்ல சனமாவும், படிச்சகுடும்பமாவும் இருக்கினம் . அஜி ஓமெண்டா அந்தப் பிள்ளையையே பேசி முடிப்பம். நான் அவனோட பேசும் போது நீங்களும் அழுத்தமாச் சொல்லுங்கோ” என்ன என்றாள் மலர்.

சரி அஜி வரட்டும் பேசிப்பார்ப்போம். அதுக்காக நான் இப்ப (கைத்தொலைபேசியைப்) Handy பாக்காம அவனுக்காகக் காத்துக் கொண்டு இருக்கவேணுமோ என்றபடி மீண்டும் கைத்தொலைபேசிக்குள் கவனத்தைப் புதைத்தார் முரளி.

‘என்னவோ செய்யுங்கோ’ என்றபடி அடுக்களைக்குள் மலர் போகவும், ‘அம்மா!’ என்றபடி அஜியும் வந்தான்.

“வா தம்பி வா! உனக்காகத்தான் காத்துக் கொண்டு இருக்கிறன்” என்றாள் மலர்.

**கீத்தா பரமானந்தன்**



“ஏன் அம்மா என்ன விசயம்?” என்றபடி பக்கத்தில் வந்தமர்ந்தான் அஜி. அஜி எங்களுக்கு ஒரே மகன் உளவியல் பட்டப்படிப்பு முடித்து இப்போது கவுன்சிலிங் தொழில் பார்க்கிறான். பல திருமணப்பேச்சுக்கள் வந்த போதும் அவன் எதற்கும் சம்மதிக்கவில்லை. திருமணம் செய்துபோட்டு இங்கு ஆணும், பெண்ணும் படும் பாடுகளை எனக்குத் தெரியும். என்னையும் அப்படி அவதிப்பட வைக்காதேங்கோ, கொஞ்சம் பொறுங்கோ என்பான்.

தாயும் விடாமல் என்ன கலியாணம் செய்த எல்லோரும் கஸ்ரப்படுகினமோ? அப்பிடியெண்டா இந்த உலகத்தில மகிழ்வான தம்பதிகளே இல்லையா? எல்லாம் மனசைப் புரிஞ்சு விட்டுக் கொடுத்துப் போறதிலதான் இருக்கு. குடும்பம் எண்டாச் சின்னச் சின்னப் பிரச்சனைகள் வந்து போகத்தான் செய்யும். அதுக்காகத் திருமணமே கஸ்ரம் எனச் சொல்லலாமோ? அப்பாவும் நானும் வாழ வில்லையா? எங்கட சொந்த பந்தங்கள் சந்தோசமாக வாழவில்லையா? எனத் தாயும் அடுக்குவா. இப்பிடியே கதை தொடர்ந்து விவாதம் ஆகும். மகன் எழுந்து போய்விடுவான். இதுவே தொடர்கதையாவதால் இன்று முடிவெடுக்க காத்திருக்கிறா தாய்.

“சொல்லுங்கோ அம்மா என்ன பேசப் போறீங்கள்”. எனச் சிரித்தபடி தாயை அணைத்தான் அஜி. “தம்பி! நான் புதுசா என்னத்தைப் பேசப் போறன் எல்லாம் உன்ர கலியாணம் பற்றித்தான். அப்பாவும் அதைப்பற்றிப் பேசி முடிவெடுக் கத்தான் காத்திருக்கிறார்.

நாங்கள் கேக்கிறதுக்கு நீ உன்ர விருப் பத்தைச் சொல்லு.

உன்ர சிநேகிதி மேனிசா உனக்கு நல்லாப் பிடிச்சவள் தானே, ஆரம்பப் பாடசாலையில படிக்கிற காலத்திலை இருந்து சினேகிதம். அவையின்ர குடும்பமும் நல்ல குடும்பம். உன்னை அவைக்கும் நல்லாப் பிடிக்கும். நீங்கள் இப்பிடி ஒற்றுமையாச் சிநேகிதமாத் தொடரு றீங்கள். நீ அவளைத் திருமணம் செய்து வாழ்க்கைத் துணையாக்கித் தொடரலாமே. அதுதான் எங்கட விருப்பமும். எனக்கும் அப்பாவுக்கும் அந்தப் பிள்ளையை நல்லாப் பிடிச்சிருக்கு நீ ஓமெண்டா இந்தவருசமே திருமணத்தை முடிக்கலாம்” என மூச்சுவிடாமல் பேசி முடித்தாள் தாய்.

“அம்மா ! மேனிசா எனக்கு நல்ல சிநேகிதி தான். எங்கள் இருவருக்கும் இடையில் ஒருத் தருக்கு ஒருத்தர் பேசாத விசயமே இல்லை. அப்படி எல்லாவற்றையும் பேசிப் பகிர்ந்து கொள்ளுவம். ஆனால் அதுக்காக அவளைத் திருமணம் செய்யமுடியுமா?” என்றான்.

“ஏன் அவளுக்கு என்ன குறை”, அழகா, அறிவா, அமைதியாகத்தானே இருக்கிறாள் என்றார் தாய்.

“அம்மா! திருமணத்துக்கு இது போதாது அம்மா! மனங்கள் பொருந்தவேணும். அப்ப தான் அந்த வாழ்க்கை சந்தோசமாகத் தொடரும்” என்றான் அஜி.

**“நீயேன் அவளோட பிறகும் சிநேகிதம் வைச்சிருக்கிறாய்?**

**அப்பிடியான ஆளை வீட்டுக்கும் கூட்டி வாறா?”**

**எனக் கோபப்பட்டார் தாய்.**

**“அம்மா! அது அவவின் விருப்பம், உரிமை, அதற்காக எங்கள் நட்பை ஏன் நிறுத்தவேணும்?...”**



“திருமணம் முடிஞ்சா எல்லாம் மாறும். நீ ஓமெண்டு சொல்லு, நாங்கள் மிச்சத்தைப் பேசுறம்.”

“அம்மா உங்களுக்கு எல்லாம் விளக்கமாகச் சொல்ல வேணும். அவளுக்கு ஆண்களைத் திருமணம் செய்யப் பிடிக்கவில்லை. அவள் ஒரு லெஸ்பியன் (lesbian ஓரினச் சேர்க்கையாளர்)” என்றான் அஜி.

“என்ன மகன் சொல்லுறா?” தாயின் குரலில் பதட்டம் நிறைந்திருந்தது. நானும் திகைத்துத் தடுமாறினாலும், அசைவற்று இருந்தேன்.

அஜி தொடர்ந்தான், “ஆம் அம்மா! அவள் ஒரு லெஸ்பியன்” என்றான்.

தாயார் மனம் கொதித்து “நீயேன் அவளோட பிறகும் சிநேகிதம் வைச்சிருக்கிறாய்? அப்பிடி யான ஆளை வீட்டுக்கும் கூட்டி வாறா?” எனக் கோபப்பட்டார் தாய்,

“அம்மா! அது அவவின் விருப்பம், உரிமை, அதற்காக எங்கள் நட்பை ஏன் நிறுத்தவேணும்? இப்ப நாட்டில இதெல்லாம் சட்டமாகவும், சம்பிர தாயமாகவும் ஏற்றுக்கொள்ளப்பட்டிட்டுது. நீங்கள் தான் மாறவேணும். நீங்கள் சொன்ன மனப் பொருத்தம், விட்டுக்கொடுப்பு, புரிதல் எல்லாம் நண்பர்களிடத்திலயும் இருக்கிறதாலதான் எங்கள் நட்பும் தொடர்கிறது இவ்வளவு நேர மும் மேனிசாவின் இயல்புகளைப் பற்றிப் புகழ்ந்து பாராட்டினனீங்கள் சட்டென்று மாறி விட்டீங்கள். அவவின் நல்ல மனம் அப்பிடியே தான் இருக்கு. நாங்கள் சிறிய வயதில் இருந்து பறிமாறிய அன்பு, ஒருவருக்கு ஒருவர் உதவிக் கைகொடுத்த நினைவுகள் எல்லாம் அப்படியே இருக்கிறது. இப்பவும் அவளுக்கு ஒண்டென்றால் நான் ஓடிப்போய் உதவிசெய்வேன், அதேபோல எனக்கு ஏதாவது பிரச்சனைகள் வந்தால், மேனிசாவும் எனக்காய் வருவாள். ஆனால் அவளின் ஆசாபாசங்கள் வேறு, நட்பு என்பது வேறு. அவளின் சொந்த வாழ்கையில் நாங்கள் மூக்கு நுளைக்கக் கூடாது. எங்கட வேலையை நாங்கள் பாப்பம்” என்றான் அஜி.

“சரி சரி இதோட இந்தக்கதையை நிப்பாட் டுங்கோ. அஜிக்காக இனியொரு பெண் பிறக்கப்போறதில்லை, கால நேரம் கைகூட அவனுக்கு பொருத்தமான ஒருத்தி வருவாள் அதுவரையும் பொறுத்திருப்போம். நீங்களும் போய் வேலையைப் பாருங்கோ” என்றவாறு எழுந்து சென்றார் முரளி. இந்தப் பிள்ளைகளுக்கு எவ்வளவு உயர்ந்த மனம். எல்லாத்தையும் புரிந்துணர்வோட லேசா எடுத்துக் கொள்ளு கினம். மனிதர் என்றால் அவர்களுக்கு எனத் தனிப் பட்ட குணநலங்கள் இருக்கும் என்பதை உணர்ந்து, புரிந்து அவர்களை அப்படியே ஏற்றுக்கொள்ளப் பழகிவிட்டார்கள். அப்படியே ஏற்றுக்கொண்டால் வாழ்க்கையில் எந்தப் பிரச்சனையும் வராது. எங்களால் இது முடியுமா? நாங்கள் அவர்கள் தனிப்பட்ட வாழ்க்கையை எடைபோடுகிறோம். எங்கள் நடைமுறைகளும் காலத்துக்கு ஏற்றபடி மாறவேணும் எங்களால் முடியுமா? எனத் தனக்குள் பேசியபடி தொடர்ந்தாள் மலர். “கடவுள் அமைத்து வைத்த மேடை இணைக்கும் கல்யாணமாலை இன்னார்க்கு இன்னார் என்று எழுதி வைத்தானே தேவன் அன்று.” அஜி சத்தமாகப் பாடியபடி உள்ளே போனான்.

○○○

# உயிர்ப்பு...

விதியோடு தன் பலவீனம் மறைக்கும்
மனிதனுக்காக
ஆங்காங்கே சில கண்ணீர்த் துளிகள்....
விட்டுச் சென்ற நதி
போன இடம் தெரியவில்லை!
கண்ணீரைத் திருடுகின்ற சூரியன்
நீந்தி மகிழ்கிறது
இரவின் நிழலில் நிலவு!
தொலைந்து போகும் நதியின் சுவடுகளை
மீட்டெடுக்கும் முயற்சியில்
மரங்களின் உயிர்ப்பு
கோடரிகளின் எதிர்ப்பையும் மீறி....!

**கனகசபாபதி செல்வநேசன் (அல்வாய்)**

# சாஹித்யரத்னா தமிழ்மாமணி அல் அஸூமத்



"இவ்வருடம் சாஹித்யரத்னா அங்கீகாரமானது தமிழ்மாமணி அல் அஸூமத் அவர்களுக்கு வழங்கப்பெற்றுள்ளது. இவரது இலக்கியப் பிரவேசம் 1958இல் வீரகேசரியில் ஒரு சிறிய விடுகதையுடன் ஆரம்பமானது. 1964இல் வீரகேசரியில் வெளிவந்த "பூவின் காதல்" எனும் சிறுகதைமூலம் படைப்புலகில் தனது பெயரைப் பதிவாக்கிக் கொண்டார். இவர் கேரள மாநிலத்தைச் சேர்ந்த இராமன் நாயருக்கும் மாரியாயிக்கும் மாத்தளையில் 1942ஆம் வருடம் பிறந்தவர்.

அஸூமத் அவர்கள் கடந்த ஆறு தசாப்தங்களுக்கும் மேலாக, கவிதை, சிறுகதை, நாவல், கட்டுரை, மொழிபெயர்ப்பு, நூல் வெளியீடு என பல்துறைகளில், தனது ஆற்றல்களை வெளிப்படுத்தி வரும் பன்முக ஆளுமையாளர். அமார்க்க வாசம் (நாவல்), அறுவடைக் கனவுகள் (நாவல்), புலராப் பொழுதுகள் (குறுங் காவியம்), வெள்ளை மரம் (சிறுகதைகள்), அவள் பெய்கிறாள் (மொழிபெயர்ப்புச் சிறுகதைகள்), புலராப் பொழுதுகள் (கவிதை), மலைக்குயில் (கவிதை), குரல்வழிக் கவிதைகள் (கவிதை), பிலால் (மொழிபெயர்ப்புக் கவிதை), இஸ்லாமிய வரலாறு (மொழிபெயர்ப்பு), யாப்பியலுரை (இலக்கணம்) ஆகிய நூல்கள் உள்ளடங்கலாக இதுவரை 18 நூல்கள் வெளிவந்துள்ளன. 20இற்கும் மேற்பட்ட நூல்கள் அச்சுவாகனம் ஏறத் தயாரான நிலை யில் உள்ளன.

"பூபாளம்" எனும் கவிதைக்கான காலாண்டு சஞ்சிகை உட்பட "பௌர்ணமி" எனும் பெயரில் றோணியோ சஞ்சிகை ஒன்றையும் "முகில்" எனும் அச்சிதழ் ஒன்றையும் சில வெளியீடுகள் வெளிக்கொண்டுவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

யாப்பிலக்கண ஆளுமையோடு, கவித்துவ வல்லமையுங் கொண்ட அஸூமத், நபிகள் (ஸல்) அவர்களின் பொன்மொழிகளை இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட குறள் வடிவில் எழுதியுள்ளார்.

தமிழ் இயல் முயற்சிகளுக்கு அப்பால் ஓவியம், இசையார்வம், வானொலி நிகழ்ச்சிகள், தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், மேடை நாடகம், கவிதா நிகழ்வுகள், வில்லுப்பாட்டு, சினிமா என அல் அஸூமத் அவர்களின் முயற்சிகள் நீள்கின்றன. குறிப்பாக புல்லாங்குழல், தபேலா, டோலக் ஆகிய இசைக்கருவிகளையும் இசைக்கும் ஆற்றல் பெற்றவர்.



இலங்கை வானொலி முஸ்லிம் சேவையில் "கவிதைச்சரம்" எனும் நிகழ்ச்சியை அல் அஸூமத் நடாத்தினார். இதன் பயனாய் பல இளந்தலைமுறைக் கவிஞர் இவரது வழிகாட்டலால் உருவாகினர். இந்நிகழ்வின் அறுவடையாக 468 இளங் கவிஞர்களின் 585 கவிதைகளை அடக்கிய "கவிதைச்சரம்" எனும் கவிதைத் தொகுதியைத் தனது சொந்தச் செலவில் அச்சேற்றி வெளியிட்டு இளந்தலைமுறைப் படைப்பாளி களை இலக்கிய உலகிற்கு அறிமுகஞ் செய்தார்.

ஞானம் சஞ்சிகை 149ஆம் இதழில் (ஒக்டோபர் 2012) அல் அஸூமத் அவர்களை அட்டைப்பட அதிதியாக கௌரவித்தது.

சாஹித்யரத்னா விருதுபெற்ற அஸூமத் அவர் களை ஞானம் அன்புடன் வாழ்த்தி மகிழ்கிறது.

**– ஞானம்**

சிறுகதை

# சூனியம்





**மலரன்பன்**

**ரோ**ஜா செடி இரண்டடிக்கு மேல் வளர்ந்து நடுத்தண்டு வளைந்து உச்சியில் பூத்திருந்த பூ தரையை முத்தமிட்டவாறு இருக்கின்றது. தடியொன்றினை ஊன்றி நடுத்தண்டை துணி பட்டியொன்றினால் கட்டினால் சரி. நுவரெலியா வுக்கு போனபோது கொண்டு வந்த கன்று. கத்தியை எடுத்துக்கொண்டு தோட்டப் பக்கம் போய் கிளேரியா மரத்தின் கிளையொன்றினை வெட்டி தடியை தோல் சீவிக் கொண்டிருக் கின்றேன்.

“மாத்தியா! மாத்தியா!”

ரோடு பக்கம் வேலி முட்கம்பியைப் பிடித்த வாறு கொலனி வில்பட்

“என்ன விசயம் வில்பட்?”

நானும் சிங்களத்தில்.

“மாத்தியா தேங்கா புடுங்க இருக்கா?”

தேங்காய் பிடுங்க இன்னும் இரண்டு வாரங்க ளுக்கு மேல் இருக்கின்றது. இரண்டு மாதங் களுக்கு ஒரு முறை இரண்டு குலை வெட்டலாம்.

“என்ன மாத்தியா யோசிக்கிறீங்க?”

காலையில் மனைவி கண்டியிலுள்ள மகள் வீட்டிற்கு புறப்பட்டு போனபோது சொன்னது நினைவுக்கு வருகின்றது.

‘...ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழா இருக் கின்றது தெரியும்தானே. பூஜை செய்யவும், உடைப்பதற்கும், வீட்டுத் தேவைக்கும் ஒரு மரத்தில் தேங்காய் பிடுங்கி வையுங்கள்....”

மனைவி திரும்பி வர இரண்டு மூன்று நாட்கள் ஆகலாம்.

“வில்பட் பின்பக்கம் கேட் திறந்து இருக்கு. வா ஒரு மரத்தில் மட்டும் பிடுங்கலாம்.”

“ஒரு மரம் மட்டுமா நாலைந்து மரங்கள் பிடுங்குவோம்”

“தேங்காய் பிடுங்க இன்னும் நாளிருக்கு அவசரத்துக்காகத்தான் அதுவும்.....”

பின் கேட் வழியாக வந்தவனின் கையில் மரமேறும் தடை வலையம்.

வீட்டோரமுள்ள மரத்தில் பத்துப் பன்னி ரண்டு காய்களைப் பிடுங்க பத்து நிமிடமாவது போயிருக்காது.

“தேங்காய்களை பொறுக்கி ஒரு இடத்தில் போடு.”

“இல்ல மாத்தியா அவசரமா போகனும் வேற எங்கேயாவது தேங்கா புடுங்க. காசு குடுத்தீங்கன்னா போயிருவேன்.”

வீட்டுக்கு போய் இருநூறு ரூபாய் கொண்டு வந்து கொடுத்தேன்.

காசைப் பெற்றுக்கொண்ட அவசரம் வேக வேகமாகப் போகிறான். மரமேறும் போது அணிந் திருந்த பழுப்பு நிற டீ சேர்ட்டை காணவில்லை. கழற்றி சுருட்டி இரண்டாக மடித்துள்ள சாரத் தினுள் போட்டிருக்கிறான் போலும். சாரத் தினுள் பொதிபோல தொங்குவது டீ சேர்டாக இருக்கலாம் நினைத்துக் கொள்கின்றேன்.

தேங்காய்களை பேக்கில் போட்டு வீட்டில் கொண்டு போய் சேர்த்தேன். மொத்தம் பதினாலு.

கத்தியையும் தடியையும் வைத்திருந்த இடத்துக்கு போகிறேன். தடியின் பக்கத்தில் வைத்திருந்த கத்தியைக் காணவில்லை. சுற்றிவர தேடுகின்றேன். கத்தி கிடைக்கவே இல்லை. தோட்டத்தில் மிளகு கொடிகள்

படர்ந்து வளர்ந்திருக்கும் கிளேரியா மரங்களில் வருடத்திற்கு ஒருமுறை வளர்ந்திருக்கும் வாதுகளை கவ்வாத்து வெட்டுவதற்காக வாங்கிய கத்தி, உருக்கில் செய்தது. ஆயிரத்து எழுநூறு ரூபாய்.

வில்பட்டை தவிர யாரும் வரவில்லை. கத்தி மறைந்த மாயமென்ன! கோழிகள், வாழைத்தார், பாக்கு, மிளகு, தேங்காய் என சிறு களவுகள் பெருத்து போனது சாராயத்தவறனை ஊருக்கு வந்ததன் பின்னரே.

கத்தி காணாமல் போய் இரண்டு நாட்கள் கடந்து விட்டன. ரோட்டோர முன் கேட்டைத் திறந்து நிற்கின்றேன் தபால்காரனை எதிர் பார்த்தபடி. வில்பட் வருகின்றான்.

"வில்பட் எங்க பயணம்?"

"சந்திக்குப் போறேன் மாத்தியா."

"அந்தி நேரத்தில தானே பாருக்கு போவ. இன்றைக்கு வெள்ளனவே என்னா போறியே?"

"பாருக்கு அந்திக்கு போனா ஒரே கச்சால் மாத்தியா. தண்ணிய போட்டுட்டு சும்மாவே மேலுக்கு வருவானுகா.. போத்த வாங்கிட்டு போறேன். சாராயமும் வெல கூடிரிக்கி. ஆயிரம் ரூபா. வீட்டுல கொண்டு போய் குடிப்பேன்."

"வில்பட் நான் உன்னய விசாரிக்கனுமின்னு இருந்தேன். ரெண்டு நாளைக்கு முதல்ல நீ தேங்கா பிடுங்கின. அன்றைக்கு கிளேரியா மரத்து தூருல நான் வச்சியிருந்த கவ்வாத்து கத்திய காணல்ல. ஆயிரத்து எழுநூறு ரூபாய் வில்."

"மாத்தியா நான்னா கத்திய கண்ணால கூட காணல."

"அன்றைக்கு அதுக்குப் பிறகு யாரும் வரவே இல்ல..."

"கொலனில களவானி இருக்கிறானுக தான். நான் களவெடுக்கிற ஜாதி ஆள் இல்ல. வேண்டிய ஆளுக கிட்ட விசாரிச்சு பாருங்க. ஒரு கேஸ் கீசுன்னு பொலிசுக்கு போனதில்ல..."

"நீ கத்திய காணவே இல்லையா?"

"சத்தியமா நான் காணவே இல்ல...."

"அன்றைக்கு உன்னைத் தவிர யாரும் இந்தப் பக்கம் வரவே இல்ல! சரி அப்படின்னா நான் ரன்தெனிய கட்டாடி (மந்திரவாதி) கிட்ட போய் சூனியம் செய்ய வேண்டியதுதான். வேற வழியில்ல."

"ரந்தெனிய கட்டாடி கிட்டயா?"

"ஆமா நீ ரன்தெனிய கட்டாடி பத்தி கேள்வி பட்டிருக்கிறியா?"

"அவர பத்தி எனக்கு மட்டுமில்ல. முழு கொலனி ஆளுகளுக்கும் நல்லா தெரியும். அவர் வழக்கு வெல்ல சூனியம் செய்து குடுப்பாரு. பொம்பல வசியம் செய்வாரு. அவர் சூனியம் செய்தா செய்ததுதான். கத காலி."

"வில்பட்டுக்கு ரந்தெனிய கட்டாடிய பத்தி நல்லாவே தெரியும் போல."

"கொலனில மரம் ஏற்ற பேமாவுக்கும் ஜினேவோட பொண்டாட்டி லூஸி நோனாவுக்கும் கள்ளத தொடர்பு இருந்திருக்கு. ஒருநாள் தென்ன மரத்திலயிருந்து பேமா விழுந்து செத்துட்டான். ஜினே ரன்தெனிய கட்டாடி கிட்ட சூனியம் செய்ததுல தான் பேமா செத்ததுன்னு கொலனில எல்லாரும் பேசிக்கிட்டாங்க." ரன்தெனிய கட்டாடி சூனியம் செய்ததுதான்.

"அப்படின்னா நானும் சூனியம் செய்ய வேண்டியதுதான்."

"மாத்தியா ரன்தெனிய கட்டாடி செத்து ஒரு வருசத்துக்கு மேலே இருக்குமே."

வெற்றிலைக் காவி படிந்த பற்கள் தெரிய சிரிக்கின்றான்.

"அவரோட சிஷ்யன் கோலயா இப்ப சூனியம் செய்யிராரு."

"அவரோட கோலயா சூனியம் செய்ராரோ?"

"ரன்தெனிய கட்டாடி அவருக்கு தெரிஞ்ச எல்லா மந்திர சாஸ்திரங்களையெல்லாம் சிஷ்யனுக்கு படிச்சி குடுத்திருக்காரு.""

"அப்படியா"

"ரன்தெனிய கட்டாடி மாதிரிதான் சிஷ்யனும் சூனியம் செய்தா செய்தது தான்."



"இருக்கும் இருக்கும் ரன்தெனிய லேசு பட்ட ஆள் இல்லயே."

"எனக்குத் தெரிஞ்ச ஒரு மாணிக்கக் கல் முதலாளியோட மாணிக்க கல்ல அங்க வேல செய்த ஒருத்தன் திருடிட்டான். களவெடுத்தத குடுத்திரு நான் ஒன்னும் செய்யமாட்டேன்னு முதலாளி ஒரு தரத்துக்கு பத்து தரம் சொல்லி யிருக்காரு. நான் எடுக்கவே இல்லன்னு அவன் சத்தியம் பண்ணியிருக்கான். மூனு நாள் டைம் குடுத்திருக்காரு முதலாளி. அவன் ஒத்துக் கொள்ளவே இல்ல. முதலாளி ரன்தெனிய கட்டாடியோட சிஷ்யன் கிட்ட போய் சூன்யம் செய்திருக்காரு. அவ்வளவுதான் ஏழாவது நாள் மாணிக்க கல் தோண்டுற நேரம் குழி இடிஞ்சி விழுந்து அவன் குழி உள்ளுக்கே செத்துட்டான்."

"நெசமாவா?"

"அப்புறம் பொய்யா! நானும் இன்னம் மூனு நாள் கழிச்சி அவர்கிட்ட சூனியம் செய்யப் போறேன்."

போகிறேன் என்று கூட சொல்லாமல் மௌனமாக அங்கிருந்து போகிறான் வில்பட்.

மந்திரம், பில்லி சூனியம், ஏவல். பேய், பிசாசு, பூதம் இவைகளில் எனக்கு சிறுவயதி லிருந்தே எந்த நம்பிக்கையும் இருந்ததில்லை. ரன்தெனிய கட்டாடியின் சிஷ்யனும் மாணிக்க கல் திருட்டு என்பதெல்லாம் எனது வெறும் கட்டுக்கதை என்பதை வில்பட் அறிய மாட்டான்.

காலை முன் கேட்டைத் திறக்க செல் கின்றேன். காணாமல் போன எனது கத்தி கேட்டுக்கு உள்ளே கிடக்கின்றது.

○○○

# தீபங்கள் ஏற்றிடுவோம்

**கவிஞர் அகளங்கன்**

தீபங்கள் ஏற்றிடுவோம்.
திருநாளைப் போற்றிடுவோம்.
தீபாவளித் திருநாளைச்
சிறப்புறவே வாழ்த்திடுவோம்.

தீபஒளி தேசமெங்கும்
சிறப்புகளைத் தந்திடட்டும்
பாபவழி நீங்கிஎங்கும்
பலநன்மை பெருகிடட்டும்.

அறியாமை இருளகல
அறிவுஒளி ஏற்றிடுவோம்.
வறியவர்கள் வாழ்வுபெற
வழிவகைகள் சாற்றிடுவோம்.

சமணமதத் தீர்த்தங்காரர்
மகாவீரர் முத்திபெற
சமணர்கள் இந்தநாளை
தீபஒளித் திருநாள்என்றார்.

சோழமன்னன் இராஜேந்திரன்
கங்கைவரை வெற்றிகொண்ட
நாளைஅன்று தீபம்ஏற்றி
நம்தமிழர் விழாஎடுத்தார்.

நாட்டுமக்கள் துன்பமுற்று
நடுநடுங்கத் துன்பத்திலே
போட்டுவைத்து உலகையாண்டான்
போரில்வல்ல நரகாசுரன்.

பட்டினியில் படுகுழியில்
பதைபதைத்து உயிரொடுங்க
கட்டளைக்கு அடிபணிந்து
காசினியோர் கவலையுற்றார்.

இட்டதுதான் சட்டம் அவன்
இஸ்டமெதோ அதைச்செய்தான்.
பட்டதுயர் கொஞ்சமல்லப்
பரிதவித்துத் துடிதுடித்தார்.

உலகைக்காக்கும் ஒருகடவுள்
ஓங்கி உலகளந்தவராம்
அலகைதனைக் கொன்றுபாம்பில்
ஆடிஅதை அடக்கியவர்.

குடைஎனவே மலைபிடித்து
கூட்டத்தோடு பாதுகாத்து
படைநடத்திப் பாண்டவர்க்குப்
பாருலகைக் கொடுத்தவராம்.

பாம்பணையில் பள்ளிகொள்ளும்
பரந்தாமன் கிருஷ்ணனாய்
நாம்வணங்க ஓடிவந்தான்
நரகாசுரனை அழித்தொழித்தான்.

துன்பஇருள் நீங்கியதே
தூய்மைஅன்பு ஓங்கியதே
இன்பஒளி ஏற்றிஉலக
இந்துமக்கள் விழாக்கண்டார்.

சிறுகதை



# ஒரு வாசல் திறந்ததென்று நினைத்தாயோ



ஏ.ஏ.ஹெச்.கே.கோரி

அப்போலோ ஆஸ்பத்திரியில், டொக்டர், இருதயத்தின் வால்வில் கசிவிருக்கிறது, வால்வ் செயலிழந்துகொண்டிருக்கிறது என்றும், வால்வை மாற்றியே ஆக வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

“பிக்கோட வால்வ் தான் சரியாப் பொருந்தும். பிக் வால்வ வச்சிருவோமா சார்?”

“பிக்ன்னா டொக்டர்?”

“பிக்ன்னா ஸ்வைன். தமிழ்ல சொன்னா, பன்றி.”

“டொக்டர், மனிசனுக்குப் பன்றி வால்வா?”

“அதான் ஸூட் ஆகும்.”

“டொக்டர், நா முஸ்லிம். பன்றி எங்களுக்கு ஹராம்.”

“சார், நீங்க முஸ்லிமா?”

“ஆமா டொக்டர், அதில என்ன ஆச்சர்யம் ஒங்களுக்கு!”

“ஆனா, சார், ஒங்க மிஸஸ் பொட்டு வைத்த முகமோன்னு இருக்காங்களே, அதான் கேட்டேன்.”

“அதுவா டொக்டர், நாங்க மதத்தால வேறுபட்டவங்க, மனசால ஒன்றுபட்டவங்க.”

“கிரேட் சார்! ஒங்க மிஸஸ்ஸோட கொரல், எனக்குப் பரிச்சயமான கொரல் மாதிரித் தெரியுது, ஆனா எப்படின்னு தெரியல.”

“ஸிம்பிள் டொக்டர். நீங்க ரேடியோக் கேப்பீங்களா?”

“கேப்பேனாவாவது! ரேடியோதான் எனக்குப் பொழுதுபோக்கு. அதுக்கு மேல, சின்ன வயசில யிருந்து நா ஒரு ரேடியோ சிலோன் பைத்தியம் சார்!”

“அப்ப, எண்ட மிஸஸ்ஸோட கொரல நீங்க ரேடியோ சிலோன்ல கேட்டிருப்பீங்க டொக்டர். எண்ட மிஸஸ், ரேடியோ சிலோன் அறிவிப்பாளர்.”

“ஆஹா, டபுள் கிரேட் சார். அவங்க பேர நா சொல்லட்டுமா?”

“சொல்லுங்க டொக்டர்.”

டொக்டர், பெயரைச் சொன்னார்.

மிகச் சரியாய்ச் சொன்னார்.

கூடுதலாய், “சார், அந்த இனிமையான கொரலுக்கு நா ஒரு விசிறி சார்” என்று டொக்டர் புளகாங்கிதமடைந்தபோது, அவருக்கு மேல் புளகாங்கிதமடைந்து, இவன், படுக்கையிலிருந்து தலையை உயர்த்தி நிமிர்ந்து அமர்ந்தான்.

“சார், நீங்க எந்திரிக்கக் கூடாது. படுங்க.”

“சும்மா ஒரு அஞ்சு செகண்ட் டொக்டர். நா கொலரத் தூக்கிவிட்டுட்டுத் திரும்பவும் படுத்துக்குறேன்.”

இவன் கொலரைத் தூக்கிவிட்டுக் கொண்டிருந்தபோது மனைவி அறைக்குள்ளே பிரவேசிக்க, பரவசத்துடன், டொக்டர், அவளை நோக்கிக் கைகூப்பியதோடு, “அஸ்லாமு அலைக்கும் மேடம்” என்று ஒரு சலாமும் வைக்க, “இவர் சொல்லிட்டாரா டொக்டர்?” என்று அவள் சிரித்தாள்.

“நா ரேடியோ சிலோன்ங்கறதையும் சொல்லியிருப்பாரே?”

“அவர் சொல்றதுக்கு முந்தி நானே கண்டு புடிச்சிட்டேன் மேடம்! நா ஒங்களோட பேன் மேடம்!”

உற்சாகத்தின் உச்சியிலிருந்த டொக்டர், இலங்கை வானொலியில், மயில்வாகனன் கலக்கிக் கொண்டிருந்த, ஆதிகாலத்து இசைக் களஞ்ஜியத்தில் ஆரம்பித்து கே.எஸ். ராஜா, பி.எச்.அப்துல் ஹமீத் காலம் வரையிலான, ஜோடி மாற்றம், பாட்டுக்குப் பாட்டு, இசையும் கதையும், திருப்பிப்பார், இன்றைய நட்சத்திரம், அன்றும் இன்றும், ஈழத்துப் பாடல்கள், பொங்கும் பூம்புனல், புது வெள்ளம், நினைவூட்டுகிறோம் பாட்டுக்கென்ன பதில் என்று, பள்ளிப் பிராயத்திலிருந்து இவர் ரசித்த நிகழ்ச்சிகளையெல்லாம் பற்றி, மலரும் நினைவுகளோடு கதைத்துவிட்டு, “சரி மேடம், இப்ப சாரோட பிரச்சனைக்கு வருவோம்” என்று, சப்ஜெக்ட்டை மாற்றினார்.

“ஹார்ட்ல சாருக்கு வால்வ மாத்தியே ஆகணும் மேடம், பன்றியோட வால்வ்தான் ஸூட் ஆகும். ஆனா, சார் சம்மதிக்க மாட்டேங்கறார்.”

“நானுங்கூட சம்மதிக்க மாட்டேன் டொக்டர், இவர் இந்த வரும் ஹஜ்ஜுக்குப் போகணும் எண்டு ஒரு ப்ளான் வச்சிருக்கார். பன்றியோட வால்வ வச்சிக்கிட்டு ஹஜ்ஜுக்கெல்லாம் போகேலாது டொக்டர். வேற ஆல்ட்டர்நேட்டிவ் இருக்குமே டொக்டர்?”

“இருக்கு மேடம். மெட்டல் வால்வ் வக்கலாம். ஆனா, இன்பக்ஷன் ஆகாம கவனமா இருக்கணும். கும்பல்ல போகாமப் பாத்துக்கணும். ஹஜ்ஜுக்குப் போறார்ன்னு வேற சொல்றீங்க. அங்கக் கூட்டமாயிருக்கும்....”

“அதெல்லாம் அல்லா பாத்துக்குவான் டொக்டர். நீங்க மெட்டல் வால்வே வச்சிருங்க”.

மார்ச், 1999.

உலோக வால்வ் பொருத்திய புதிய இருதயத்தோடு சென்னையிலிருந்து கொழும்புக்குத் திரும்பியவன், ஏற்கனவே பதிவு செய்து வைத்திருந்த ஹஜ் குழுவோடு புனித மக்கா நோக்கிக் கிளம்ப ஆயத்தமானபோது, மனைவி கண்கலங்கினாள்.

“இந்தக் கண்டிஷன்ல, இப்ப நீங்க ஹஜ்ஜுக்குப் போய்த்தான் ஆகணுமா?”

“போய்த்தான் ஆகணும்மா, போறது போறது தான். இப்ப விட்டா, எப்பவுமே நா ஹஜ்ஜுக்குப் போய்க்கிர மாட்டேன். ஒங்கிட்ட ஒரு உண்மையைச் சொல்லட்டுமா?”

“ம்.”



“இது 1999. ரெண்டாயிரத்தப் பாக்க நா இருக்க மாட்டேன்.”

“இப்படியயல்லாம் கதைக்காதீங்க.”

“சரி, கதைக்கல. எங்க பாப்பம், வீர பாண்டிய கட்டபொம்மன் சிவாஜி கணேசனை எஸ். வரலட்சுமி போருக்கு வழியனுப்பி வச்ச மாதிரி என்னை ஹஜ்ஜுக்கு வழியனுப்பி வைய்ங்க.”

“போருக்குப் போன கட்டபொம்மன் திரும்பி வரவேயில்ல.”

“ஆனா, இன்ஷா அல்லா, நா திரும்பி வருவேன். எனக்கு ஒண்டும் இப்ப அவசரமில்ல.”

ஹஜ்ஜில் வைத்து, அல்லாவிடம் துஆ வைத்தான்.

“அல்லா, என்னுடைய ஆயுளை நீட்டித்துக் கொடு” என்றெல்லாம் துஆக் கேட்கவில்லை.

“அல்லா, நான் ரெடி” என்றான்.

“அன்பான, அருமையான வாழ்க்கைத் துணைவியை எனக்குத் தந்து ஆசீர்வதித்தாய் அல்லா. வடிவான மூண்டு பிள்ளைச் செல்வங்களையும் கொடுத்தாய். வாழ்க்கையின் பாதாளத்தில் கிடந்த என்னை உச்சத்துக்குத் தூக்கி விட்டாய். படிப்பறிவில்லாமலிருந்த ஒரு பாமரத் தொழிலாளியை ஒரு தொழிலதிபனாய் உயர்த்தி விட்டாய். உழைக்கிறவன், உண்மையாவன், நேர்மையானவன், நாணயமானவன் என்று, எல்லா நல்ல பெயர்களையும் எனக்குப் பெற்றுத் தந்தாய். நான் வாழ்ந்து விட்டேன் அல்லா. எனக்குப் போதும் என்று நான் நினைக்கிறேன். எனக்குப் போதும் என்று நீயும் நினைத்தால், என்னை அழைத்துக்கொள். ஆயுளை நீட்டித் தருகிறேன் என்று இந்த இருதய நோயை நீட்டித் தந்து, மேலும் என்னைப் படுக்கையில் கிடத்தாமல் என்னைக் கூட்டிக் கொள். ஒரு நல்ல மனிதனாக, நல்ல முஸ்லிமாக நான் வாழ்ந்து விட்டேன். இஸ்லாமின் இறுதிக்

கடமையையும், உன்னுடைய கிருபையினால், இதோ நான் நிறைவேற்றி விட்டேன் அல்லா, இதோ நான் ரெடி.''

ஹஜ் கடமையை நிறைவேற்றிவிட்டுக் கொழும்புக்குத் திரும்பியவன், காய்ச்சலோடு வந்து சேர்ந்தான். டொக்டர் எச்சரித்திருந்த இன்பெக்ஷன் இவனை தாராளமாய் ஆக்கிர மித்திருந்தது. கொழும்பில் இவனைப் பரிசோதித்த டொக்டர், திரும்பவும் சென்னைக்குத்தான் போக வேண்டுமென்று கைவிரித்துவிட, திரும்பவும் சென்னைக்குப் பயணம். உடனடித் தேவை, பணம். பல லட்சங்கள்.

தனக்கு மிஞ்சித்தான் தானமும் தர்மமும் என்கிற கஞ்சத்தனத்தைக் கொஞ்சமும் மதிக்காத வனுக்கு, இருதய சத்திரசிகிச்சைக்காகப் பணம் தேவைப்பட்டபோது, கடனாக உதவுவதற்கு ஓர் உறவினர் கூட முன்வரவில்லை, எல்லோரும் சென்னைக்கு வந்து பார்த்துச் சென்றதோடு சரி.

இலங்கை வானொலியின் நேயரான, இவனுடைய மனைவியின் விசிறியான அந்த அழகான டொக்டர் இப்போது அப்போலோவில் பணியில் இல்லை.

அப்போலோவில், ஐ ஸி யு வில், அல்லாவை நினைத்துக்கொண்டு, கண்களை மூடிக்கொண்டு படுத்திருந்தான்.

செலவு, பல லட்சங்கள் ஆகும் என்றாலும், இவனுக்கும், இவனைச் சார்ந்தவர்களுக்கும், ஏன், மருத்துவர்களுக்கோ மருத்துவமனை களுக்கோக்கூட அப்போது தெரிந்திருக்காத ஆறுதல் ஒன்று இருந்தது.

நிர்மலா சீத்தாராமனென்றொரு கெடுபிடிப் பெண்மணி அப்போது இந்திய நிதியமைச் சராயிருக்கவில்லை. ஐ ஸி யு வுக்குக் கூட ஜி எஸ் டி வசூலிக்கிற அபத்தங்களெல்லாம் அரங்கேறியிருக்காத நல்லாட்சிக்காலம் அது!

கண்களை மூடிக்கொண்டு படுத்திருந்தவனின் மனத்திரையில், இவனுடைய வாழ்க்கை வரலாற்றுத் திரைப்படம் ஓட ஆரம்பித்தது.

இந்தியாவிலும் இலங்கையிலும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் ஆட்சி நடந்துகொண்டிருந்த காலம் அது. தஞ்சாவூர் முத்துப்பேட்டையில், நிரந்தரத் தொழிலில்லாமல், நிரந்தர வருமான மில்லாமலிருந்த தந்தைக்கு, மூத்த பிள்ளையான இவனை எட்டாவது வகுப்புக்கு மேலே படிக்க வைக்க வசதியில்லாத வறுமையில், பதினாலே வயதான இவன், வீட்டை விட்டு ''ஓடிப்போக'' முடிவெடுத்தான்.

ஓடிப்போய், எங்கே போய்ச் சேர்வது? சிலோன் என்றொரு சொர்க்கபுரி இருக்கிறதாமே,

அங்கே போனாலென்ன? சிங்கப்பூரை செதுக்கியயடுத்த, சிங்கப்பூரின் தந்தை என்று அறியப்படுகிற,

லீ க்வான் யூ, ''சிங்கப்பூரை நானொரு சிலோனாக மாற்றப் போகிறேன்'' என்று கனவு கண்டுகொண்டிருந்த காலம் அது.

சிலோன் என்கிற இலங்கையும் இந்தியாவும் ஒரே பிரிட்டிஷ் சாம்ராஜ்யமாயிருந்ததால் பாஸ்ப் போர்ட்டோ விஸாவோ தேவையில்லை என்பது வலுவசதி. ஆனால், இலங்கைக்கு, ''ஓடிப்போக'' வெல்லாம் இயலாது. நீந்தித்தான் போக வேண்டும்.

அல்லா, எதற்காக நீந்த வேண்டும்? தனுஷ் கோடியிலிருந்து தலைமன்னாருக்குக் கப்பல் சேவை இருந்தது. கப்பல் சேவையயெல்லாம் இருந்தது, காசுதான் வேண்டும். இவனைப் போல, காசில்லாதவர்களுக்கென்று தோணிகள் இருந்தன. வேதாரண்யத்திலிருந்து யாழ்ப் பாணத்துப் பூநகரிக்குக் குறுக்கு வழியில், ஒரே மணித்தியாலத்தில் போய்ச் சேர்ந்துவிடுகிற தோணிகள். தோணியயொன்றில் ஏறிப் பூநகரி யில் வந்திறங்கியவனுடைய கண் முன்னே பரந்து விரிந்து கிடந்த எதிர்காலம் இருளடைந்து கிடந்தாலும், அந்த இருளிலும் இவனை வழிநடத்திச் செல்ல ஓர் ஒளிக்கீற்று தென்படும் என்கிற நம்பிக்கை இருந்தது.

வயிற்றை நிரப்புவதற்கு, வாழ்க்கையைத் துவங்குவதற்கு, எந்த வேலையும் செய்யச் சித்த மாயிருந்த இவனுக்கு, சில்லறைக் கடைகளில் சில்லறை வேலைகள் கிடைத்தன. சில்லறை வேலைகள் கொடுத்த துரைமார்கள் எல்லோரும் இவனிடம் தவறாமல் கேட்ட கேள்வி, ''தம்பி, எது வரக்யும் படிச்சிருக்கிறாய்?''

வயிற்றை நிரப்பிக்கொண்டிருந்தால் மட்டும் போதாது, துவங்கிய வாழ்க்கையைத் தொய் வில்லாமல் நடத்திச் சென்று ஓர் ஒளிமயமான எதிர் காலத்தைச் சென்றடைய வேண்டுமென்றால், முதலில் கொழும்பு மாநகரத்தைச் சென்றடைய வேண்டும், கொழும்புக்குப் போய், கல்வித் தரத்தை உயர்த்திக்கொண்டால்தான் ஒளி மயமான எதிர்காலம்.



நாங்க புதுசாக் கட்டிக்கிட்ட ஜோடி
தானுங்க
நல்லப் பாட்டுப் படிக்கும்
வானம்பாடி தானுங்க

**என்று, தனித்தனியாய்ப் பாடிக்கொண்டு, எத்தனை நாளைக்கு ரெண்டு பேரும் பிரிந்திருக்க இயலும்?**

கொழும்பு என்கிற கனவு நகரத்துக்கு, கனவுகளோடும், நம்பிக்கையோடும் வந்து சேர்ந்தான். கல்விப் பாரம்பரியமிக்க ஸாஹிராக் கல்லூரியின் இரவுப் பாடசாலையில் இடம் கிடைத்தது.

பகலில் பலசரக்குக் கடையொன்றில் விற்பனையாளர் வேலை, இரவில் பாடசாலையில் படிப்பு. படிப்பிலிருந்த ஆர்வமும், அயராத உழைப்பும், ஒளிமயமான எதிர்காலம் பற்றிய கனவும் உந்தித்தள்ள, தமிழ் மொழிப் பாடத்தில் சிறப்பு சித்தியோடு பத்தாம் வகுப்பில் தேறிய சாதனையை நிகழ்த்த அல்லா அருள் புரிந்தான்.

கல்வித் தகுதி உயர்ந்துவிட்ட பின்னால், சுதந்திரன் பத்திரிகை அச்சகத்தில் பகுதி நேர வேலையொன்று கிடைத்தது. பகலில் பல சரக்குக் கடை, இரவில் பத்திரிகை என்று ஆகிப்போனது.

அச்சுக் கோக்கிற வேலையும், பிழை திருத்துகிற பணியும்.

பிழை திருத்திக்கொண்டிருந்தவனை கலை நிகழ்ச்சியொன்றைக் காண அழைத்துப் போனார் ஸி.பி.எம். காசிம். இலங்கை வானொலியின் பிரதான நாடகாசிரியரான சானாவுடைய இயக்கத்தில் மேடையேறிய பதியூர் ராணி என்கிற நாடகத்தைப் பார்க்க, லயனல் லெண்ட் த்யேட்டருக்கு இவனை அழைத்துச் சென்றார். அந்த நாடகத்தில் வில்லனாய் நடித்த ஸி.பி.எம்.காசிம், வில்லத்தனமில்லாத நல்ல காரியமொன்றைச் செய்தார். அந்த நாடகத்தில், பதியூர் ராணியாக, கதாநாயகியாக நடித்த அழகியை இவனுக்கு அறிமுகம் செய்து வைத்தார்.

இவனுடைய வசீகரத்தையன்றி, அந்தக் கதாநாயகிக்கு இவனிடம் பிடித்துப்போன விடயங்கள் ஏராளமாய் இருந்தன. இவனுடைய இளகிய மனது, வாய்மை, கடின உழைப்பு, தமிழார்வம் இவற்றோடு, சதா சர்வ காலமும் கையில் ஒரு புத்தகத்தை இவன் வைத்திருந்த வாசகத்தன்மை அவளை வசீகரித்தது.

சந்திப்புகள் அடிக்கடி நடந்தன. அவளுக்கும், இவனைப் போலவே தமிழின் மேலே வெறி இருந்தது. இருவரும் ஒன்றாய் மேடை நாடகங்களில் பங்கு பெறுகிற நல்ல காரியங்கள் நிகழ்ந்தன. நாடகங்களுக்கு அப்பாலும் உரையாடல்கள் நடந்தன.

"இன்னிக்கி என்ன புஸ்தகம் கைல வச்சிருக்கீங்க?"

"குறிஞ்சி மலர்ம்மா."

"நா பாக்கலாமா?"

"ஓ, தாராளமா. இதோ, கொண்டு போங்க. சும்மாப் பாக்காதீங்க, படிச்சிப் பாருங்க. ஒங்களுக்குப் புடிக்கும்."

கொண்டு போனாள், பார்த்தாள், படித்துப் பார்த்தாள், பிடித்துப்போனது. அவள் ரசித்த வாக்கியங்களையெல்லாம், அவளுக்கு முந்தியே இவன் அடிக்கோடிட்டிருந்தது அவளுக்கு மிகவும் பிடித்துப்போனது.

இருவரது ரசனையும் ஒத்துப் போனதைப் போல, இருவரது மனங்களும், இயல்பாகவே ஒத்துப் போயின. அவளுக்கு இவன் மேலே அனுதாபமாய் ஆரம்பித்த அன்பு, காதலாய் மலர்ந்து கொண்டிருந்தது.

குறிஞ்சி மலரை இவனிடமிருந்து இரவல் வாங்கி வாசித்துவிட்டுத் திருப்பித் தருகிறபோது, "அந்தப் பூரணி கேரக்டர் எனக்கு ரொம்பப் புடிச்சிருக்கு. ஒங்களுக்கு?" என்று அவள் கேள்வியொன்றை வைக்க, "எனக்கும் தான்" என்று மறுமொழியளித்த இவன், தொடர்ந்து, அவளை

நாணமுறச்செய்கிற வாக்கியமொன்றை எடுத்து விட்டான்.

"நீங்க தானம்மா எனக்குப் பூரணி."

❍

ஆத்மார்த்த நண்பர்களுடைய உதவியோடும், அவர்களுடைய முன்னிலையிலும் சாட்சிக் கையெழுத்துக்களோடும், பதிவுத் திருமணம் இனிதே நடந்தது. இருவருக்கும் பத்து வருட வயது வித்தியாசம் என்பது பெரிதாய்த் தெரிய வில்லை. வீட்டுக்குத் தெரியாத திருமணம் என்பதால், திருமணத்துக்குப் பிறகும் பிரிந்தே இருந்தார்கள் இருவரும். அவள், அவளுடைய வீட்டில் அப்பா அம்மாவோடு, இவன் இவனு டைய அறையில், தன்னந்தனியாக.

நாங்க புதுசாக் கட்டிக்கிட்ட ஜோடி தானுங்க
நல்லப் பாட்டுப் படிக்கும் வானம்பாடி தானுங்க

என்று, தனித்தனியாய்ப் பாடிக்கொண்டு, எத்தனை நாளைக்கு ரெண்டு பேரும் பிரிந் திருக்க இயலும்?

இவர்களுக்கு இந்தப் பிரிவினை உவப்பில் லாதிருந்த மாதிரியே, இந்த லட்சியத் தம்பதி மேலே பிரியம் கொண்டிருந்த நல்லவர்கள் சில ருக்கும் இது உவப்பானதாயிருக்கவில்லை.

கலாநிதி கார்த்திகேசு சிலத்தம்பி, இந்தத் தம்பதிகளோடு தமிழால் இணைந்திருந்தவர். அவருடைய தங்கையும் அப்படியே. கலாநிதி. கா. சிவத்தம்பியுடைய தங்கையும் தங்கையின் கணவரும் கதாநாயகியுடைய வீட்டுக்கு சமாதானத் தூது போனபோதுதான் அவளுடைய பெற்றோ ருக்கு விடயம் தெரிய வந்தது. "மதத்தைப் பார்க்கா தீங்கோ, மனசைப் பாருங்கோ" என்று, தாதுக்குழு எடுத்து வைத்த நியாயம், அம்மாவிடம் எடுபட வில்லை. அம்மாவின் கையால் அவளுக்கு அடி உதைதான் கிடைத்தது. அடி உதையோடு, கதையும் வதையும் முடியவில்லை. "இப்பவே எறங்கு" என்று வந்த அன்னையின் ஆணைக்கு அடிபணிந்து, படியிறங்கினாள். உடுத்தியிருந்த உடுப்புகளோடேயே விட்டைவிட்டு வெளியேறி, இவனிடம், கணவனிடம் வந்தவள், அடுத்த நாளே தாய் வீட்டுக்குத் திரும்பி வந்தாள்.

அடித்தாலும் உதைத்தாலும் நான் உந்தன் பிள்ளை.

"அம்மா, ஒங்களுக்கு மகள் வேண்டாம். ஆனா, எனக்கு அம்மாவும் அப்பாவும் வேணும்."

பெற்றோருடைய கோபம், புத்திரிபாசத் துக்குத் தலைவணங்கி ஒதுங்கிக் கொள்ள, படியிறங்கச்சொன்ன அம்மா, மனசிறங்கி, அவளை அரவணைத்துக்கொள்ள, பிறந்த வீடும் "புகுந்த வீடும்" என்று அவள் ரெட்டை வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருந்தபோது, கதாநாயகி யுடைய அண்ணனே இவர்களுக்கு வில்லனாக வந்து வாய்ப்பான் என்று, கதாநாயகியோ, கதாநாயகனான இவனோ கற்பனைகூடப் பண்ணி யிருக்கவில்லை.

இவர்களுடைய கற்பனைக்கெட்டியிராத வில்லத்தனம் வேலை செய்து, கள்ளத்தோணியில் இந்தியாவிலிருந்து வந்து இலங்கையில் கள்ளத்தனமாய்க் குடியேறியவன் என்கிற குற்றச்சாட்டில், பொலிஸ் பிடித்துக்கொண்டு போய், இவனைக் கொம்பினித்தெரு சிறையில் அடைத்துப்போட்டது.

கதாநாயகி, அப்போதுதான் ஒரு காவியத் தலைவியாய் விஸ்வரூபம் எடுத்தாள். கொம்பினித் தெருவுக்கு ஆங்கிலத்தில், Slave Island என்று பெயர். ஸ்லேவ் ஐலண்டைத் தமிழ்ப்படுத்தினால், "அடிமைத் தீவு" என்றிருக்க வேண்டும். அந்த அடிமைக் தீவில்தான் இவனை அடிமைப்படுத்தி, சிறைப்படுத்தி வைத்திருந்தார்கள்.

சிறையதிகாரிகளைக் காவியத் தலைவி, ஒரு சிம்மமாய் எதிர்கொண்டு, ஆணித்தரமான வாதங்களை, சிங்களத்தில் முன் வைத்தாள்.

"எனக்குக் கூடப் பூர்வீகம் இந்தியாதான் சேர். கேரளா. இந்தியாவும் இலங்கையும் ஒரே ஆட்சியிலிருந்த அந்தக் காலக்கட்டத்தில், கள்ளத் தோணிக் கலாச்சாரமே உருவாகியிருக்கவில்லை. எல்லாத் தோணிகளுமே நல்ல தோணிகள் தான். வல்லவர்கள் கப்பலிலும் வறியவர்கள் தோணியிலும் வந்து கொண்டிருந்த காலம் அது. ஒரு வேளை, இலங்கைக் குடியுரிமை இல்லாமல் இங்கே குடியிருக்கிறவன் என்று நீங்கள் என்னுடைய தலைவனைத் தடுத்து வைத்திருக் கிறீர்களென்றால், இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு, மலையகத்துத் தேயிலைத் தோட்டங்களில் உழைத்துக் கொண்டிருக்கிற அத்தனை எஸ்டேட் தொழிலாளிகளையும் நீங்கள் கைது செய்ய வேண்டும். அவர்கள் யாருக்குமே இலங்கைக் குடியுரிமை கிடையாது."

❍

விடுதலை பெற்று வீட்டுக்குத் திரும்பிய பிறகு, இன்னுமொரு விடியலும் நடந்தது.

நூர்தீன் என்கிற தொழிலதிபருடைய நட்பு கிடைத்தது, அவரோடு பார்ட்னராய் இணைந்து, ஒரு ஹார்டுவேர் கடை தொடங்குகிற நல்ல காரியம் நிகழ்ந்தது.

தொடர்ந்து, இன்னொரு நல்ல விடயமும் நடந்தது. அது, காவியத் தலைவி கர்ப்பமுற்ற அழகான நிகழ்வு.

அவசரப் பிரசவச் செலவுக்கு, இந்தப் பங்குதாரன், கடையிலிருந்து எடுத்த 3500, அந்த, மற்ற பங்குதாரரால் வேறே கண்ணோட்டத்தில், விரோதமாய்ப் பார்க்கப்பட்டது.

"எண்ட நோலட்ஜ் இல்லாமல் 3500 எடுத்தவர், இதுக்கு முந்தி, எனக்குத் தெரியாமல் எத்தனை ஆயிரம் எடுத்தீரோ...."

அந்த வியாபார ஒப்பந்தம் முறிந்து போனது கூட ஒரு நல்லதுக்குத்தான். பங்குதாரருடைய சந்தேகத்துக்கு ஆளாவனானாலும், சந்தையில் இவனுக்கு நல்ல பெயர் இருந்தது. இவனுடைய வாய்மை, நேர்மை, நாணயம், கடின உழைப்பு வாடிக்கையாளரை வசீகரிக்கிற உபசரிப்பு, வடிவான விற்பனைத் திறமை, எல்லாம் மார்க்கெற்றில் இவனுக்கு ஓர் அங்கீகாரத்தையும் நல்ல பெயரையும் பெற்றுத்தர, தன்னந்தனியாக ஒரு கடை ஆரம்பிக்க ஒரு வழி பிறந்தது, முதல் போடாமலேயே.

"நாங்க சரக்கு தர்றோம் தொர. நீங்க வித்துப்போட்டு சாவகாசமா சல்லியக் குடுங்க. ஒங்க மேல எங்களுக்கு நம்பிக்கை இருக்கு."

❍

மனைவியுடைய பெயரில் திறக்கப்பட்ட இரும்புக் கடையில் நல்ல வியாபாரம். விற்காமல் தேங்கிக் கிடக்கிற சரக்கு எல்லாம் இந்த மனிசனுடைய கை பட்டால் விற்றுத் தீர்ந்துவிடும் என்கிற நற்பெயரும் நம்பிக்கையும் மொத்த வியாபாரிகளுக்கு ஏற்பட, சரக்குகள் வந்து குவிந்து, விற்றும் தீர்ந்தன. அப்துல் ஜப்பார் மாலத்தையில், இவனுடைய கடை, பஜாருக்கு வெளியே இருந்தது என்பது ஒரு பின்னடையாகவே தெரியவில்லை.

கடவுள் எப்படியெல்லாம் உதவி செய்கிறார் என்று பரவசமாயிருந்தது. அப்போது, ஒரு பங்குதாரர் இவனைக் கள்ளனென்று இகழ்ந்தார். இப்போது, பல வியாபாரிகள், நல்லவனென்று புகழ்கிறார்கள். "நீங்க வித்துத் தாங்க தொர, எங்களுக்கு அவசரமில்ல" என்று இவனை உயர்த்திப் பிடிக்கிறார்கள்.

சுகவீனமுற்றிருந்த மாமனார் காலமான போது, தந்தைக்கு ஒரு மகன் செய்ய வேண்டிய இறுதிக் காரியங்களையெல்லாம் இந்த மருமகனே செய்து, இவனுடைய மாமியாருக்கு ஒரு மகனாக, ஒரு மகானாக ஆனான்.

வாழ்க்கை வசீகரமாய் மாறிப்போன மாதிரியிருந்தது. அந்த வசீகரத்தை மேம்படுத்துகிற சம்பவமொன்றும் நிகழ்ந்தது.

பிரமாண்டமான உலோக வலை ரோல்கள் ஒரு முப்பது, ஞானம் நிறுவனத்தின் வசம் இருந்தன. காலஞ்சென்ற நிறுவனரால் கொள்வனவு செய்யப்பட்ட சரக்கு. அவை என்ன ரோல்கள், எதற்கு பிரயோஜனப்படும், யாரிடம் விற்கலாம், என்ன மதிப்பு இருக்கும், என்கிற ஞானம், அந்த ஞானம் நிறுவனத்தில் யாருக்குமே இல்லாத நிலையில், இவன் எந்தச் சரக்கையும் விற்றுக் காசாக்கி விடுகிற விண்ணன் என்கிற நம்பிக்கையில் இவனை அணுகினார்கள்.

இவன் அதை ஒரு சவாலாக ஏற்றுக்கொண்டு, அந்த முப்பது உலோக வலைச் சுருள்களையும் இவர்களுடைய வாடகை வீட்டின் பின்புறத் தோட்டத்தில் பத்திரப்படுத்தினான். சரக்கு பத்திரமாயிருந்ததேயொழிய அதை விற்பனை செய்வதற்கான வழியயதுவும் புலப்படவில்லை.

"இத என்ன செய்யப் போறீங்க?" என்று மனைவி கேட்டபோது, "ஆண்டவன் ஒரு வழி காட்டுவான்" என்பது இவனுடைய பதிலாயிருந்தது. கேள்வி கேட்ட மனைவிக்கே ஒரு விடையும் உதித்தது.

வலைச் சுருள்களைச் சிறு சிறு துண்டுகளாய்க் கத்திரித்தெடுத்து, பள்ளிப் பிள்ளைகளுடைய புத்தகப் பைகளுக்கு ஒரு வண்ணமயமான பிற்சேர்க்கையாய்த் தைத்து சந்தைப் படுத்தினாலென்ன என்கிற மனைவியுடைய ஐடியா ஓரளவுக்கு வெற்றியைத் தந்தாலும், முழு வெற்றி, இவர்களுடைய இரும்புக் கடைக்கு, கம்பி வாங்கவென்று வந்த, ஆண்டவன் அனுப்பி வைத்த ஒரு வாடிக்கையாளர் மூலமாய் வந்து சேர்ந்தது. "என்ன மஹாத்தயா, இந்த வலைய ஸ்கூல் பேக்கல வச்சித் தச்சி விணாக்குறீங்க!" என்று வியப்படைந்தார் அந்த வாடிக்கையாளர்.

"தொர, இது தேயிலை எஸ்டேட்ல தேயிலைய நிழல்ல உலர வக்கிறதுக்காக யூஸ் பண்ணுவினம். நீங்க இந்த அபூர்வமான வலைய ரோல் ரோலா வேஸ்ட் பண்ணிட்டிருக்கீங்க."

"அப்படியா சேர் சொல்றீங்க, இதோ நா எஸ்டேட்டையயல்லாம் கான்ட்டாக்ட் பண்றேன்."

“பண்ணுங்க மஹாத்தயா. சரி, இப்ப நா வாங்கின கம்பிகளுக்கு பில் எவ்வளவு ஆச்சு எண்டு சொல்லுங்க.”

“பில்லா? பில்லே இல்ல. நீங்க ஒரு சதம் கூடத் தர வேண்டாம்!”

உடனடியாய் இவன், மனைவியுடைய உதவியோடு, செயலில் இறங்கினான். டெலிஃ. போன் டைரக்டரியைப் புரட்டி, எஸ்டேட் முதலாளி களுடைய எண்களையெல்லாம் தொடர்பு கொண்டு, ஆர்டர்கள் பெற்று, முப்பது ரோல் களையும் விநியோகித்து முடித்தான். வினியோகித்து முடித்து விட்டு, ஞானம் நிறுவனத்தைத் தொடர்பு கொண்டபோது, அவர்கள் பிரமித்துப் போனார்கள்.

“சரி மொதலாளி, நா வாங்கின ரோல்களுக்கு பில் எவ்வளவு ஆச்சு எண்டு சொல்லுங்க.”

“பில்லா? பில்லே இல்ல. நீங்க ஒரு சதம் கூடத் தர வேண்டாம்!”

ரோல்களை விற்றுக் கைக்கு வந்த தொகை, இந்தப் பரோபகாரியை சும்மா இருக்க விடவில்லை. வலை கொடுத்த வாழ்க்கையை இறைவனுக்கு அர்ப்பணித்தான். மேற்குக் கடற்கரையில், நீர்கொழும்புப் பக்கம், உடப்பு கிராமத்தில் பள்ளிவாசல் ஒன்றைக் கட்டினான். பள்ளிவாசல் சாலைக்கு மறுபுறம், பாழடைந்த நிலையிலிருந்த அம்மன் கோவிலைப் புதுப்பித்தான். மனைவி, அம்மன் கோவிலுக்குப் போன போது, இவனும் உடன் போய், கை கட்டிக் கொண்டு, பின்னால் நின்றான். மடு மாதாக் கோவிலில் கரடுமுரடாயிருந்த தரையில் புதிதாய்த் தளம் அமைத்துக் கொடுத்தான்.

பள்ளிவாசல் திறப்பு விழாவுக்குத் தலைமை தாங்கிய, இலங்கை வானொலி முஸ்லிம் சேவையின் பணிப்பாளர் வி.ஏ. கஃபூர், இவனுடைய இறைப் பணியைக் கொண்டா டினார்.

‘செல்வம் வருகிறபோது, எந்த மனி தனும் தனக்கென சொந்தமாய் ஒரு வீடு கட்டிக்கௌ்வதில்தான் முதலில் கவனம் செலுத்துவான். ஆனால், தனக்கென ஒரு இல்லம் கட்டிக்கொள்ளாமல், முதல் வேலையாக இறையில்லம் ஒன்றை நிர்மாணித்த இவர் உயர்ந்து நிற்கிறார். அல்லா இவருக்கு நல்லருள் புரிவான்.

பள்ளிவாசல் கட்டி முடித்து, அம்மன் கோவிலைப் புதுப்பித்து, மாதாக் கோவிலுக்குத்

# கவிதைப் பள்ளு

எடுத்து வாசிக்க மனமில்லாமல் சமையல்
அடுப்போடு போராடும்பலருக்குக் கவிதையேன்!
அடுத்து அடுத்து எழுதிக் குவித்தாலும்
படுத்துச் சாய்ந்து கட்டிலே கதியாகிறார்
வீட்டிலே சோர்ந்து இருக்காது சிலர்
பாட்டிலே வரிவரியாய் எழுதிக் குவிக்கிறார்.

OO

கருத்துடை வரிகளை அழகாக எழுதி
உருத்துடன் பெறுமதி நூலாக்குகிறார்
நெஞ்சில் முட்டி மோதும் உணர்வை
கொஞ்சு தமிழில் கோர்த்து மீட்கிறார்.
அஞ்சாது போட்டிகளில் எழுதிக் குவித்து
அர்த்தமுள்ள விருதுகள் அளவின்றிப் பெறுகிறார்.

OO

எங்கும் நூல்களைப் பரப்பி விதைக்கிறார்
எடுப்பார் இல்லையெனில் இலவசமாய்
விதைக்கிறார்.
கருத்து மலைகள் உயராவிடினும் முயற்சியால்
விருப்போடு நற்கருத்துகள் பொங்குகிறது
கருத்துகள் மளமளவெனத் தளிர் விடுகிறது
குறுஞ் சிரிப்புடன் கவித்தளிரிற்கு உரமிடுகிறார்.

OO

கவி நறுமணத்தில் உயிர்ப்புறும் சுவடுகள்
கடந்து போவதில்லை மனது நிறையும்.
கங்கு கரையின்றிக் கடலாகப் பொங்கும்
கடவுள் தந்த வாழ்வுப் புத்தகத்தில்
மொழியால் கவிப்பள்ளு வரைகிறேன்
அழியாத மடிப்புகளாய் மிதக்கும் சிறகுகளாய்.

OO

**கவியருவி – வேதா. இலங்காதிலகம்**
**[டென்மார்க்]**

தளம் அமைத்துத் தந்த புனிதப் பணிகளெல்லாம் நிறைவடைந்த பின்னால், இவன், கொசுறாய், வெள்ளவத்தையில், பத்தொன்பது பர்ச்சேஸில் காணி வாங்கி, சொந்த வீடொன்றும் கட்டி, மனைவியையும் பிள்ளைகளையும் வசதியாய்க் குடியமர்த்தினான்.

இப்படியாக, சோதனைகளையெல்லாம் வெற்றி கொண்டு சாதனைகளாய் மாற்றிய உத்தமனின் மேலே ஊராரின் கண் பட்டதோ என்னவோ, இருதய நோயால் பாதிக்கப்பட்டு, அப்போலோவில், ஐஸி யு வில், அல்லாவை நினைத்துக்கொண்டு, கண்களை மூடிக்கொண்டு படுத்திருக்கிறான்.

❍

கண்களை மூடிக்கொண்டு படுத்திருக்கிறவனுடைய மனத்திரையில் ஓடிக்கொண்டிருந்த இவனுடைய வாழ்க்கை வரலாற்றுத் திரைப்படம், “சுபம்” என்று நிறைவடைகிற இறுதி நிமிடத்தில், இவனுடைய உதடுகள் உச்சரிக்கின்றன:

லா இலாஹா இல்லல்லா

முஹம்மதுர் ரஸூலுல்லா.

உடம்பு முழுவதும் பொருத்தப்பட்டிருக்கிற குழாய்களின் சகிதம், இவனுடைய உடல் படுக்கையில் கிடப்பதை இவன் பார்க்கிறான்.

மூன்று நாட்களாய்ப் பார்க்கிறான். ஐ ஸி யு வுக்கு வெளியே, கதாநாயகியும் காவியத் தலைவியுமான இவனுடைய காதல் மனைவியும், வடிவான பிள்ளைகளும் கவலை தோய்ந்த முகத்தோடு காத்திருப்பது காணக்கூடியதாயிருக்கிறது.

மனிதாபிமான, மனிதநேய நர்ஸ் ஒருத்தி, அக்கம்பக்கம் பார்த்து, மனைவியுடைய காதருகில் குனிந்து, ரகசியமாய் முணுமுணுக்கிறாள்:

“அம்மா, உயிர் பிரிஞ்சி மூணு நாள் ஆச்சி. பெரிய பில்லாப் போடலாம்னு பாடியப் போட்டு வச்சிருக்காங்க.”

ஆஸ்பத்திரி பில், பெரிய பில்லாய் உச்சத்துக்குப் போவதற்கு முன்னால், இவனை விடுவித்துக் கொண்டு, சோகமயமான சூழலில், ஆம்புலன்ஸில் ஏற்றிக்கொண்டு முத்துப் பேட்டைக்குக் கொண்டுபோய் நல்லடக்கம் செய்துவிட்டு, கனத்த இதயங்களோடு மனைவியும் பிள்ளைகளும் கொழும்புக்கு விமானமேறுகிறார்கள்.

அம்மன் கோயிலுக்கு, வழிபாட்டுக்குத் தனியாய்ப் போன மனைவியிடம், “ஐயா வரலிங்களா அம்மா?” என்று கேட்கிற அர்ச்சகரிடம், “ஐயா கடவுள்கிட்ட போய்ட்டாருங்க ஐயா. பத்து நாள் ஆச்சு” என்று அவள் கண்கலங்க, அர்ச்சகரும் கண்கலங்குகிறார். கோவிலில் நாதஸ்வரம் முகாரி இசைக்கிறது. பின்னால், இவன், கைகளைக் கட்டிக்கொண்டு நிற்பது யாருடைய கண்களுக்குமே புலப்படவில்லை.

இவர்களுடைய கடைக்கு, கடனுக்கு சரக்குக் கொடுத்தவர்களெல்லாம் பணம் கேட்டு மனைவிக்குத் தொந்தரவு தருகிற போதும் இவனால் கைகளைக் கட்டிக்கொண்டு நின்று பார்த்துக் கொண்டிருக்கத்தான் முடிகிறது.

கடை மூடப்பட்டு, கடனுக்கு சரக்குக் கொடுத்தவர்களுக்கெல்லாம் ஓரளவு கடன் தீர்க்கப்பட்டாலும், கடனாளிகள் இன்னும் இருக்கிறார்கள். வசூல் செய்ய வரிசையில் நிற்கிறார்கள். மனைவி, அவகாசம் கேட்பது மூர்க்கமாய் மறுக்கப்படுகிறது.

“வூடு ஒண்டு இருக்குதானே நோனா, வூட்ட வித்து எங்களுக்கு சல்லி தாங்கோவன்.”

சில நேரங்களில் பலப்பல மனிதர்கள்.

வீடு விற்கப்பட்டு, கடன்களெல்லாம் தீர்க்கப்பட்ட பின்னால், மனைவிக்கு மன நிம்மதி. இவனுக்கும் தான்.

சரி, வேலை முடிந்துவிட்டது. இவனுக்கு வேளை வந்து விட்டது. எத்தனைக் காலத்துக்குத் தான் பூமிப் பரப்பில், பெயிலில் சஞ்சரித்துக் கொண்டிருப்பான்!

வானவர்கள் வழி நடத்திச் செல்ல, பூலோகத்தை விட்டுக் கிளம்பிவிட்டான்.

பிள்ளைகளுக்கு நிக்கா முடிந்து, மனைவி பேரன் பேத்தியெடுத்த உன்னதங்களையெல்லாம் க்லோஸ் அப்பில் பார்க்கக் கொடுத்து வைக்காவிட்டாலும், மேலுலகத்திலிருந்து அத்தனையையும் அவதானிக்கிறவனாகவும், ஆசீர்வாதங்கள் அளிக்கிறவனாகவும் இருக்கிறான்.

எண்பதைக் கடந்துவிட்டாலும் இவனுடைய காவியக் கதாநாயகி, இன்னும் ஒலிபரப்புத் துறையில் உழைத்துக்கொண்டுதானிருக்கிறாள். அவளுடைய இனிமையான தமிழ்க் குரல், பூலோகமெங்கும் கேட்கிறது.

பூலோகத்தை மீறியும் கேட்கிறது, இவனும் அந்தக் குரலைக் கேட்டு, பரவசங் கொள்கிறவனாயிருக்கிறான்.

❍❍❍

நூல் விமர்சனம்






# பாடல்களைப் பேசும் பணி



த.ஜெயசீலன்
பிரதேச செயலர்
பச்சிலைப்பள்ளி.

சமரபாகு சீனா உதயகுமார் அவர்களின் 18வது நூலாக “பாடல்களால் பேசுகின்றேன்” என்ற “திரையிசை பாடல்களில் இலக்கிய நயம்” என்ற வகுதிக்குள் வருகின்ற நூல் “குபேந்திரா பதிப்பக வெளியீடாக” அண்மையில் வெளிவந்திருக்கின்றது.

ஏற்கனவே கணிதம், கவிதை, சிறுகதை, பத்தி எழுத்துக்கள், நாவல், பல்சுவை, கல்வி, ஆகிய வகைகளைச் சேர்ந்த 17 நூல்களை வெளி யிட்டுள்ள ஆசிரியத்துறை உட்பட பல்பரிமான ஆளுமையுடைய சமரபாகு சீனா உதயகுமார் மேற் சொன்ன வகைகளிலிருந்து வேறுப்பட்டு தமிழ் திரையிசைப் பாடல்களை அடிப்படையாகக் கொண்ட இந்நூலை வெளியிட்டு இருக்கிறார்.

திரையிசை அல்லது சினிமா இசை என்பது ஜனரஞ்சகமானது, சாதாரணமானது, இலக்கிய, இசை அந்தஸ்த்து அற்றது, தீண்டத்தகாதது என்ற சிலரின் அறியாமை இருளைக் கலைக்கும் முதல் சுடர்விளக்கொளியாய் இந்நூல் வெளிவருவது மகிழ்ச்சிக்குரியது.

தமிழ் திரைஇசையின் புதிய வரலாறாக, பழமைக்கும் புதுமைக்கும் பாலமாக, கடந்த ஐம்பது ஆண்டுகளாக தமிழ்த்திரையிசை உலகத்திலும், பல்வேறு இசைப்படைப்புக்கள் மூலமாக சர்வதேச ரீதியிலும் பெரும்புகழ்பெற்று தனது 82வது வயதில் இன்றும் இசைத்துறையில் ஈடுபட்டு இயங்கி வரும் “இசைஞானி இளையராஜா” அவர்களுக்கு சமர்ப்பணமாக இந்நூலை வெளியிட்டிருக்கும் உதயகுமார் தன் அனுபவம் சார்ந்த, கடந்த காலங்களிலும் தான் பார்த்து கேட்டு சுவைத்த, தமிழ்த் திரையிசை பாடல்கள் பற்றியும், அவற்றை படைத்தவர்கள் பற்றியும், தன் தனிப்பட்ட விருப்பம் தெரிவு சார்ந்தும் ஒப்பிட்டு ரீதியாகவும் சிறியதும் பெரியதுமான 42 கட்டுரைகளை தொகுத்து இந் நூலாக வெளியிட்டிருக்கின்றார்.

இவர் இங்கு எடுத்தாண்ட அனேகமான பாடல்கள் 80 களிற்கு முன் வெளிவந்த “பழைய பாடல்கள்” என்று பொதுவாக எல்லோராலும் கருதப்படுகின்ற பாடல்களாகவே காணப்படுகின்றன. அவற்றின் இசை நுணுக்கங்கள், பாடகர்கள் பாடல்களை பாடிய முறைமைகள், பாடல் வரிகளிலிருந்த பொருத்தம், சிறப்புக்கள், என்பவை அனேக கட்டு ரைகளில் உள்வாங்கப் பட்டிருக்கின்றன. அத்துடன் 80ற்கு பின்னான இன்றுவரையுள்ள திரையிசைப் பாடல்களின் சில விடயங்களையும் கட்டுரைகளாக இவர் ஆக்கியுள்ளார்.



**சுமார் நூறு வருட வரலாறு கொண்ட தமிழ் திரையிசையில் அதிலும் முழுமையாக தமிழகத்திலிருந்து வெளிவந்த சினிமாப் பாடல்களைக் கேட்டு ரசித்து அவற்றை சிலாகிக்கும் அல்லது அத்திரையிசைப் பாடல்களின் இலக்கிய நயத்தைத் தேட அல்லது காண முயலும் படைப்புகளைக் கொண்டதான தொகுப்பு நூல்கள் வெளிவந்தது மிகக் குறைவு. இந்நூல் அக்குறைபாட்டை நிவர்த்தி செய்வதோடு இப்புதிய பார்வை ஈழத்திலிருந்து குறிப்பாக யாழிலிருந்து தோற்றம் பெற்றிருப்பது முக்கியமானதாக அமைகிறது.**

இந்நூலிலுள்ள கட்டுரைகள் அனைத்தும் அவருடைய தனிப்பட்ட விருப்பு வெறுப்பு, தெரிவு, ரசனையின், பாற்பட்ட கட்டுரைகளே. எனினும் அவற்றில் பெரும்பாலானவை அவரின் வயதை ஒத்த தலைமுறைகள் உட்பட இன்றைய திரையிசை பற்றி பெரும் அதிருப்தியில் இருக்கின்ற அனேகமானவர்களையும் ரசிக்க வைப்பவையாக அமைகின்றன. அத்துடன் அதிக ஆழமான, நுணுகிய ஆய்வு விடயங்களாக, தீவிர வாசிப்புக்குரியவையாக, அக் கட்டுரைகள் அமையாமல் குறித்த விடயங்களை மேலோட்டமாக சிலாகிப்பவையாக காணப்படுவதால் அவை வாசகர்களின் மூளைக்கன்றி இதயத்திற்கும் நெஞ்சிற்கும் நெருக்கமானதாகவும், சலிப்புத் தட்டாதவை யாகவும், அமைந்திருக்கின்றன.

இவருடைய கட்டுரைகளில் மெல்லிசை மன்னர் எம். எஸ். விஸ்வநாதன், கவியரசர் கண்ணதாசன், நடிகர் திலகம் சிவாஜி கணேசன், வாலிபக் கவிஞர் வாலி, இசைஞானி இளையராஜா, காதல் மன்னன் கமலஹாசன், இயக்குனர் சிகரம் பாரதிராஜா, கவிஞர் பஞ்சு அருணாச்சலம், கவிஞர் வைரமுத்து, கவிஞர் பழனி பாரதி, பல்துறை ஆற்றலாளர்களான கங்கை அமரன், T.ராஜேந்தர், போன்றவர்கள் வந்து செல்கிறார்கள்.

நூலில் இடம் பெறும் சில கட்டுரைகள் ஒரு படைப்பாளியுடன் இன்னொரு மறைந்த அல்லது வாழும் படைப்பாளியை ஒப்பீட்டு நோக்கில் அணுகி அவர்களின் படைப்புக்களிற்கு இடையிலுள்ள ஒற்றுமைகளையும் வேற்றுமைகளையும் பேசுபனவையாக அமைகின்றன. அவற்றில் வாலி - வைரமுத்து, வாலி - சோக்கிரட்டீஸ், வாலி-உருத்திரமூர்த்தி, விவேகசிந்தமணி,கண்ணதாசன் - கம்பன்-கண்ணதாசன் - கங்கை அமரன், போன்ற ஒப்பீடுகள் ரசிக்க வைக்கின்றன.

இவரின் சில கட்டுரைகள் திரையிசைப் பாடல்களில் விசேடமாக எடுத்தாளப்பட்ட விடயங்கள், பாடல்களின் உள்ளடக்க வேறுபாடு, இசையமைப்பாளர்களின் பாடலாசிரியர்கள், பாடகர்களின் தனித்துவ முத்திரைகள் என்பவற்றை நுணுக்கமாக அவதானித்துப் பேசுகின்றன.

சுமார் நூறு வருட வரலாறு கொண்ட தமிழ் திரையிசையில் அதிலும் முழுமையாக தமிழகத்திலிருந்து வெளிவந்த சினிமாப் பாடல்களைக் கேட்டு ரசித்து அவற்றை சிலாகிக்கும் அல்லது அத்திரையிசைப் பாடல்களின் இலக்கிய நயத்தைத் தேட அல்லது காண முயலும் படைப்புகளைக் கொண்டதான தொகுப்பு நூல்கள் வெளிவந்தது மிகக் குறைவு. இந்நூல் அக்குறைபாட்டை நிவர்த்தி செய்வதோடு இப்புதிய பார்வை ஈழத்திலிருந்து குறிப்பாக யாழிலிருந்து தோற்றம் பெற்றிருப்பது முக்கியமானதாக அமைகிறது.

இலக்கியத்தின் வெவ்வேறு வடிவங்களான கவிதை, சிறுகதை, நாவல், பத்தி எழுத்துக்கள்,

போன்ற பல்வேறு விடயங்களில் கடந்த இருபது வருடங்களுக்கு மேலாக ஈடுபட்டு ஊடாடி வரும் உதயகுமார் அவர்களின் இலக்கியப் பரீச்சயம், அவரின் அழகியல் அணுகுமுறை, அனுபவம் என்பன இந்நூல் ரசிப்பிற்குரிய ஒரு நூலாக வெளிவந்திருப்பதற்கு காரணமாகின்றது.

80களில் தமிழ் திரையிசையின் பயணத்தில் பாரிய திருப்புமுனை ஏற்பட்டது என்றால் மிகையில்லை. புதிய இசையமைப்பாளர்கள், புதிய கவிஞர்கள், புதிய பாடகர்கள், மண்ணோடு ஒட்டிய விடயங்களை கையாண்ட புதிய இயக்குனர்கள், புதிய கதைக்களங்கள், புதிய நடிகர்கள், மேக்- அப் முறை மாற்றங்கள், வானொலி, ரேப் ரெக்கோடர், இறுவட்டுகளின் அறிமுகம், என்பன புதிய மலர்ச்சியை பரிமாணத்தை படைமாற்றத்தைத் தமிழ் திரையிசையில் ஏற்படுத்தின. இது இந்திய சினிமாத்துறைக்கே முன்னுதாரணமாகவும் வழிகாட்டுவதாகவும் அமைந்திருந்தது. தூற்றிப் பழித்த வடக்கர்களும் தென்னக சினிமாவைப் போற்றிப் பின் தொடர்ந்தனர். இக்கால கட்டத்திலேயே தென்னக ஆளுமைகள் இந்தியா எங்கும் கோலோச்சத் தொடங்கினர்.

ஆனால் இன்று நவீன தொழில்நுட்ப வளர்ச்சி கணனி, இணையத்தள, சமூக ஊடக பாவனையாக மாற்றமடைந்தமையானது தமிழ்ச் சினிமாவிலும் திரையிசையிலும் கூட பாரிய மாற்றத்தை, தாக்கத்தை செல்வாக்கை ஏற்படுத்தியிருக்கிறது.

"தமிழ்ச் சினிமாவின் பொற்காலம்" எனப்படுகின்ற 80களில் இன்றிருப்பது போல ஊடகங்களின் பயன்பாடு இல்லாத போதும் கூட வேறு பொழுதுபோக்கு அம்சங்கள் அதிகம் கிடைக்காமையால் அத்தலைமுறையில் வாழ்ந்த அனேகமானவர்களுக்கு சினிமா சார்ந்த தகவல்கள் இலகுவாக வானொலி தொலைக் காட்சி சஞ்சிகைகளூடாகக் கிடைத்தது. அவர்களுக்கு அக்கால திரைத்துறை சார்ந்த விடயங்கள் அத்துப்படியாகத் தெரிந்தும் இருந்தது. அந்த கேட்டறிந்த விடயங்களே இந்நூலுக்கான அடிப்படைகளாகவும் ஆதாரங்களாகவும் அமைந்திருக்கின்றன.

80களில் தோன்றிய ஆளுமைமிக்க இசையமைப்பாளர்கள், பாடலாசிரியர்கள், பாட கர்கள், நடிகர்கள், இசைக் கலைஞர்கள், இயக்குநர்கள், போன்றோர் தமக்கு முன்பிருந்த தலைமுறையினரின் ஆற்றல் ஆளுமை எல்லைகளைத் தம் ஆற்றல் ஆளுமையினால் தாண்டிக் கடந்தாலும் அவர்களின் வழிநின்று அவர்களின் மேதா விலாசத்தை மதித்துப் பிரகாசித்தனர். ஆரோக்கியமான போட்டியுடன் வெளிவந்த அக்காலப் படைப்புக்கள் எல்லோராலும் மதிக்கப்பட்டதோடு அதற்கு முந்திய தலைமுறைப் படைப்புக்களோடு ஒப்பீட்டு ரீதியாகவும் ரசனை ரீதியாகவும் நோக்கப்பட்டது. இந்த நிலை இன்றில்லை.

இன்றைய காலத்தை விட அக்கால படைப்புக்கள் அனைத்து தரப்புக்களிடமும் சென்று சேர்ந்ததுடன் அவை அக்கால நினைவுகளை இக்காலத்திலும் மீட்டுபவையாக அமைந்திருப்பதும் அப்படைப்புகளின் மேன்மையையும் சிறப்பையும் காலங்கடந்து சமூகத்தில் பதித்த அழுத்தத்தையும் தெளிவாகச் சுட்டி நிற்கிறது.

வானொலியில் ஒலிபரப்பப்பட்டால் மட்டுமே கேட்க முடிந்த காலத்தில் பாடல்கள் பெற்ற வெற்றி இன்று ஆயிரம் வசதிகள், முன்னோட்டங்கள், விளம்பர உத்திகள், வாய்த்தபோதும் சாத்தியமாகவில்லை என்பது துரதிஷ்டவசமானது.

இன்றைய படைப்புக்கள் நவீன தொழில் நுட்பங்களை அதிகம் கொண்டு துல்லியத் தன்மை மிக்கவையாக இருந்தாலும் அவை விரைவில் காணாமற்போகும் தன்மையுடையவையாகவும், மனதில் ஒட்டாதவையாகவும், உயிரற்ற இயந்திரமயமானவையாகவும், எமது மண்ணோடும் வாழ்வோடும் இணங்காத அந்நியமானவையுமாகவுமே காணப்படுகின்றன.

தமிழ் சினிமா இசையில் இன்று ஏற்பட்டு இருக்கின்ற இந்தத் தேக்கம் சலிப்பு பழைய இசையை, பாடல்களை, அவற்றைப் படைத்த கலைஞர் கவிஞர்களை இன்றைய தலைமுறையும் தேடி இரசித்து அவற்றின் அவர்களின் மேன்மைகளைக் கொண்டாடும் நிலையையும் ஏற்படுத்தியிருக்கிறது.

இந்தச் சூழலில் சமரபாகு சி. உதயகுமாரின் கடந்த காலத்தை மீட்டிப் பார்க்க வைக்கும் ஆக்கங்களைக் கொண்ட இந்நூல் முக்கியமானதாகப்படுகிறது, வெறும் இரைச்சலையும், காதைக் கிழிக்கும் சத்தத்தையும், அர்த்தமற்ற வார்த்தைக் குவியல்களையும் கொண்டு, இயல்பான படைப்பாக்கத் திறனற்று, தொழில்நுட்பக் கருவிகளின் துணையை மட்டும் கொண்டு, எங்கெங்கோ இருந்து வெட்டி ஒட்டி கலந்து குழைத்து வெளிவரும் மனதோடு ஒட்டாத திரையிசைப் பாடல்களுக்கு மத்தியில் இதயத்தை மயிலிறகால் வருடி, தாய்மடியாய் இதமும் சுகமும் அள்ளி வழங்கி, அனேகமாக

இரவுகளில் அமைதி அருளி, மனச் சலனம் போக்கி, நிம்மதி நல்கித், தாலாட்டித் தூங்க வைக்கின்ற இசையையும் வரிகளையும் கொண்ட பாடல்களைப் பற்றிய இந்நூலின் பகிர்வுகள் வாசிக்கும் போது எமக்கும் ஆறுதல் தருகின்றன. எம்மை ஆனந்தப்படவும் வைக்கின்றன.

உதயகுமாரின் இரசிப்பனுபவம் எங்களையும் ஆட்கொண்டு விடுகிறது. இது இன்றைய கணணி இசை காதலர்களையும், நாளைய AI தலைமுறையினரையும் கூட கவரும் ஆட்கொள்ளும் என்பதே யதார்த்தம்.

எமது பண்பாட்டுச் செழுமையையும், எமது மண்ணுக்குரிய தனித்துவ கலாசார அடையாளங்களையும், எங்கள் வாழ்வியலின் அங்கங்களையும் காவிக்கடத்திய தமிழ்த் திரையிசைப் பாடல்களின் சிறப்பை பெருமைகளைச் சுட்டிக் காட்ட கட்டிக்காக்க உறுதுணை புரிந்திருப்பதே அல்லது அதற்கான சிந்தனை விதைகளைச் சமூகத்தில் தூவி இருப்பதே இப் “பாடல்களால் பேசுகிறேன்“ நூலின் பயன் மற்றும் வெற்றி என்று துணிந்து கூறுவேன்.

○○○

## உணவே மருந்தாக... - கஸ்ஸாலி அஷ்ஷம்ஸ்

நம் முன்னோர்கள் ஏன்
வைத்தியத்துக்காக
பைத்தியமாக அலையவில்லை?

உணவில் அமைந்திருந்தது
வைத்தியம்!

அதிகம் உண்டால்
அதிகம் நோயென்பதை
அறிந்திருந்தார்கள்!

வாரமொரு புரியாணி
அவர்கள் உண்டதில்லை
பிறைட் ரைஸ்"க்காக
கடைகடையாய் ஏறியதில்லை
கோலாவுக்காக
வீணீர் வடிக்கவில்லை!

சுவையூட்டிகளில் மயங்கி
ஆரோக்கியத்தை அவர்கள்
கெடுத்துக் கொண்டதில்லை!

ருசி ருசி எனச் சொல்லி
ரசித்து ரசித்து உண்டால்
கட்டிலே மனிதனுக்கு
தொட்டிலாகுமென்பதை
உணர்ந்து செயற்பட்டார்கள்!

சத்தான உணவுகளை
சுத்தம் பார்த்து உண்டதனால்
நச்சுப் பதார்த்தங்கள்
உணவில் கலக்கவில்லை!

ஏற்றமாகக் கருதியதெல்லாம்
வயதமைப்புக்கும் உடலமைப்புக்கும்
ஏற்ற உணவுகளையே!

உணவுக்கு
ஆகாரம் என்றும் பெயர்
காரணம்
அது ஆரோக்கிய வாழ்வின்
ஆதாரம்!

தாரமாக நினைத்து
தாறுமாறாக அனுபவிக்க நினைத்தால்
தூரப் போகும் உடலாரோக்கியம்!

சாப்பாட்டை
ஒரு பிடி
பிடித்தேன் என்கிறார்கள்
நோய் நம்மை
மறு பிடி பிடிக்குமென்பதை
மறந்தவர்களாக!

உணவு அமைய வேண்டும்
பாமஸி மருந்தாக......
உணவு அமைய வேண்டும்
ஆரோக்கியத்துக்கு விருந்தாக......

உணவு மிகைத்தால்
உணர்வு பகைக்கும்!

வளமான வாழ்வுக்கு
அளவான உணவே!

இருவேளை உணவே
இறுதித் தூதரின் அனுகுமுறையும்!

உண்போம் அளவாக!
வாழ்வோம் நலமாக!



சிறுகதை

# பெறா மக்கள்

எம்.எம்.எம்.இப்றாகீம்



மத்திய மாகாணத்தின் அந்த நகரில் உள்ள சகல நகைக்கடை உரிமையாளர்களினதும் கையடக்கத் தொலைபேசிகள் காலை ஆறு மணிக்கெல்லாம் அலறிக்கொண்டிருந்தன.

“சமது ஹாஜியார் மவுத்து..........”

“இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி றாஜிஊன்....”

“நேத்து நல்லாத்தானே கடையில இருந்து ஹாஜியார் போனார்..........”

“ஹாஜியார் வருத்தம் வாதையாவும் இரிக்கல்லையே......”

நகைக்கடை உரிமையாளர்களிடையே சமது ஹாஜியாரின் மவுத்துச் செய்தி வேகமாகப் பரவிக்கொண்டிருந்தது.

ஒரு தங்கப் பவுண் இருநூறு ரூபாவிற்கும் போது தங்க நகை வியாபாரத்துக்கு அறிமுகமானவர்தான் சமது ஹாஜியார். அதன் விலை மூன்று இலட்சம் ரூபாவரை உயர்ந்திருக்கும் இன்றுவரை சமது ஹாஜியாரிடம் உதவி பெற்று அந்தத் தொழிலில் ஈடுபடும் அனைத்து வியாபாரிகளும் சமது ஹாஜியாருக்கு நன்றிக் கடன்பட்டவர்கள்தான்.

பெரும்பாலான நகைக்கடை உரிமையாளர்களின் ‘ஐந்தொகையில்’ சமது ஹாஜியார் ஒரு ‘கிறெடிட்டர்’ ஆக நிரந்தர இடம் பிடித்திருந்தார். அவர்களை தொழில் ரீதியாகவும் முன்னேற்றி, வருமானவரித் திணைக்கள அதிகாரிகளிடமிருந்து பாதுகாப்புப் பெறுவதற்காகவும் திணைக்கள உத்தியோகத்தர்களிடம் தனக்கிருந்த செல்வாக்கை பாவித்து மறைமுகமாக அவ்வியாபாரிகளுக்கு உதவி செய்துகொண்டிருந்த ஒருவர்தான் சமது ஹாஜியார்.

சமது ஹாஜியாரின் வீட்டை நோக்கிய வாகனங்கள் நகரின் மத்தியில் தலைநிமிர்ந்து நிற்கும் இஸ்மாயில் மணிக்கூண்டுக் கோபுரத்தைத் தாண்டி ஓடிக்கொண்டிருந்தன.

சமது ஹாஜியாரின் வளர்ப்பு மகன் ‘மையித்தை’ வைத்தியசாலையிலிருந்து கொண்டு வருவதற்காக அவனது மனைவியின் உறவினர்களுடனும், நண்பர்களுடனும் தயாராகிக்கொண்டிருந்தான். சமது ஹாஜியாரின் மூன்று மாடி வீட்டின் மேல் தட்டில் இருந்த சமது ஹாஜியாரின் மகளை துக்கம் விசாரிக்க பெண்கள் மேல் மாடிக்கு ஏறிக்கொண்டிருந்தனர்.

சமது ஹாஜியாரின் மனைவி குடியிருந்த கீழ் மாடிக்குத்தான் ‘மையத்தை’ கொண்டுவர ஏற்பாடுகள் நடைபெற்றுக்கொண்டிருந்தன. கீழ்மாடியின் ஒரு மூலையில் அமைந்திருந்த ‘கராஜி’ல் சமது ஹாஜியாருக்கு மிகவும் பிடித்தமான அவரது ‘டொயோட்டா ஏலியன்’ கார் நிறுத்தப்பட்டிருந்தது.

வந்து குழுமியிருந்த உறவினர்களும் நண்பர்களும் வீட்டு முற்றத்திலும் வெளியிலும் போடப்பட்டிருந்த ‘பிளாஸ்டிக்’ கதிரைகளில் அமர்ந்தும் நின்றவாறும் இருவர் இருவராகவும் இரண்டு மூன்று பேராகவும் சேர்ந்து தமக்குள் உரையாடிக் கொண்டிருந்தனர்.

“சமது ஹாஜியார் சொகமில்லாம இருந்த செய்தி எனக்கு சுத்தமாவே தெரியாதே ஹாஜி.....” நவ்ஃபர் ஹாஜியார்தான் தன் ஏக்கத்தை வெளிப்படுத்தினார்.

"அவர் அப்பிடி படுக்கயில கெடக்கல்ல நவு.்.பர். ரெண்டு மாசத்துக்கு முந்தி ஒருக்கா சத்தியும் வயித்தாலயும் போன ஒடனே நேர்ஸிங் ஹோமுக்கு கொண்டுபோன. அடுத்தண்டே டிக்கட் வெட்டி கொண்டாந்து நல்லா இருந்த. கடைக்கெல்லாம் போய் வந்துக்கிட்டுத்தான் இருந்த…" இர்.்.பான் ஹாஜியார் விளக்கினார்.

"சமது ஹாஜியாருக்கு ஒரேயொரு புள்ள தானே….. அதுவும் பொம்புளப்புள்ள நல்ல வசதி யான எடத்திலே ஹாஜியார் கட்டிக் குடுத் தீக்கார்…. நான் கலியாணத்துக்கும், வலீமாக்கும் பெய்ட்டு வந்தன்தானே….." நவு.்.பர் ஹாஜியார் மய்யித்தை கொண்டு வரும் வரைக்கும் இர்.்.பான் ஹாஜியாருடன் கதைத்துக்கொண்டிருந்தார்.

"அது சரி ஹாஜி……. சமது ஹாஜியார் வளத்த பொடியன் ஒண்டு அவர்ட ஜுவலரி சாப்பில இருந்ததானே… அந்தப் பொடியன்ட கலியாணத்துக்கும் நான் போன." நவு.்.பர் ஹாஜியாருக்கு பழையன ஞாபகம் வந்தபோது அதை இப்படிச் சொல்லிக்கொண்டார்.

"அதென்னத்த கேக்கிறீங்க நவு.்.பர் ஹாஜி… அவனாலதான் சமது ஹாஜி யாருக்கு செரியான யோசின… அவன் வளத்த கொணத்த காட்டின…. பொடியன் கலியாணங்கட்டி ஈக்க புள்ளயும் அவட உம்மா வாப்பாவும் பொடியனுக்கு வைன் பண்ணி சொத்தில யெல்லாம் பங்கு கேக்கத் தொடங்கின….." இப்படிச் சொன்ன இர்.்.பான் ஹாஜியாருக்கு மூன்று மாதங்களுக்கு முன்புதான் சமது ஹாஜியாருடன் உரையாடிக்கொண்ட ஒரு விடயம் ஞாபகத்துக்கு வந்தது.



தென் மாகாணத்தில் கடந்த வருடம் வீட்டில் தனியாக இருந்த ஒரு வயோதிபப் பெண் குளிய லறையில் விழுந்து தலையில் காயமேற்பட்டு இறந்திருக்கின்றார். அயலவர்களின் சந்தே கமும், காவற்துறையினரின் புலனாய்வும் அந்தப் பெண் அவ்வாறு மரணிக்கவில்லை என்றும், அவளின் வளர்ப்பு மகனால் அடித்துக் கொலை செய்யப்பட்டாள் என்பதும் உறுதிப் படுத்தப்பட்டது.

பிள்ளைப் பாக்கியம் இன்றி இருந்த அந்தப் பெண்ணும் அவளது கணவனும் தீர்மானித்து ஒரு பையனை எடுத்து தமது பிள்ளையைப் போன்றே வளர்த்து, படிப்பித்து, அவனுக்கு தலைநகரில் ஒரு நடுத்தரக் குடும்பத்தில் திருமணமும் செய்து வைத்திருந்தனர்.

காலம் நகர்ந்துகொண்டிருந்தது, அவளது கணவரும் வயது மூப்பால் இறந்து விட்டார். தனியாக வாழ்ந்த வளர்ப்புத் தாயை அவளது வளர்ப்பு மகனும் தலை நகரிலிருந்து இடை யிடையே வந்து பார்த்துச் சென்றான்.

வளர்ப்புத் தாய் இறந்தால் அவள் வாழும் வீடும் பெறுமதியான காணியும் வளர்ப்பு மகனுக்குத்தான் உரித்தாகும் என்ற நிலையிலும் கூட பேராசையும், பொறுமையின்மையும் அவனை சோதித்துவிட்டன. அதன் பிரதிபலன்தான் அந்த வளர்ப்புத் தாயின் கொலை.

இச்சம்பவத்தை விளக்கிச்சொன்ன இர்பான் ஹாஜியார் "இந்த செய்தியும் சமது ஹாஜியார் தன்ட கண்ணுக்குப் பிறகு தன்ட பொஞ்சாதிக்கு தான் வளர்த்த மகன் ஏதும் இப்படிச் செய்து விடுவானோ எண்ட கவலையோடதான் இருந்தார்…" என்று நவு.்.பர் ஹாஜியாரிடம் சொல்லி கவலைப்பட்டுக்கொண்டார்.

"பாருங்களன் சமது ஹாஜியாருக்கு நடந்தீக் கத்த…. எல்லாருக்கும் ஒதவி ஒத்தாசை செஞ்ச மனிசன் எல்லியா….." நவு.்.பர் ஹாஜியாரின்

**வளர்ப்புத் தாய் இறந்தால் அவள் வாழும் வீடும் பெறுமதியான காணியும் வளர்ப்பு மகனுக்குத்தான் உரித்தாகும் என்ற நிலையிலும்கூட பேராசையும், பொறுமையின்மையும் அவனை சோதித்துவிட்டன. அதன் பிரதிபலன்தான் அந்த வளர்ப்புத் தாயின் கொலை.**

திடீரென மாறிய முகத்தோற்றமும் இலேசாக மேலும் கீழுமாக விரிந்த உதடுகளும் அவரது கவலையை வெளிப்படுத்தின.

“ரெண்டு மாசத்துக்கு முந்தி சமது ஹாஜி யாருக்கு சத்தியும் வயித்தாலயும் சேந்து போகச்செல்ல அவர நேசிங் ஹோமுக்கு அவா்ட காரில ஏத்தி கொண்டு போனதானே.. கார்ட பின் சீட்டில சமது ஹாஜியார் சத்தியெடுத்த எண்டு அவர் வளத்த மகன் பட்ட பாடு…”

இர்ஃபான் ஹாஜியாரின் மனைவி சென்ற மாதம் சமது ஹாஜியாரின் மனைவியோடு கதைத்த போது சமது ஹாஜியாரின் மனைவி இந்த சங்கதியையும் சொல்லிக் கவலைப்பட்டதாக நவ்ஃபர் ஹாஜியாரிடம் இர்ஃபான் ஹாஜியார் தெரிவித்த போது இருவரும் சேர்ந்து மீண்டும் கவலைப்பட்டுக்கொண்டனர்.

“மெல்ல எறக்கி எடுங்க…..”

“நீங்க அந்தப் பொக்கம் புடியுங்க …”

வைத்தியசாலையிலிருந்து கொண்டு வந்த மையித்தை இறக்கும்போது தொண்டர்கள் ஆரவாரப்பட்டு ஒரே களேபரமாயிருந்தது.

மையித்தை ‘அடிக்கழுவி’ வீட்டு முன் வராந்தாவில் வைப்பதற்காக பழைய இரும்புக் கட்டிலொன்றை கொண்டு வந்து வைத்ததும் கட்டிலின் கால் ஒன்று வராந்தா தரையில் பதிக்கப்பட்டிருந்த தரை ஓடுகளில் - ஃப்ளோர் டைல்ஸில் பட்டு ‘கிரீச்’ சப்தத்தை எழுப்பிற்று. இதைக் கவனித்த சமது ஹாஜியாரின் வளர்ப்பு மகன் பிஸ்கட் பக்கட்களை பொதிசெய்து வரும் பெட்டியொன்றை நான்காகக் கிழித்து அந்த ‘காட்போட்’துண்டுகளை – கடின அட்டைகளை கொணர்ந்து கட்டில்களின் நான்கு கால்களுக்கும் வைத்தான்.

“சே… இவன் என்ன மனுஷன்… இவ்வளவு சொத்து சேர்த்து சொகங் குடுத்த அவர்ட மையித்த, வெக்கிற கட்டில் கால்கள் பட்டு ‘ஃப்ளோர் டைல்ஸ்’ பழுதாகுமெண்டு என்ன பாடு படுகிறான். இந்த வளப்பு….” நாக்கை கடித்துக்கொண்டு மறுபக்கம் திரும்பிக்கொண்டார் நவ்ஃபர் ஹாஜியார்.

○○○

---

# உன் இடம் என்னிடம்!

தீப்பெட்டியே
என்னை மன்னித்துக் கொள்
உனக்கு
“இடம்” தந்ததற்கு

சிறுவயது முதலே
புகை கக்கும்
கோச்சியாய் இருந்த
சிகரெட் மீதும்
அதன்
துர்நாற்ற
புகை மீதும்
அத்தனை வெறுப்பெனக்கு

தொடுவதைக் கூட
பாவமாக்கிக் கொண்டவன்

அதனை
பற்ற வைக்கும்
கூட்டாளியாய்
உன்னைக் கண்டதால்

தீப்பெட்டியே
உன் மீது நான்
பற்று வைக்கவே இல்லை
என்றும்
உன்னிடம் மண்டியிடாத
எனது வலது கை

உன்னை ஸ்பரிசிக்கும்
போதெல்லாம்
இடகைத்தானே
முற்படுத்தினேன் –
வேண்டா வெறுப்பாய்

அப்போதெல்லாம்
என் கையில்
புழுக்கள் நெளிந்தன

இன்றும்
புகை கக்கும்
நண்பர்கள்
பகைவர்தான்–
என் இதயத்தில்

சிகரெட்டின் தோழனாய்
மட்டுமே
எண்ணியிருந்த உன்றன்
சரியான வகிபாகத்தை
கண்டு கொண்டது
பின்னாளில்தானே

பசியால்
மனிதன் வயிறெரியும்போது
நீர் வார்ப்பது
உன் நெருப்புதானே
என்ற உண்மை
என்னைச் சுட்டபோது
நீ
மனித குலத்தின்
தவிர்க்க முடியாத
தேவை
என்பதை
அறிந்து கொண்டேன்

அதனால்
தீப்பெட்டியே
இப்போது
என் இடமிருக்கும்
இதயத்தில்
உனக்கும்
இடமளித்திருக்கிறேன் !

**- என். நஜிமுல் ஹுசைன்**

# புராதன இலங்கை முஸ்லிம்கள் கல்வி கற்ற வழிமுறைகள்



லத்பான் றோஸின்
பேராதனைப் பல்கலைக்கழகம்

இன்று 21ம் நூற்றாண்டில் உலகம் தொழில்நுட்ப ரீதியாகவும் வர்த்தக மற்றும் கைத்தொழில் ரீதியாகவும் வியாபித்து வளர்ச்சி அடைந்துள்ளமையை நாம் காணலாம். இவ்வாறான துரித வளர்ச்சியும் வேகமும் உலகில் நிலை பெறுவதற்கு காரணம் உலக சனத்தொகை வெடிப்பு, நகராக்கம், அருமையான வளங்கள் போன்றன மனிதத் தேவைகளை மற்றும் விருப்பங்களை அதிகரிக்கச் செய்ததுடன் அதனை ஈடு கொடுக்கும் வகையில் மரபு ரீதியான கல்வி முறைகளில் புதிய மாற்றங்கள் கொண்டு வரப்பட்டு நவீன கண்டுபிடிப்புகளுடன் புதிய தொழில் விருத்திப் பாதைகள் கண்டெடுக்கப் பட்டன.

இலங்கையை பொறுத்தவரையில் பூகோள மயமாக்களிடாக உலக சமூக, பொருளாதார, அரசியல் மாற்றங்களின் செல்வாக்கு இலங்கை சமூகத் தளத்தின் அடிமட்டம்வரை காணப் படுவதுடன் குறிப்பாக வர்த்தகம் மற்றும் கல்வித் துறைகளை சீர்படுத்துவதில் முன் நிற்பதை நாம் காணலாம். எது எவ்வாறு இருந்தாலும் இலங்கை பல்லின சமயமும், மொழி பல்வகைமை கொண்ட நாடு என்ற வகையில் ஒவ்வொரு மனிதனின் அன்றாட செயல்பாடுகளில் குறிப்பாக அவனது சமூக, பொருளாதார, கல்வி போன்ற வற்றில் ஏதோ ஒரு அமைப்பில்தான் நம்பிக்கை கொண்ட சமய பாரம்பரியத்தின் தாக்கம் செல்வாக்கு செலுத்துவதை நாம் காணலாம்.

இதன் அடிப்படையில் இலங்கை முஸ்லிம் களின் பாரம்பரிய கல்வி ஊடகங்கள் பெரும் பாலும் சமய நெறிமுறைகள், தொன்மம் மற்றும் மரபுகளை உள்ளடக்கியதாக காணப்பட்டது என வரலாற்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர். கி.பி 7ம் நூற்றாண்டிலும் அதற்கு முன்னரும் இலங்கையில் வாழ்ந்த துலுக்கர், யவனர், அரேபியர், பட்டாணியர் என்பவர்கள் 8ம் நூற்றாண்டு அல்லது அதற்கு சற்று முன் இஸ்லாத்தை தழுவியதுடன் அவர்கள் முஸ்லிம்கள் என அழைக்கப்பட்டனர். இலங்கை யில் வாழ்ந்த இம் முஸ்லிம்களின் கல்வி வளர்ச்சி கி.பி 7ம் நூற்றாண்டு தொடக்கம் 14ம் நூற்றாண்டு வரை அதாவது போத்துக்கீசர் இலங்கை வருகை தரும் வரையுள்ள 8 நூற்றாண்டுகளில் பின்வரும் வழிமுறைகளின் ஊடாக வளர்ச்சி அடைந்தவையை நாம் காணலாம்.

- ஒஸ்தாதுகள் மூலம்
- ஸூபியாக்கள் மூலம்
- வைத்தியர்கள் மூலம்
- தென்னிந்திய ஆலிம்கள், லெப்பைகள் மூலம்
- மௌலானாமார்கள் மூலம்

**ஒஸ்தாதுகள் மூலம்**

இவ்வழிமுறை தென் கிழக்கில் வாழ்ந்த முஸ்லிம்களின் குறிப்பாக இந்தியா, இலங்கை முஸ்லிம்களின் கல்வியின் ஆரம்ப மட்ட வழிமுறை எனலாம். இக்கல்வி வாய்மொழி முறையாக மேற்கொள்ளப்பட்டதுடன் ஆசிரியர் கூறும் வார்த்தைகளை மாணவர்கள் மனமிட்டு மீண்டும் ஆசிரியரிடம் கூறும் கல்வி முறையாகக் காணப்பட்டது. ஒஸ்தாத் என்றால் கற்பிப்பவர் சொல்லிக் கொடுப்பவர், வழிகாட்டுபவர் என பொருள்படும். இவர் ஒரு ஆசிரியராக முஸ்லிம் சமூகத்தில் ஆற்றிய சேவைகள் பின்வருமாறு

- ஒருவன் இஸ்லாமியனாக நம்பிக்கை கொண்டிருக்க வேண்டிய ஈமானின் ஆறு கூறுகள் மற்றும் இஸ்லாத்தின் ஐந்து கடமைகளையும் சொல்லிக் கொடுத்தல்.
- பெருமானாரினதும் ஸஹாபாக்களினதும்

வாழ்க்கை வழிமுறை பற்றி கற்பித்தல்.

- அந்நிய சமூகத்தோடு தொடர்பு கொண்டு வாழும் போது பயன்படுத்த வேண்டிய நல் விழுமியங்களை கற்பித்தல்.
- தற்காப்பு கலைகளாக சிலம்படி, குஸ்தி விளையாட்டு முறைகளை கற்றுக் கொடுத்தல்.

**சூபியாக்கள் மூலம்**

நபி (ஸல்) அவர்களில் காலப்பகுதியில் சூபித்துவதிற்கான அடிப்படைகள் காணப் பட்டாலும் முறையாக உமையாக்களின் காலப் பகுதியில் இருந்து சூபித்துவம் வளர்ச்சி பெற்றது. பஸரா, கூபா, டமஸ்கஸ் போன்ற பகுதிகளில் சூபித்துவம் அறிவியல் ரீதியாக வளர்ச்சி பெற்றது எனலாம். இப்பகுதியில் இருந்த சூபியாக்கள் உலகின் பல பாகங்களுக்கும் இஸ்லாத்தை எத்தி வைத்தனர். இவர்களில் சிலர் பாவா ஆதம் மலையை தரிசிப்பதற்காகவும் மற்றும் வர்த்தக, சமூக தேவைகளுக்காகவும் குறிப்பாக இஸ்லாமிய மெய்ஞானம் (வஹ்தத்துல் வுஜூத்) நிலைநாட்டுவதற்காகவும் இலங்கைக்கு வந்தனர். இவ்வாறு வருகை தந்தவர்கள் சிலர் தென்கிழக்கிற்கு விஜயம் செய்து வாழ்ந்து மரணித்துள்ளமையை வரலாற்று ரீதியாக மற்றும் தொல்லியல் ஆவணங்களின் ஊடாக நாம் காண முடிகின்றது.

இதற்கு உதாரணமாக பின்வரும் இடங் களை அடையாளப்படுத்த முடியும்.

மல்கம்பிட்டி சிக்கந்தர் கலந்தர் வலி யுல்லாஹ் சியாரம்

கொண்டை வெட்டுவான் வீரையடி அப்பா அவுலியா ஸியாரம்

சம்மாந்துறை காட்டவுலியா சியாரம்

நித்தவூர் 40 முள அவ்லியா ஸியாரம்

காத்தான்குடி அப்துல் காதிர் பெரிய மௌலானா யமனி அவர்களின் ஸியாரம்

இவர்கள் ஆசிரியர்கள் என்ற வகையில் முஸ்லிம் சமூகத்திற்கு எவ்வாறான அறிவு ரீதியாக சேவைகளை ஆற்றினார்கள்.

- இறைவன் பற்றிய யதார்த்தமான கருத்துக் களை மக்களுக்கு முன் வைத்தனர்.
- மெய்ப்பொருள் ஒன்றே என்ற வஹ்தத்துல் வுஜூத் இறைஞானத்தை மக்களுக்கு போதித்தனர்.
- ஈமான், இஸ்லாம், இஹ்ஸான் போன்ற அறிவுகளை மக்களுக்கு அள்ளி வழங்கினர்.
- மனிதனின் மனவெழுச்சிகளை கட்டுப் படுத்துகின்ற வகையில் திக்ர் அவராத்களை வழங்கினர்.

சுருக்கமாக கூறினால் வாய்மொழிக் கல்வி யாக இருந்த முஸ்லிம்களின் கல்விமுறை சூபியாக்கள் மூலம் குரு - சிஷ்ய கல்வி முறையாக மாற்றமடைந்தது எனலாம்.

**மௌலானாக்களின் கல்வி மூலம்**

இஸ்லாமிய வரலாற்றில் உமைய அப்பாஸிய ஆட்சி காலப்பகுதியில் பெருமானாரின் குடும் பத்தைச் சேர்ந்தவர்கள் அதிகளவான இன்னல் கள் மற்றும் துன்புறுத்தவர்களுக்கு உள்ளாக்கப் பட்டனர். இதனால் அரபு தேசத்திலிருந்து பல அஹ்லுபைத்தினர்கள் அங்கிருந்து வெளியேறி உலகின் பல பாகங்களுக்கும் சென்றனர். இப்படி சென்றவர்கள் ஒரு சிலர் இலங்கைக்கு வருகை தந்தனர் இவர்களை இந்தியாவிலும் இலங்கையிலும் மௌலானாக்கள் என மக்கள் அழைத்தனர். இவர்களை மலையாளத்தில் தங்கள் என அழைத்தனர் இவர்கள் மூலம் தைக்காக்கள் எனும் ஆன்மீக கல்விக்கூடங்கள் உருவாக்கப்பட்டன. இக் கல்விக் கூடங்கள் மூலம் பின்வரும் அறிவுகளை முஸ்லிம் மக்களுக்கு போதித்தனர்.

- சரியான முறையில் அல்குர்ஆனை ஓத கற்பித்தனர்.
- ஹதீஸ்களை எழுதவும் விளங்கிக் கொள்ளவும் கற்பித்தனர்.
- சூபியாக்களை போன்று இறைவன் பற்றிய ஆழமான தத்துவங்களை பேசினர்.
- அரபு மொழி இலக்கணம், இலக்கிய நயம் போன்றவற்றை மக்களுக்கு போதித்தனர்.
- இஸ்லாமிய அடிப்படை கடமைகள் தொடர்பான பூரண வழிகாட்டல்களை அள்ளி வழங்கினர்.

**யூனானி வைத்தியர்கள் மூலம் கல்வி**

இஸ்லாமிய வரலாற்றில் பல தரீக்காக்கள் தோற்றம் பெற்று வளர்ச்சி அடைந்தன அதில் குறிப்பாக அப்துல் காதிர் ஜீலானி (ரஹ்) அவர்களால் தோற்றுவிக்கப்பட்ட காதிரிய்யஹ் தரிக்காவை சேர்ந்த சூபியாக்கள் மார்க்க பிரச்சா ரத்திற்காக இலங்கை, இந்தியா, மாலைதீவு

போன்ற நாடுகளுக்கு விஜயம் செய்தனர். அவ்வாறு இங்கு வந்தவர்கள் இலங்கை அரசின் நன்மதிப்பை பெறுவதற்காகவும் மக்களுக்கு சேவை வழங்குவதற்காக வும் தங்களோடு யூனானி வைத்தியத்தையும் அழைத்து வந்தனர்.

இவ் வைத்தியர்களில் சிலர் அரச மாளிகை யில் தங்கிவிட சிலர் நாட்டின் பல பாகங் களுக்கும் சென்று மக்களுக்கு வைத்திய சேவை செய்தனர். இப்படியாக வந்தவர்களில் சிலர் இந்த நாட்டின் தென்கிழக்கில் நிரந்தரமாக தங்கி விட்டனர். அவ்வாறு தங்கியவர்கள் உதார ணமாக கிழக்கிலே வைத்தியத்துறையில் ஆதிக்கம் செலுத்திய பிரபல பாச்சா - பரிகாரி பரம்பரையினரைக் குறிப்பிடலாம் பாச்சா என்ற சொல் பாதுஷா என்ற சொல்லின் திரிபாகும். இச்சொல் அரபுலகில் அரசனைக் குறிக்கும் சொல்லாக பயன்படுத்தப்படுகிறது. இவர்கள் மூலம் முஸ்லிம் சமூகத்தினர் பின்வரும் அறிவுகளை கற்றுக் கொண்டனர்

- கலன், அலீ இப்னு சீனா, ராஸி, போன்ற பிரதான வைத்தியர்களின் நூல் களில் உள்ள வைத்திய குறிப்புகளை பெற்றுக் கொண்டனர்.
- தமிழ் மொழி மூலம் வைத்திய குறிப்புகளை பெற முடிந்தமை
- அரபு தமிழ் மொழியை கற்றல் மொழியாக அறிமுகப்படுத்தியமை.

**தென்னிந்திய ஆலிம்கள், லெப்பைகள் மூலம்**

தென்னிந்தியாவிலிருந்து இலங்கைக்கு தொழில் தேடி வந்தவர்களில் மார்க்க பக்தி யுள்ள குர்ஆனை ஓதவும் எழுதவும் தெரிந்த வர்கள் தென்கிழக்கில் முஸ்லிம் கிராமங்களுக்கு வந்து பள்ளிவாயில்களில் கிஸ்மத் எனும் பள்ளி சேவைகளை செய்ய அமர்த்தப்பட்டனர். நேரத்துக்கு நேரம் தொழுகைக்காக அழைக்கும் பாங்கு ஒலித்தல், தொழுகை ஜமாத்தாக நடாத்துதல் பள்ளியை துப்புரவாக வைத்திருத் தல், ஊர் கடமை செய்தல் என்பவற்றோடு காலை யிலும் மாலையிலும் பிள்ளைகளுக்கு குர்ஆனை ஓதி கொடுத்தல் எழுத கற்றுக் கொடுத்தல் என்பன அவர்களது கடமைகளாக இருந்தன.

இலங்கை முஸ்லிம்கள் ஆரம்ப காலங்களில் கல்வியைப் பெற்றுக் கொண்ட வழிமுறையை சுருக்கமாக நாம் கருதினால் அவை மரபு ரீதியான வழிமுறைகளாக இருந்தாலும் சமய நெறிமுறைகளில் இருந்து விடுபடாமல் உலக அறிவையும் பெறக்கூடிய முறையில் வடிவமைக்கப்பட்டிருந்ததை விசேட அம்சமாக நாம் காணக்கூடியதாக இருந்தது.

❍❍❍

## வரலாற்றை மறக்காதீர்

– குமாரசூரியர் யர்சன்

வரலாறு
மனித இனத்தினுடைய அடையாளம்
அன்று
ஊனை இழந்து
உரிமை இழந்து
உறவை இழந்து
ஏன்
உடைமை கூட இழந்து
வரலாற்றை மறந்து நின்றோம்
இன்று
என் மொழி அழிந்து
என் இனம் அழிந்து
என் வரலாறும் அழிந்து
கட்டிக்காக்க யாரும் இல்லை என்று
கலங்கி நிற்கின்றோம்
இறந்த காலம் விட்டுச் சென்ற சுவடுகளை
மறக்குமா நெஞ்சம்
காலங்கள் ஓடி மறைத்தாலும்
காயப்பட்ட மனம் அதை மறுக்குமா?
ஒளியால் சுடர்விடும் நம் வரலாற்றை
நெஞ்சில் சுமந்து சொல்லுங்கள்
காலம் கடந்து நிற்கும் சான்றுகள் அவை
வருங்கால தலைமுறைக்கு
எடுத்துச் சொல்லுங்கள்
புதிய தேசம் கட்ட
பழைய நம்பிக்கையை அளிக்காதீர்
பிழைத்தும் போராடிய
வரலாற்றை மறக்காதீர்
அதுதான் நமது பாதை

இருவாச்சி பூக்கள் மலர்ந்து சிரித்துக் கொண்டிருந்தன. வானத்தில் சூரியன் தனது கிரணங்களைச் சுருட்டிக் கொண்டு கோபத்தோடு சிவந்த முகத்தைக் காட்டினான். குயில்கள் தங்களது வாலை ஆட்டிக் கொண்டு புங்க மரத்தின் கிளைகளில் அமர்ந்து ராகம்போட்டுப் பாடிக் கொண்டிருந்தன. அந்த பாட்டுக்கு எதிர்பாட்டுப் பாடுவதுபோல் எஸ்.பி.பியின் ‘தேன்சிந்துதே வானம் எனை உனைத் தாலாட்டுதே’ பாடல் அருகிலிருந்த வீட்டில் ஒலித்துக் கொண்டிருந்தது. மைனாக்கள் தங்கள் ஜோடியோடு நடைபோட்டுக் கொண்டிருந்தன. இனிய மாலையின் அழகில் பூங்கொடிக்கு மனம் லயித்துப் போயிருந்தது. தோட்டத்தை விட்டு வெளியே வந்தாள்.

வீட்டின் முகப்பில் நாற்காலியில் அமர்ந்திருந்த இளம்பரிதி அன்று மகளிர் தினம் என்பதால் தன்னுடைய உறவினர்களுக்கும் தன்னுடைய பெண் தோழிகளுக்கும் வாழ்த்துத் தெரிவித்திருந்தான். ஸ்டேட்டஸ் வைப்பதிலும் பெண்களின் பெருமைகளைப் பேசும் வகையில் அவன் வைத்திருந்தது பலரைக் கவர்ந்தது. தனது மனைவி பூங்கொடியை,

“ஏய் பூங்கொடி இன்னிக்கு நைட்டுக்கு என்ன சமையல்” என்றான்.

“தோசை தாங்க” என்றவுடன்

“இந்த எழவெடுத்த தோசைய என்னைக் குத்தான் விடப்போற”

“என்னால இன்னிக்கு வேற எதுவும் பண்ண முடியாதுப்பா. மூணு நாள் எனக்கு முடியாதுன்னா அட்ஜஸ் பண்ணிக்கிட்டா என்னப்பா”

“உனக்கு என்னைக்குத்தான் முடிஞ்சிருக்கு” என்று சலித்துக் கொண்டான். பூங்கொடிக்கும் இளம்பரிதிக்கும் திருமணமாகி பன்னிரெண்டு ஆண்டுகளாகிவிட்டது. ஒரு பையனும் இருக்கிறான். இளம்பரிதிக்கு அவன் என்ன நினைக்கிறானோ அதன்படிதான் மனைவி சமைப்பதிலிருந்து டிரெஸ் செய்வதுவரை செய்யவேண்டும். இல்லாவிட்டால் அன்று சண்டைதான். மறுநாள் இளம்பரிதி தனது நண்பன் முகிலன் வீட்டுக்குச் சென்றிருந்தான். முகிலனின் அண்ணன் அரவிந்தனின் மனைவி புற்றுநோய் காரணமாக நோய்வாய்ப்பட்டுத் திடீரென்று இறந்துபோனாள். அவரைப் பார்த்தவுடன் வருத்தப்பட்ட பரிதி,

“அண்ணா எத்தனை நாளைக்கு இப்படியே இருப்பீங்க. சீக்கிரம் இன்னொரு திருமணம் செஞ்சிக்கோங்க. வாழ்க்கையில ஒரு பிடிப்பு வேணாமா” என்றவுடன்

“இன்னிமே என்ன இருக்கு வாழ்க்கையில என் பொண்ண படிக்கவச்சுக் கரையேத்துணா போதாதா?” என்றார். வருத்தத்துடன் விடை பெற்ற பரிதி தனது நண்பனிடம் வற்புறுத்தி அண்ணனுக்குச் சீக்கிரம் திருமணம் செய்ய வேண்டும் என்றான். அதன்பிறகு ஆறு மாதங்களில் பெற்றோர் வற்புறுத்தலால் அரவிந்தன் மறுமணம் செய்து கொண்டார்.



ஒரு நாள் இளம்பரிதியின் அக்காள் உமையாள் போன் செய்து தனது மகனுக்கு வயது இருபத்தி ஆறு ஆவதால் திருமணம் செய்ய முடிவெடுத்திருப்பதாகவும் பெண்பார்க்க தாய்மாமன் நீயும் மனைவியோடு வாடா என்றாள். மிக்க மகிழ்ச்சியோடு இருவரும் மறுநாள் அதிகாலையிலேயே கிளம்பி மதுரை சென்றனர். பெண் பார்த்தவர்களுக்குப் பெண்ணை மிகவும் பிடித்துப் போனது. இருப்பினும் வீட்டிற்குப் போய் சொல்லி அனுப்புகிறோம் என்று சொல்லி புறப்பட்டு வந்தனர்.

உமையாள் வீட்டிற்குள் நுழைந்தவுடன் தனது தம்பி இளம்பரிதியை நோக்கி,

''டேய் தம்பி பொண்ணு எப்படியிருக்கு? குடும்பம் பிடிச்சாருக்கா? என்ன நினைக்கிறீங்க?'' என்றாள்.

''இல்லக்கா. இந்தக் குடும்பம் நமக்குச் சரிப்பட்டு வராது. பொண்ணோட அக்கா, கணவரை இழந்து இரண்டாம் திருமணம் செய்திருக்கு. இது நம்ம குடும்பத்துக்குச் சரியா வருமா? எனக்கு விருப்பமில்ல'' என்றான்.

''இதுல என்னடா இருக்கு? இதெல்லாம் சகஜம்தானே. கணவனை இழந்து கொஞ்சவயசா இருக்கிறதாலதான இரண்டாம் திருமணம் செஞ்சிருக்காங்க. அதோடு பொண்ண எனக்கு ரொம்ப பிடிச்சிருக்கு'' என்றாள்.

''அப்ப சரி உனக்கும் மருமகனுக்கும் பிடிச்சிருந்தா பண்ணுங்க. என் விருப்பத்த ஏன் கேட்கறே?'' என்று கோபமாகச் சொல்லிவிட்டு வீட்டுக்குள் சென்றான்.

''தம்பி கோவிச்சிக்கிட்டான் போல. மத்தவங்க விருப்பத்தையும் சொல்லுங்க'' என்றாள். பூங்கொடி உடனே,

''மதினி எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு. முதல்ல மருமகனுக்கும் அண்ணனுக்கும் பிடிச் சிருக்கான்னு கேளுங்க'' என்றாள். உமையாள் உடனே,

''சந்தோசம்பா நீயும் உன் வீட்டுக்காரனாட்டம் பிடிக்கலைன்னு கோவிச்சுக்கிட்டுப் போயிருவி யோன்னு பார்த்தேன்'' என்றவள், தன் கணவனைத் திரும்பிப் பார்த்து,

''நீங்க என்ன சொல்றீங்க'' என்றாள்.

''மாப்பிள்ளை சொல்றத நினைச்சா எனக்கும் யோசனையாத்தான் இருக்கு. இரண்டாம் திருமணம் செஞ்சிக்கிற வீட்ல பொண்ணெடுத்தா ஏதாவது பேசமாட்டாங்களா?'' என்றான்.

''நீங்க எந்தக் காலத்துல இருக்கீங்க? இது இருபத்தியோராம் நூற்றாண்டு. இப்பப் போய் பொண்ணுன்னா இரண்டாம் கல்யாணம் பண்ணக்கூடாதுன்னு சொல்றது எந்த விதத்துல நியாயம்? ஆம்பளைன்னா மட்டும் பொண்டாட்டி செத்து ஒரு வருசத்துல புதுமாப்பிள்ளைன்னு சொல்றாங்களே? இங்க ஆணுக்கு ஒரு நியாயம். பொண்ணுக்கின்னா ஒரு நியாயமா?'' என்று முடித்தாள்.

''மதினி பேசாம இருங்க. அத்தை, மாமாட்ட கேட்டு முடிவு பண்ணுங்க. அவசரப்படவேண்டாம்'' என்று முடித்தாள் பூங்கொடி. உமையாள் கிராமத்தில் இருக்கும் அவளின் அம்மா, அப்பாவிடம் விவரம் சொல்லிப் பேசியவுடன் அவர்களும் மருமகனுக்கும் பிடிக்காமல் மகனுக்கும் பிடிக்காமல் இந்தப் பெண் வேண்டாம் வேறு பெண் பாருங்கள் என்றனர். ஒருவாறு மணம் செய்யும் மாப்பிள்ளைக்குப் பிடித்திருந்தும் பார்த்த பெண்ணை வேண்டாம் என்று முடிவு செய்தனர்.

இந்நிகழ்வு முடிந்து ஊருக்குத் திரும்பி வந்த இளம்பரிதியிடம் சாவகாசமாக நாற்காலியில் அமர்ந்த பூங்கொடி,

''ஏங்க உங்களிடம் ஒண்ணு கேட்டா தப்பா எடுத்துக்கிடமாட்டீங்களே?'' என்றாள்.

''சொல்லு'' என்றவனிடம், ''ஏம்பா அரவிந்தன் அண்ணனுக்கு மட்டும் வயதுக்கு வந்த பெண்ணி ருந்தும் இரண்டாம் திருமணம் வற்புறுத்தி செஞ்சு வச்சீங்க. ஆனா நாம பாத்த பெண்ணோட அக்காவுக்கு வயது முப்பதுதான் இருக்கும். அந்தப் பொண்ணு மட்டும் இரண்டாம் கல்யாணம் செஞ்சுகிட்டா என்ன தப்பு?'' என்று சாட்டையால் அடிப்பதுபோல் கேட்டாள். உடனே முகம்மாறிய இளம்பரிதி,

''இப்படி தேவையில்லாம பேசறதாலதான் உன்னைய எனக்குப் பிடிக்கமாட்டேங்குது. சனியனே! எனக்குத் தலைய வலிக்குது. முதல்ல காப்பி போட்டுக் கொண்டுவா. உன்னையப் பேசவிடுறதே தப்பு'' என்று எரிந்த விழுந்தவனிடம் மேலே பேசமாட்டாது அடுக்களைக்குள் நுழைந்து கொண்டாள் பூங்கொடி. அவளது நினைவுகளும் அடுக்களை வெப்பத்திலேயே மடிந்துபோயின.

❍❍❍

# எழுதத் தூண்டும் எண்ணங்கள்...





பேராசிரியர்
துரை.மனோகரன்

**விதம் விதமான வேடதாரிகள்**

நமது நாடு எப்போது பார்த்தாலும் பரபரப்பாகவே இருக்கிறது. அந்தளவுக்கு முந்நாள், இந்நாள் அரசியல்வாதிகள், அதிகாரிகள், சமய வேடதாரிகள் நாட்டைக் குட்டிச்சுவராக்கி வைத்துள்ளார்கள். புதிய ஆட்சியாளர்கள் தேர்தல் நேரங்களில் வாயில் வந்த வாக்குறுதிகளை எல்லாம் மக்கள் முன் அள்ளி வீசிவிட்டு, ஒரு வருடம் கழிந்தும், முக்கியமான எவற்றையும் நிறைவேற்ற முடியாமலும், முயலாமலும், பலவற்றை நிறைவேற்றிவிட்டது போல் பாசாங்கு செய்து கொண்டிருக்கின்றனர். தமிழர் பிரச்சினைகளை ஆட்சியாளர் கண்ணெடுத்தும் பார்ப்பதில்லை. கண் துடைப்புக்கான சில முயற்சிகளை மட்டுமே மேற்கொண்டுவருகின்றனர். பேரினவாதத்தை உள்ளடக்கிய ஆட்சிமுறையைப் பக்குவமாகச் செய்து கொண்டிருக்கின்றனர். சிவப்புச் சாயம் மக்களை ஏமாற்றுவதற்கு நன்றாகவே பயன்படுத்தப்படுகிறது. தற்போதைய ஆட்சியாளர்களைப் பொறுத்தவரை, முன்னைய ஆட்சியாளர்களை விடப் பரவாயில்லை ரகம் என்று மட்டும் சொல்லக்கூடியதாக இருக்கிறது.

நாட்டில் முன்னாள் ஆட்சியாளர்கள் எத்தனையோ பேர் இருக்கிறார்கள். ஆனால், ராஜவம்சம் மாத்திரம், தான் மட்டும் தான் இந்நாட்டின் முன்னாள் ஆட்சி நிறுவனம் போல் போக்குக் காட்டி வருகிறது. முன்னாள் ஆட்சியாளர் எல்லோருக்கும்தான், முன்னர் அவர்களுக்கு இருந்த வரப்பிரசாதங்கள் ஒழிக்கப்பட்டிருந்தன. ஆனால், ராஜவம்சம் மாத்திரம், ஏதோ தனக்குத் தான் நடக்கக் கூடாதது எதுவோ நடந்துவிட்டதைப் போல் 'ஷோ' காட்டிக் கொண்டிருக்கிறது. இந்நாட்டில் ராஜவம்சம் ஒன்றுதான் தேசப்பற்றுள்ள வம்சம் என்பதைப் போல் நாடகம் ஆடிக்கொண்டிருக்கிறது. அதன் நாடகங்களை ரசிப்பதற்கு என்றும் ஒரு கூட்டம் நாட்டில் இருக்கிறது. ராஜவம்சத்தைச் சேர்ந்த முன்னாள் முக்கியஸ்தர் ஒருவர், தாம் இழந்த "பெருமையை" மீண்டும் நிலைநாட்டப் படாத பாடு பட்டுக்கொண்டிருக்கிறார். நாள்தோறும் வேலை மினக்கெட்டு வரிசையாக வரும் உதவாக்கரைகளை அவர் சந்தித்து அனுதாபம் தேடிக்கொண்டிருக்கிறார். ஆசியாவின் கிழக்குப் பிராந்தியத்தில் இருக்கும் பெரிய நாடு ஒன்றின் தூதுவர், முன்னாள் முக்கியஸ்தரைச் சந்தித்து. தமது நட்புறவைப் புலப்படுத்தியிருக்கிறார். போதாக்குறைக்கு, அந்நாடு, முன்னாள் முக்கியஸ்தரைத் துன்புறுத்த வேண்டாம் என்று அழுத்தம் திருத்தமாக நாட்டின் இன்றைய ஆட்சியாளர்களுக்குப் பரிந்துரை செய்திருப்பதாகவும் சொல்லப்படுகிறது. இவர்களும் சிவப்புச் சாயம் பூசிக்கொண்டிருப்பதால், அவர்களுக்குக் கட்டுப்படவேண்டிய நிர்ப்பந்தத்தில் இருப்பதாகத் தோன்றுகிறது. தனது பக்கத்து நாடு முன்னாள் முக்கியஸ்தருக்குச் சாமரம் வீசினால், நமது அயல்நாடு சும்மா இருக்குமா? அயல்நாட்டின் தூதுவரும் முன்னாள் முக்கியஸ்தரைச் சந்தித்துக் குசலம் விசாரித்துக்கொண்டார். குசலம் விசாரிப்பதோடு நிறுத்திக்கொண்டாரா அல்லது கிசுகிசுவென இரகசியம் பேசிக்கொண்டார்களா தெரியவில்லை.

ராஜவம்சத்தின் இளவரசரோ பரிதாபத்திலும் பரிதாபம்! எப்போதும் சிறுபிள்ளைத்தனமாக எதையாவது உளறிவைப்பது, அவருக்குக் கைவந்த கலை. அவரை ஒரு 'பேபி' யாகவே எல்லோரும் பார்க்கிறார்கள். அவருக்கு என்று கொள்கை கோட்பாடு என எதுவும் இல்லை. இந்த இலட்சணத்தில் இவர் தான் நாட்டின் எதிர்கால முக்கியஸ்தர் என்று அவரும், அவரைச் சார்ந்தவர்களும் கனவு கண்டு கொண்டிருக்கிறார்கள். ராஜவம்சத்தின் வளவில் புல்மேயும் "குட்டி" ஆடு ஒன்று, ஒருபடி மேலே போய், எதிர்காலத்தில் இளவரசர் நாட்டின் முக்கியஸ்தர் ஆகும்பொழுது, தான்தான் நாட்டின்

உத்தியோகப்பற்றற்ற முக்கியஸ்தர் என்று பலத்துக் கத்திக்கொண்டது. அதன் தான்தோன்றித் தனமான கத்தலைக் கேட்ட ராஜவம்சத்தைச் சார்ந்தவர்களும், அவர்களது விசிலடிச்சான் குஞ்சுகளும் தற்போது அந்தக் குட்டி ஆடு கண்டபடி புல் மேய்வதைத் தடுத்துக் கொண்டிருக்கின்றனர்.

நாட்டின் முன்னாள் முக்கியஸ்தர்களுக்கான வரப்பிரசாதங்கள் நீக்கப்படுவது தொடர்பான சட்டமூலம் உயர்சபையில் கொண்டு வரப்பட்ட போது, எதிரணியில் உள்ள தமிழ் அரசியல் வாதிகளில், ஒருவர் மட்டுமே அச்சட்டமூலத்தை ஆதரித்து வாக்களித்தார். அவரது துணிச்சலும், நேர்மையும் பாராட்டத்தக்கன. அவரை எதிர்க்கும் அரசியல்வாதிகளும், பிறரும், அவருக்குப் ''பைத்தியக்காரர்'' என்று பட்டம் சூட்டி, தமது பைத்தியக்காரத்தனத்தைப் பகிரங்கமாக வெளிப்படுத்தி வருகின்றனர். ''வீடுகளில்'' வசிப்பவர்களோ, ''சைக்கிளில்'' ஓடித் திரிபவர்களோ, ''சங்கு'' ஊதுபவர்களோ, யாருமே வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாமல், முன்னாள் முக்கியஸ்தர்கள் தொடர்பான தமது நன்றியுணர்வினை மிக நன்றாகவே வெளிப்படுத்தினர். எதிரணியைச் சேர்ந்த மலையக அரசியல் வாதிகளும் அப்படி ஒன்றும் நன்றிகெட்டுப் போய்விடவில்லை. எதிரணி முஸ்லிம் அரசியல் வாதிகள் மட்டும் நன்றியுணர்வில் என்ன குறைந்தவர்களா? அவர்களுக்கும் நன்றியுணர்வு மிக அதிகம். இவர்களைத்தான் தமிழ் மக்களும், முஸ்லிம் மக்களும் தலையில் தூக்கிவைத்துக் கொண்டாடிக் கொண்டிருக்கிறார்கள்!

## வாழ்க வளர்கவே!

இலங்கையின் மூத்த வானொலியாகத் திகழ்வது, இலங்கை வானொலி. அது தனது நூற்றாண்டு நிறைவைக் கொண்டாடுகின்றமை, மகிழ்ச்சியை ஏற்படுத்துகிறது. எனது ஆறு வயதில் இருந்தே இலங்கை வானொலியின் ஒரு நேயராக நான் ஆகத்தொடங்கிவிட்டேன். கணிசமான காலம்வரை, இலங்கை வானொலியே இந்நாட்டின் தனித்துவம் மிக்க வானொலியாக விளங்கி வந்துள்ளது. எனது சிறுவயதில், அதன் வர்த்தகசேவை காலை பத்து மணி முதல் பதினொரு மணிவரையும், மாலை ஒலிபரப்பு பிற்பகல் மூன்று மணி தொடக்கம் ஐந்து மணி வரைக்கும் இடம் பெற்றதாக ஞாபகம். வர்த்தக சேவையின் முடிசூடாமன்னனாக அப்போது அமரர் எஸ்.பி. மயில்வாகனன் விளங்கினார். அவரது குரலைக் கேட்பதே மனத்துக்கு மிக மகிழ்ச்சியைத் தரும். அவர் துணிச்சலாகக் கருத்துகளை வெளிப்படுத்தும் பாங்கும் என்னைக் கவர்ந்திருந்தது. தேசியசேவையைத் திருப்பினால், அவரது மனைவி செந்தில்மணி மயில் வாகனனின் செய்தி வாசிப்பு என்னைக் கவரும். காலப்போக்கில் பல புதியவர்களும் இணைந்து, இலங்கை வானொலியை வளர்க்கத் தொடங்கினர். இலங்கை வானொலி இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனமாகப் புதிய பரிமாணம் எடுத்த பின்னர். தமிழ்ச்சேவையின் நேரமும் அதிகரிக்கப்பட்டது. அக்காலத்தில் அழகான தமிழைக் கேட்கவேண்டும் என்றால், அது இலங்கை வானொலிதான் என்ற நிலை இருந்தது.

இலங்கை வானொலியோடு எனக்கும் நீண்ட காலத் தொடர்பு இருந்துவந்துள்ளது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறையில் நான் தற்காலிக விரிவுரையாளராகக் கடமையாற்றிய காலம் (*1975 – 1978*) முதல் எனக்கும், இலங்கை வானொலிக்கும் இடையே தொடர்புகள் வளரத் தொடங்கின. உரைகள் நிகழ்த்திய தோடு, பிரதிகள் வாயிலாகவும் நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டுள்ளேன். முக்கியமாக ஜோர்ஜ் சந்திரசேகரன் காலத்தில் கலைக் கோலம் நிகழ்ச்சியில் சில முழு நிகழ்ச்சிகளையும் செய்துள்ளேன். சிவாஜி கணேசன், கண்ணதாசன், பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் ஆகியோர் பற்றியும், திரைக்கு வந்த நாட்டார் இலக்கியம் என்ற தலைப்பிலும் இவ்வாறு முழு நிகழ்ச்சிகளை நான் செய்துள்ளேன். எனது மெல்லிசைப் பாடல்கள் சிலவும் இலங்கை வானொலியில் ஒலிபரப்பாகியுள்ளன. இலங்கை வானொலி பற்றி அதிக தடவைகள் நான் எழுதிவந்துள்ளேன். அதன் முன்னாள் தமிழ்ச்சேவைப் பணிப்பாளர் சிவராஜாவின் வேண்டுகோளுக்கு இணங்க, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச்சேவை ஒன்றுக்குத் 'தென்றல்' என்ற பெயரினை நான் வழங்கியமையையிட்டுப் பெரிதும் மகிழ்ச்சி அடைகிறேன்.

தனது நூற்றாண்டு நிறைவில் அடியெடுத்து வைக்கும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், மேன்மேலும் வளர்ச்சி பெற்றுச் சிறந்தோங்க என் நல்வாழ்த்துகளைத் தெரிவிப்பதில் நான் பேருவகை அடைகின்றேன்.

❍❍❍

# சமகால கலை இலக்கிய நிகழ்வுகள்



**கலாபூஷணம்**
**கே.பொன்னுத்துரை**

**டென்மார்க் கணேஷா நாட்டிய ஷேத்ரம், தமிழ்நாடு இனிய நந்தவனம் இணைந்து நடத்திய முப்பெரும் விழா.**



உலகத் தமிழர்களின் நல்லாதரவுடன் தமிழ்நாட்டின் திருச்சிராப்பள்ளியிலிருந்து கடந்த 28 ஆண்டுகளாக வெளிவருகின்ற இனிய நந்தவனம், மக்கள் மேம்பாட்டு மாத இதழ் ஆகும்.

இந்த செப்டம்பர் மாத இதழானது டென்மார்க் சிறப்பிதழாக வெளிவந்துள்ளது. டென்மார்க் நாட்டின் தமிழ்மொழி, கலாசாரம், நாட்டியம், ஆன்மீகம், மற்றும் தமிழர்களின் வாழ்வியல் போன்ற ஆக்கங்களுடன் வெளிவந்துள்ள இவ்விதழின் வெளியீட்டு விழா கடந்த (18.09.2025 வியாழக்கிழமை) கொழும்புத் தமிழ்ச்சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் வாழ்நாள் பேராசிரியர் வ. மகேஸ்வரன் அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

இவ்விழாவில் கடந்த ஐம்பது வருடங்களுக்கு மேலாக தமிழ் இலக்கிய, இசை, சமூகசேவை போன்ற பணியினைசெய்து வரும் நிறைபணிச் செம்மல் ஆழ்வாப்பிள்ளை கந்தசாமிக்கு நந்தவனம் பவுண்டேசன் வழங்கும் “தமிழ்மாமணி” விருதும், டென்மார்க் கணேசா நாட்டிய ஷேத்ரம் நிறுவனர், திருமதி சசிதேவி அவர்களின் கலை, இலக்கியம், நாட்டியம் மற்றும் சமயம் ஆகிய துறைகளில் ஆற்றிவரும் கலைச்சேவையை பாராட்டி “மாண்புறு தமிழர்” விருதும் வழங்கப்பட்டன. தினகரன் வாரமஞ்சரி பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர் உட்பட பலரும் வாழ்த்துரைகளை வழங்கினார்கள். நாட்டிய நிகழ்வுகளும் நடைபெற்றன.

○ ○ ○

**கலாநிதி உடப்பூர் பா.முருகானந்தன்**

## கொண்டாட்டங்கள்– விபரீதங்கள்

பல வகையான கொண்டாட்டங்களை
இந்த பூமி சந்தித்துள்ளதே
சுதந்திர தினத்திலே
துப்பாக்கியை தப்பாக
பயன்படுத்தி சுட்டு
கொண்டாடியதில் பலரும்
இறந்தும் காயமுற்றனரே!
மத இன ரீதியான களியாட்டங்களில்
பெற்றோலை தப்பாக ஊற்றி
நடனம் ஆடியதிலும் பலரும்
எரி காயங்களுக்கு உள்ளானரே!

## வேட்டையும் யுத்தமும்

பழங் காலம் முதலே
மனித குலம் தோன்றியதில்
இருந்தே ஆயுதம் ஏந்தி
வேட்டை ஆடுவதிலும்
ஒருவருக்கொருவர் யுத்தம்
செய்வதிலும் கைதேர்ந்தவர்கள்
என்பதை நிரூபித்துக் கொண்டே
இன்றும் இருக்கின்றனரே!
அழிவது இயற்கை உயிர்களும்
தன் இனமும் தான் என்பதை
அறிந்தே செய்கின்றனரே!




ஞானம் 304 ஆம் இதழ் கிடைக்கப்பெற்றேன். மிக்க நன்றி. இதழின் 9 ஆம் பக்கத்தில் பிரசுரிக்கப் பட்டுள்ள கதிர்காமம் எனும் தலைப்பிலான கட்டுரை பயன் மிக்கதாக அமைந்துள்ளது. இதனை வாசித்தபின் என் மனதில் உருவான எண்ணங்களை வாசகர்களுடன் பகிர்ந்துகொள்ள விழைகின்றேன். கி.மு. 3ஆம் நூற்றாண்டில் இலங்கையில் முதன்முதலாக பௌத்த மதம் பரப்பப்பட்டது. ஆயினும் அக்காலத்தில் சிங்கள மொழி உருவாகியிருக்கவில்லை. கிறீஸ்துவுக்குப் பிற்பட்ட காலத்திற்றான் பாளி மொழியில் இருந்து சிங்களம் உருவானது. சிங்கள மொழி உருவாக ஆயிரக் கணக்கான வருடங்களுக்கு முன் கதிர்காமம் என்று அழைக்கப்பட்ட தமிழ் ஊரில் குடிகொண்டிருந்த முருகன் எவ்வாறு கத்தறகம தெய்யோ என்று சிங்களத்தில் அழைக்கப்பட்டிருக்க முடியும்? சிங்கள மொழி தோன்றிய பின்னரே கத்தறகம தெய்யோ என்ற பெயர் உருவாக்கப்பட்டிருக்கும் என்பது வெளிப்படை. தம்பலகாமம், கந்தளாய், பன்குளம், மணலாறு போன்ற இடப்பெயர்கள் முறையே தம்பலகமுவ, கந்தலே, மொறவாவ, வலிஓய என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது போலவே சிங்கள பௌத்த மக்கள், கதிர்காம முருகனை கத்தறகம தெய்யோ என்று அழைக்கும் வழக்கம் உருவானது என்பதே எனது கருத்தாகும்.

**– கலைமாமணி கா. தவபாலன், தம்பசிட்டி.**

❍ ❍ ❍

கவிஞர் சு.முரளிதரன் மொழிபெயர்ப்பு செய்து இருந்த ஜப்பான் நாட்டு கதையை இன்று தபாலில் வந்த ஞானம் சஞ்சிகையில் வாசித்து விட்டு பெருமூச்சு விட்டேன்.

அணுகுண்டு என்ற மகா கொடிய உயிர் அழிக்கும் மிகப்பயங்கரமான வெடிப்பு எவ்வளவு ஆழமான தாக்கத்தை வாழ்க்கையில் தருகிறது என்ற பயத்தை இந்த கதை தந்தது. ஒரு வலி ஏற்படுத்திவிட்ட கதை.

அந்த கதை வாழ்க்கை வெறுமையானதை மட்டும் அல்ல, ஒரு இயந்திரதனத்தைக்கூட சொல்கிறது. அணு வெடிப்பு எவ்வளவு ஆழமான பாதிப்பை தருகிறது என்பதை தனிப்பட்ட வாழ்க்கை கொண்டு பேசிய அழகிய கதை... மற்றும் வலியை தந்த கதை... அந்த நாட்டின் வரலாறை ஒரு தனிப்பட்ட வாழ்க்கைமூலம் இந்த கதை மிகவும் அழகாக பதிவு செய்கிறது.

அந்த கதை மொழிபெயர்ப்பு போல இல்லை... முரளி சேர் எழுதிய கதை போலவே இருந்தது. இன்று நாள் முழுவதும் கதை நினைவில் வந்தபடி இருந்தது.

**– மாரி மகேந்திரன், பொகவந்தலாவ.**

❍ ❍ ❍

ஞானத்தில் தற்போது புதியவர்கள் பலரின் ஆக்கங்கள் பிரசுரமாவது மகிழ்வாக உள்ளது. கடந்த இதழில் வெளியான யே. கிறித்துவறாஜாவின் "வீசப்பட்டவை" என்ற சிறுகதை நன்றாகவுள்ளது. சு. முரளிதரன் மொழிபெயர்த்த "கதிரவன் எழுகை" என்ற கதையும் என்னைக் கவர்ந்தது. சு. முரளிதரனின் மொழிபெயர்ப்பானது சிறப்பாகவுள்ளது. மூலக்கதையைப் படிப்பது போன்ற உணர்வை அவரின் மொழிபெயர்ப்பு ஏற்படுத்தியது.

**– தேவமுகுந்தன்**

❍ ❍ ❍

# அரச இலக்கிய விருது - 2025

**‘சாகித்திய ரத்னா’ விருது : அல்லாஜ் அஸ்ஃமத்**

| | | |
|---|---|---|
| 01. | சுய நாவல் இலக்கியம் | **உதிர்கனா**<br>- தாட்சாயணி (பிரேமினி பொன்னம்பலம்) |
| 02. | சுய சிறுகதை தொகுப்பு | **தற்கொலை குறித்து ஓர் உரையாடல்**<br>- அ. வா. முஹ்சீன் |
| 03. | சுய கவிதை இலக்கியம் | **வேரினை நோக்கிய விழுதுகள்**<br>- நாக. சிவசிதம்பரம் |
| 04. | சுய சிறுவர் இலக்கியம் | **அம்புலி**<br>- அ. பௌநந்தி |
| 05. | சுய புலமைத்துவ மற்றும் ஆய்வுசார் படைப்பு | **பிராந்திய காலநிலையியல்**<br>- நாகமுத்து பிரதீபராஜா |
| 06. | சுய நானாவிதம் | **நூலக தகவல் விஞ்ஞானத்தில் சுட்டியாக்கம்**<br>- முஹம்மட் மஜீட் மஸ்றூபா |
| 07. | சுய இலக்கிய திறனாய்வு | **சொற்களால் நிலம் கடந்தவர்கள்**<br>- ஹாயத்திரி சண்முகநாதன் |
| 08. | அறிவியல் புனைகதை | **மாயாவாதம்**<br>- அமரசிங்கம் குமணன் |
| 09. | சுய பாடலாக்கம் | **மெட்டுப்போடு**<br>- பாலமுனை பாறூக் |
| 10. | மொழிபெயர்ப்பு சிறுகதை இலக்கியம் | **கழுதை மனிதன்**<br>- அஷ்ரஃப் சிஹாப்தீன் |
| 11. | மொழிபெயர்ப்பு நானாவித இலக்கியம் | **உரோமப் பேரரசன் மார்க்கஸ் அரேலியசின் சுயதியானங்கள்**<br>- மாரிமுத்து பிரகாஷன் |
| 12. | மொழிபெயர்ப்பு புலமைத்துவ ஆய்வு | **சாதியமும் அதன் பன்முக வெளிப்பாடுகளும்**<br>(இலங்கை வடபுலத்தின் சாதியமுறை குறித்து ஓர் ஆய்வு)<br>- லறீனா அப்துல் ஹக் |






ஜீவநதி சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் க. பரணீதரன், ஜீவநதி சஞ்சிகையின் 265ஆவது இதழை, ஞானசேகரன் சிறப்பிதழாக வெளிக்கொணர்ந்துள்ளார். ஈழத்துத் தமிழ்ச் சஞ்சிகைகளுக்கிடையில் காணப்பெறும் ஆரோக்கியமான நட்புறவை மீண்டும் வலியுறுத்துவதாக ஜீவநதியின் இவ்வெளியீடு அமைந்துள்ளது. இ. இராஜேஸ்கண்ணன், திக்குவல்லை கமால், ஈழக்கவி, தாமரைச்செல்வி, சி.ரஞ்சிதா, பாலமுனை பாறூக், கொற்றை பி. கிருஷ்ணானந்தன், ஆதிலட்சுமி சிவகுமார், கெக்கிராவ ஸுலைஹா, கே.எஸ்.சுதாகர், கௌசி, புலோலியூர் வேல்.நந்தகுமார், ச.முருகானந்தன், இ.சு. முரளிதரன் ஆகியோரின் கட்டுரைகள் ஞானம் கலை இலக்கியச் சஞ்சிகை ஸ்தாபகர், சாஹித்யரத்னா ஞானசேகரனின் எழுத்து முயற்சிகளான நாவல், சிறுகதை, பயணக்கட்டுரை, இலக்கியக் கட்டுரை மற்றும் நேர்காணல்கள் சார்ந்த முயற்சிகளை எடுத்துக்காட்டியுள்ளன. இத்தகு இதழை வெளிக்கொணரவேண்டும் எனும் சிந்தனைக்கும் செயற்பாட்டிற்கும் ஞானம் சஞ்சிகை அன்புடன் நன்றி பாராட்டுகின்றது.

GNANAM - Registered in the Department of Post of Sri Lanka under No. DOP/News/16/2025

**மரபுரிமைகளைப் பறைதல் – பாக்கியநாதன் அகிலன் (2025)**




மரபுரிமைகள் பற்றிய அக்கறை அருகியுள்ள நிலையில், யாழ்ப்பாணப் பண்பாட்டின் மரபுரிமைச் சின்னங்கள் பற்றிய அறிமுகம், பிரக்ஞை, காப்பதற்கான அருட்டுணர்வு, புதிய நோக்குகள் என்பனவற்றை 67 பத்திகளில் ஆசிரியர் தொகுத்துள்ளார். மரபுரிமை சின்னங்கள் பற்றிய அசட்டை, குறுகிய நலன்களுக்காக அவற்றைப் பயன்படுத்தல், அவற்றின் அழிவைக் கண்டும் காணாதிருத்தல் ஆகிய மனநிலைகளைக் கண்டிக்கும் உணர்வு நூலில் இழையோடுகின்றது.
“யுத்தமும் காலமும் தின்றதுபோக, எஞ்சியவற்றையாவது அடுத்த தலைமுறைகளுக்காகப் பாதுகாப்போம்” என்பது ஆசிரியரின் அறை கூவலாகின்றது. கனமான முயற்சி.




**பதுளை துங்ஹிந்த சாரலில் ஒரு ‘ஜில்’ – மானா மக்கீன் (2025)**

தமிழ்நாடு - அருப்புக்கோட்டையில் பிறந்த கே.கே.எஸ். ஜில் சுல்தான் (1905 – 1979) அவர்களுக்கு ஈழத்து பதுளை வசிவிடமாகியது. பீடா வெற்றிலைக்கூர் விற்றதால் அவர் ‘ஜில்லுக்காரர்’ என அழைக்கப்பட்டார். கொலை, இழப்பின் பரிதாபம், இயற்கை அழிவு, விபத்து, மாமி – மருமகள், இஸ்லாமிய மார்க்கம் ஆகிய பாடுபொருள்களில் 19 நாட்டார் சிந்து நூல்களை ஜில் எழுதியுள்ள செய்தியை இந்நூலின் வாயிலாக அறியமுடிகிறது. பீடா விற்றவாறு முச்சந்தி இலக்கிய வகையைச் சார்ந்த சிந்துப் பாடல்களைப் பாடிய ஜில், “மலையக கொலைச் சிந்து இலக்கியத்தின் தனி நாயகன்” என்று அடையாளப்படுத்தப் படுகின்றார். ஜில் பற்றிய குறிப்புகளைத் தொகுத்திருக்கும் இந்நூல் வரவேற்கத்தக்க முயற்சி.




**பிஞ்சு மனம் (சிறுகதைகள்) – வெலிகம ரிம்ஸா முஹம்மத் (2024)**

18 சிறுகதைகளை உள்ளடக்கி ஆசிரியரின் 15ஆவது நூலாக இந்நூல் வெளிவந்துள்ளது. சிறுவர் கதைகளை ஏலவே நூல்களாக வெளியிட்டுள்ளபோதும் இது ஆசிரியரின் முதலாவது சிறுகதைத் தொகுதி என்பது குறிப்பிடத்தக்கது. ஈழத்துப் போர்ச்சூழல் சமுகத்தில் ஏற்படுத்திய பாதிப்புகள், இயற்கை அனர்த்தம், வறுமை, சீதனக் கொடுமை, சிறுவர் உளவியல், ஆன்மிகம், மனிதநேயம் போன்றன இக்கதைகளின் கருப்பொருள்களாக அமைந்துள்ளன. புதுவரவு.

## கிடைக்கப் பெற்றவை...

ISSN 2478-0340

PRINTED BY UNIE ARTS (PVT) LTD., COLOMBO 13. TEL: 011 2330195